
# CHENNAI IAS ACADEMY™

The Best Academy For Competitive Exams

# TNPSC Current Affairs July 2019






www.chennaiiasacademy.com

Follow us -

#5, Old Bypass Road, National Theatre,
Next to Ambiga Petrol Bunk, Vellore– 632 004.
Contact : 9043211311 / 9043211311
Vellore & Tiruvannamalai

# நடப்பு நிகழ்வுகள் -ஜுலை 2019


| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | தமிழக நிகழ்வுகள் | 3 |
| 2. | தேசிய நிகழ்வுகள் | 11 |
| 3. | சர்வதேச நிகழ்வுகள் | 43 |
| 4. | பொருளாதார நிகழ்வுகள் | 56 |
| 5. | பிரபலமானவர்கள், விருதுகள் | 61 |
| 6. | விளையாட்டு நிகழ்வுகள் | 64 |
| 7. | முக்கிய தினங்கள் | 70 |

## தமிழ்நாடு நிகழ்வுகள்

### ➢ பாரம்பரிய பூங்கா - தமிழ்நாடு:

- சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்கள் உட்பட பல்வேறு பூர்வீக மரங்கள் மற்றும் தாவரங்களை வெளிக்காட்டும் சொந்தப் பாரம்பரியத் தோட்டத்தை சென்னை மாநகரமானது பெறவுள்ளது.
- இந்தத் தோட்டமானது சென்னையில் வண்ணாரப் பேட்டையில் அமைக்கப்படவுள்ளது.
- இது தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ளது.
- சென்னை வண்ணாரப்பேட்டையில் 5 ஏக்கர் நிலத்தில் ரூ.70 லட்சம் செலவில் விரைவில் பாரம்பரிய தோட்டம் அமைக்கப்படவுள்ளது. இந்தத் தோட்டத்தில், சங்க இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள மரங்கள் மற்றம் செடிகள் இடம்பெறவுள்ளன. இம்மாத இறுதிக்குள் இந்தத் தோட்டத்தை அமைக்க தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்தத் தோட்டத்தில், 100 வகையான மரங்கள், செடிகள், சிறு தோட்டம், உள் நீர்ப்பாசனம் ஆகியவை இடம்பெறும்.

### ➢ சென்னை சென்டரலில் 'எட்ஜ் பாஸ்ட்'தொழில் நுட்பம்:

- தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக சென்னை எம்.ஜி.ஆர் மத்திய இரயில் நிலையத்தில், பழைய குற்றவாளிகளை கண்காணிப்பு கேமரா மூலம் அடையாளங்காணும் அதிநவீன 'எட்ஜ் பாஸ்ட்' தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- கடவுச்சீட்டு அலுவலகங்களில் சிறந்த சேவைக்கான நடுவணரசின் விருதை கோயம்புத்தூர் மண்டல கடவுச்சீட்டு (Passport)அலுவலகம் பெற்றுள்ளது.

### ➢ தமிழ்நாட்டின் மாநில வண்ணத்துப்பூச்சி:

- தமிழ்நாட்டின் மாநில வண்ணத்துப்பூச்சியாக 'தமிழ் யாமோன்'(Cirrochroa Thais)அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலைகளை வாழிடமாகக் கொண்டுள்ள இந்த வகை வண்ணத்துப்பூச்சிகள் 'தமிழ் மறவன்' அதாவது 'போர் வீரன்' என அழைக்கப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் 32 வகை வண்ணத்துப்பூச்சி இனங்களுள், அடர் - பழுப்பு நிறத்திலான வெளிப்புறம் வளையத்துடன் கூடிய மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருக்கும் இந்த வகை வண்ணத்துப்பூச்சிகளும் ஒன்றாகும்.
- இதன்மூலம், மாநிலத்திற்கென வண்ணத்துப்பூச்சியை அறிவிக்கும் நாட்டின் ஐந்தாவது மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது. மாநிலத்துக்கென வண்ணத்துப்பூச்சியை (Blue Mormon)அறிவித்த முதல் மாநிலமாக மகாராஷ்டிர மாநிலம் உள்ளது. அதைத்தொடர்ந்து உத்தரகாண்ட் (Common Peacock),கா்நாடகா (Southern Bird Wing)மற்றும் கேரளா (Malabar Banded Peacock)ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இத்தகைய அறிவிப்புக்கு மாநில முத்திரை (திருவில்லிப்புத்தூா் ஆண்டாள் கோபுரம்), மாநில விளையாட்டு (கபடி) மற்றும் மாறி பிறகு, இந்த வண்ணத்துப்பூச்சியானது மாநில அரசின் பெருமையாக மாறும் அதேவேளையில், இம்முடிவு அதன் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க உதவுகிறது மற்றும் சூழல் சுற்றுலாவுக்கும் வழிவகுக்கிறது.
- தமிழ்நாட்டில் மொத்தம் 32 வண்ணத்துப்பூச்சி உயிரின வளமிகு இடங்கள் (Hotspots)உள்ளன. மாநில விலங்கு (நீலகிரி வரையாடு), மாநிலப்பறவை (மரகதப் புறா), மாநில மரம் (பனை), மாநில மலா் (செங்காந்தள்), மாநிலப்பழம் (பலா ல நடனம் (பரத நாட்டியம்) முதலிய சின்னங்களை தமிழ்நாடு மாநில அரசு முன்பே அறிவித்துள்ளது.

➢ **உலக முதலீட்டாளர் மாநாட்டில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி, புதிய நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் K.பழனிசாமி அடிக்கல் நாட்டினார்:**

- **காஞ்சிபுரம் மாவட்டம்** - ஓரகடத்தில் டிபிஜ காம்போசைட்ஸ் நிறுவனம், சுங்குவார்சத்திரத்தில் மகேந்திரா எம்.எஸ்.டிசி நிறுவனம், இருங்காட்டுக்கோட்டையில் சக்தி ஸ்டீல் நிறுவனம், ஸ்ரீபெரும்புதூர் சமுத்திரப்பேடு கிராமத்தில் சன் எஸ்டேட்ஸ்.
- **திருவள்ளூர் மாவட்டம்** - கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் பிர்லா குழுமத்தின் ஹைடெக் கார்பன் நிறுவனம், மாவட்ட தனியார் தொழிற்பூங்காவில் மகேந்திரா ஸ்டீல் சர்வீஸ் மையம், பெரியபாளையத்தில் காளீஸ்வரி நிறுவனத்தின் புதிய பயோடீசல் உற்பத்தி ஆலை.
- **நாமக்கல் மாவட்டம்** - பள்ளிபாளையத்தில் மோதி ஸ்பின்னர்ஸ், லக்கி வேவ்ஸ் நிறுவனம்.
- சேலம் வாழப்பாடி,ஈரோடு கோபிசெட்டிபாளையம், கோவை மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் எஸ்.பி.நிறுவனத்தின் நூற்பாலைகள், ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனம்.
- **கோயம்புத்தூர் மாவட்டம்** - சின்னவேடம்பட்டி பகுதியில் கிருஷ்ணவேணி கார்பன் நிறுவனத்தின் சீல், பேரிங்குகள் உற்பத்தி ஆலை.
- **திருவண்ணாமலை மாவட்டம்** - சிப்காட் தொழிற்பூங்காவில் வேல்போ மெட்டல்ஸ்.
- **வேலூர்மாவட்டம்** - இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் கால்வனோ டிராக்.
- **கிருஷ்ணகிரி மாவட்டம்** - சிப்காட் பூங்காவில் இரங்கநாயகி நிறுவனத்தின் காகித உற்பத்தி ஆலை.

➢ **மிதிவண்டி பகிர்வு திட்டம்:**

- புதுச்சேரி பொலிவுறு நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வரும் ஓரிரு மாதங்களில் மிதிவண்டி பகிர்வு திட்டத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய பிரதேச அரசு முடிவு செய்துள்ளது. பதிவுசெய்த பயனர்கள், மிதிவண்டிகளைப் பயன்படுத்தி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நெடுஞ்சாலைப் பகுதிக்குள் செல்லாம். பயன்படுத்திய பின், மிதிவண்டிகளை எந்தவொரு நிறுத்தகத்திலும் விடலாம். இதற்கென 100 மிதிவண்டித்துறைகள் (Docking Station)அடையாளங் காணப்பட்டுள்ளன.
- தொடக்கத்தில், கடற்கரை உலாப்பகுதி, பாரதி பூங்கா, காந்தி திடல், ஆரோபிந்தோ ஆசிரமம் மற்றும் இரயில் நிலையம் போன்ற இடங்களில் தலா 10-15 மிதிவண்டிகளுடன் 20 துறைகள் அமைக்கப்பட உள்ளன. புதுச்சேரிக்கு வரும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளுக்கு இப்புதுமையான திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும், வார இறுதிநாட்களில் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அங்கு பல்லாயிரங்களாக உயர்கின்றன. புதுச்சேரி பொலிவுறு நகர திட்டத்தின் 22 முன்னுரிமைத் திட்டங்களில் இந்தத் திட்டமும் ஒன்றாகும். இதற்காக சுமார் 194 கோடி ரூபாய் செலவிடப்படும்.

➢ **‘Dial for Water 2.0’என்ற திட்டம்:**

- சென்னை மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் கிடைக்க ‘Dial for Water 2.0’என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப்புதிய திட்டத்தின் மூலம், காத்திருப்புக் காலம் எந்த நிலையிலும் 48 மணி நேரத்தைத் தாண்டாது. குடிநீர் விநியோகித்த காலத்திலிருந்து 7-10 நாட்களுக்குப் பிறகே மீண்டும் அடுத்த முன்பதிவைச் செய்ய இயலும்.
- தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியானது ரூ.2.50 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

➢ **சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் - மலைப் பாம்புகள்:**

- நாட்டில் முதல்முறையாக, பவானி சாகருக்கு அருகில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் வனக் கால்நடைப் பிரிவில் உள்ள 10 மலைப் பாம்புகளுக்கு தொலை அளவியல் சாதனங்கள் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

- மோயாறு நதிப் பள்ளத்தாக்கில் விடப்பட்டுள்ள இந்த மலைப் பாம்புகள் துறைசார்ந்த குழுக்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- இது அருகிவரும் நிலையில் உள்ள உயிரினமான பாம்புகளை அதன் வாழ்விடப் பகுதியில் வைத்தேப் பாதுகாப்பதற்கான ஒரு முயற்சியாகும்.
- முதுமலைப் புலிகள் காப்பகத்தல் 10 மலைப் பாம்புகளும் இதே போன்று கண்காணிக்கப்படுகின்றன.

➢ **ஸ்டார்ட் அப் இந்தியா பட்டியல்:**

- தொழிற்சாலை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்த வர்த்தகத் துறை அமைச்சகத்தின் தகவலின்படி 1,004 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுடன் தமிழ்நாடு 7-வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தில்லி ஆகியவை முறையே 3661, 2847 மற்றும் 2552 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுடன் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஏஞ்சல் வரி, அறிவுசார் சொத்துரிமையின் தீவிர கண்காணிப்பு மற்றும் இதரச் சலுகைகள் உள்ளிட்ட பயன்களை எளிதில் பெற முடியும்.

➢ **நீலக் கொடி கடற்கரைச் சோதனைத் திட்டம்:**

- நீலக் கொடி கடற்கரைச் சோதனைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மகாபலிபுரம் கடற்கரையைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ளது.
- தற்பொழுது வரை உலகம் முழுவதும் ஏறத்தாழ 4,000 நீலக் கொடித் திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- தற்பொழுது இந்தியாவில் ஒடிசா மற்றும் குஜராத் மாநிலங்களில் 2 "நீலக் கொடி" சான்றளிக்கப்பட்ட கடற்கரைகள் உள்ளன.

➢ **10வது உலகத் தமிழ் மாநாடு:**

- 10-வது உலகத் தமிழ் மாநாடானது சிகாகோவில் ஜூலை 04 முதல் 08 வரை நடத்தப்பட்டது.
- இதன் 9-வது பதிப்பானது மலேசியாவின் கோலாம்பூரில் 2015 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியை சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சிச் சங்கமானது ஏற்பாடு செய்திருந்தது.
- இந்நிகழ்வானது முதன்முறையாக இந்த ஆண்டு அமெரிக்காவில் நடத்தப்பட்டது.
- வட அமெரிக்காவின் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பானது "கீழடி நம் தாய் மடி" (கீழடி அகழ்வாராய்ச்சி - நம் தமிழ்த்தாயின் மடி) எனும் கருத்துருவில் கவனம் செலுத்த இருக்கின்றது. மேலும் இதனை அச்சங்கம் மறைந்த தமிழறிஞர் ஜி.யு போப்பின் 200 ஆம் பிறந்த நாளில் அவருக்குச் சமர்ப்பிக்க உள்ளது.
- பழமையில் புதிய வரலாற்றியியல் முறை, அறிவியல் பூர்வமான மற்றும் ஒப்பீட்டு ஆய்வு, தமிழ் மொழி, இலக்கியம், கலாச்சாரம், நாகரீகம், நவீன இலக்கியம் மற்றும் தமிழ்க் கணினி முறை ஆகியவை இம்மாநாட்டின் ஒட்டுமொத்த கருத்துருக்களாகும்.
- இந்தக் கருத்துருவானது கீழ்க்காணும் 8 ஆய்வுகளின் அடிப்படையிலானது.
    - பாரம்பரியமான தமிழ் இலக்கியம் (சங்க இலக்கியம்)
    - பண்டையத் தமிழ் நாகரீகம்,
    - தொல்காப்பியம்,
    - திருக்குறள்,
    - தமிழ் அறிஞர்களின் பங்களிப்புகள்,
    - தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள்,
    - நவீன தமிழ் இலக்கியம் மற்றும்,
    - தமிழ் மொழி மற்றும் மொழியியல்.

## PMJAY -தமிழ்நாட்டின் கோரிக்கைகள்:

- ஆயுஷ்மான் பாரத் - பிரதம மந்திரி ஜன் ஆரோக்கியா திட்டத்தின் (Ayushman Bharat - Pradhan Mantri Jan Arogya Yojana - AB - PMJAY)கீழ் நிதிக் கோரிக்கை கோரப்பட்ட தொகையில் தமிழ்நாடானது இரண்டாம் இடத்தில் உள்ளது.
- ஏறக்குறைய 641 கோடி ரூபாய்க்கான கோரிக்கையுடன் குஜராத் மாநிலம் பட்டியலின் முதலிடத்திலும் 399 கோடி ரூபாய்க்கான கோரிக்கையுடன் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் உள்ளது.
- AB - PMJAYஎன்பது மத்திய அரசின் முதன்மை சுகாதாரத் திட்டமாகும்.
- ஒட்டுமொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ்நாடு நான்காவது இடத்தில் உள்ளது.

## IIRSIமாநாடு 2019:

- 2019ஆம் ஆண்டிற்கான இந்திய உள்விழி வைப்புகள் மற்றும் ஒளிவிலகலுக்கான சங்கத்தின் (IntraocularImplant and Refractive Society of India - IIRSI)வருடாந்திர மாநாட்டை சென்னையில் முதல்வர் துவங்கி வைத்தார்.
- இந்நிகழ்ச்சியானது மிகவும் சவாலான கண்புரைச் சிகிச்சைக் காணொளிகளைத் திரையிடும் “கண்சிகிச்சை பிரீமியர் லீக்” எனும் நிகழ்வைக் கண்டது.

## புதிய நடைமுறை:

- தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனமானது மாநிலத்தில் உள்ள 7 கோடி மக்களுக்கும் ஒரு தனித்துவமான “மக்கள் எண்” எனும் அடையாள எண்ணை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- இதன் மூலம் ஆதார் எண் மறைக்கப்பட்டு மக்கள் எண் எனும் பிழையேற்படுத்த முடியாத எண் பயன்படுத்தப்படும்.
- இந்தத் தகவல்கள் மின்னணு முறையில் தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொருக்கும் தனித்தனியாக உருவாக்கப்பட்டுள்ள குடிமக்கள் பெட்டகத்தை அடையும்.
- குடிமக்கள் அவர்களின் கைபேசி எண்ணைப் பயனாளர் குறியீடாகவும் ஒருமுறை பயன்படுத்தும் கடவுச் சொல்லையும் பயன்படுத்தித் தங்கள் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை தங்கள் பெட்டகத்தில் காணலாம்.
- குடிமக்கள் தகுதி பெறும் போது ஒவ்வொரு துறை அல்லது நிறுவனங்களின் மென்பொருள்களின் தொடர் சங்கிலி (நம்பிக்கை இணையம்) தொழில்நுட்பமானது சான்றிதழ்களை உடனடியாக வழங்கும்.
- பிறப்புச் சான்றிதழ் முதல் இறப்புச் சான்றிதழ் வரை பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகவர் நிறுவனங்களுக்கு இடையில் வழங்கப்பட்ட ஏராளமான சான்றிதழ்கள் / ஆவணங்கள் தானாகவே குடிமக்கள் பெட்டகத்தில் சேமிக்கப்படும்.

## தமிழ் மொழியில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு:

- இந்திய உச்ச நீதிமன்றம் தமிழ், கன்னடம் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட வட்டார மொழிகளில் தனது தீர்ப்புகள் குறித்த நகல்களின் முதலாவது தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- தற்போது தீர்ப்புகள் உருது, தெலுங்கு, அஸ்ஸாமி, ஹிந்தி, கன்னடம், மராத்தி, ஒடியா, வங்காள மொழி, மற்றும் தமிழ் ஆகிய ஒன்பது பிராந்திய மொழிகளில் கிடைக்கப் பெறுகின்றன.
- இது இந்தியாவின் பிராந்திய மொழிகளில் தீர்ப்புகளின் பிரதிகளை வெளியிடும் நீதிமன்ற முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாகும்.
- தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட 2 உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் 18-07-2019 அன்று உச்ச நீதிமன்ற இணைய தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

- அவையாவன:
  - ராஜகோபால் (சரவண பவனின் நிறுவனர்) மற்றும் மற்றவர்கள் எதிர் தமிழ்நாடு அரசு
  - ஜோசப் ஈஸ்வரன் வாப்ஷேர் எதிர் ஷிர்லே காத்லீன் வீலர்

## ➢ இரண்டு புதிய மாவட்டங்கள்:

- திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைப் பிரித்து தென்காசி மற்றும் செங்கல்பட்டு ஆகியவற்றைத் தலைநகராகக் கொண்டு இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கையானது 35 ஆக உயரும்.
- இதற்கு முன்பு 2019 ஆம் ஆண்டு ஜனவரி அன்று கள்ளக்குறிச்சி 33-வது மாவட்டமாக உதயமானது. இது விழுப்புரம் மாவட்டத்திலிருந்துப் பிரிக்கப்பட்டது.

## ➢ தமிழ்நாட்டில் மகப்பேற்று இறப்பு விகிதம்:

- தமிழ்நாட்டில் மகப்பேற்று இறப்பு விகிதம் (MMR - Maternal Mortality Rate)6 புள்ளிகள் குறைந்திருக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டு மாநில சுகாதார மேலாண்மைத் தகவல் அமைப்புத் தரவின்படி,MMRபுள்ளி 1 இலட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 66-லிருந்து 60 ஆகக் குறைந்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டில் 1 இலட்சம் குழந்தைகளுக்கு 70க்குக் கீழே MMR-ஐ கொண்டு வரும் நீடித்த வளர்ச்சி இலக்கினை 2014-16 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடு எட்டியுள்ளது.
- இந்தியாவின் மகப்பேற்று இறப்பு விகிதம் 130 ஆக உள்ளது.

## ➢ MMRபற்றி:

- மகப்பேற்று இறப்பு என்பது குழந்தைப் பிறப்பு அல்லது கருத்தரித்தலின் போது ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக ஏற்படும் இறப்புகளைக் குறிக்கின்றது.
- இது ஓராண்டில் 1 இலட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு இறக்கும் பெண்களின் எண்ணிக்கையாகும்.

## ➢ கழிவுகள் எரிப்பு உலை:

- சென்னையின் முதலாவது திடக் கழிவுகள் எரிப்பு உலை மணலியில் அமைக்கப்படவிருக்கின்றது. இதனை அடுத்து மாதாவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் இந்த உலை அமைக்கப்படவிருக்கின்றது.
- சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத தூய கார்பன் சாம்பலை உருவாக்குவதற்காக இந்தக் கழிவுகள் எரிக்கப்படவிருக்கின்றன.
- இது நடைபாதை தளபரப்புத் தொகுதிகள் மற்றும் இதர கட்டுமானப் பொருட்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

## ➢ ஆரணி பட்டு:

- மத்திய அரசு ஆரணிப் பட்டுப் புடவைகளை ஊக்குவிப்பதற்காகக் கைத்தறி சந்தை உதவித் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- ஆரணிக்கு அருகில் உள்ள சென்னை உள்ளிட்ட சிறு நகரங்கள் மற்றும் பெரு நகரங்கள் ஆகியவற்றில் "பட்டு மார்க் கண்காட்சியை" இந்தியக் சில்க் மார்க் அமைப்பு மூலம் மத்தியப் பட்டு வாரியம் நடத்திக் கொண்டிருக்கின்றது.
- ஒரு ஆரணிப் பட்டின் சிறப்பம்சம் அதன் ஓரத்தில் அமைந்த "தாழம்பூ" என்ற கலைப் பண்புக் கூறாகும்.

## ➢ தமிழ்நாடு தினம்:

- ஆண்டுதோறும் நவம்பர் 01 ஆம் தேதி தமிழ்நாடு தினமாகக் கொண்டாடப்படும் என விதி எண் 110-ன் கீழ் தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் அறிவித்தார்.
- 1956 ஆம் ஆண்டின் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன.
- இது நவம்பர் மாதம் 01 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.

## ➢ பெண் குழந்தைகளைக் காப்போம், கற்பிப்போம் திட்ட பிரச்சாரத் தூதுவர்:

- திருவள்ளூர் மாவட்டத்திற்கான பெண் குழந்தைகளைக் காப்போம் பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டத்திற்கான பிரச்சார தூதுவராக வேண்டா எனும் பெண்ணை அம்மாவட்ட ஆட்சியர் மகேஸ்வரி ராஜ்குமார் நியமித்துள்ளார்.
- ‘வேண்டா’திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்தவராவார்.
- மூன்றாவது பெண் குழந்தையாக பிறந்த இவருக்குப் பிறகு மேலும் பெண் குழந்தைகள் பிறப்பதை விரும்பாமல் இவருக்கு வேண்டா என இவரின் பெற்றோர்கள் பெயரிட்டனர்.
- சமீபத்தில் ஒரு ஜப்பான் நிறுவனமானது தங்கள் நிறுவனத்திற்கு வருடத்திற்கு 22 லட்சம் ரூபாய் சம்பளத்தில் இவரை வேலைக்குத் தேர்ந்தெடுத்துள்ளது.

## ➢ சங்கீத கலாநிதி விருதுகள்:

- மதராஸ் இசை அகாடமியானது, சங்கீத கலாநிதி, சங்கீத கலா ஆச்சார்யா, டி.டி.கே விருது, இசைக் கலைஞர் விருது, நிருத்ய கலாநிதி ஆகிய விருதுகளைப் பெறுவோர்களின் பெயரை அறிவித்துள்ளது.
- சங்கீதா கலாநிதி விருதானது மதராஸ் இசை அகாடமியால் கர்நாடக இசைக் கலைஞருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதாகும்.

## ➢ தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம்:

- தமிழ்நாடு சட்டசபையானது, மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 6-லிருந்து 9 ஆக உயர்த்துவதற்கான மசோதாவை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது தலைவரைத் தவிர்த்து மற்ற உறுப்பினர்களைக் குறிக்கும்.
- “மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் சிறுபான்மையினர் நலம்” ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ➢ தண்ணீருக்கு அழையுங்கள் 2.0 திட்டம்:

- சென்னைப் பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியமானது தண்ணீருக்கு அழையுங்கள் 2.0 எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன்மூலம் நுகர்வோர் முன்பதிவு செய்ததிலிருந்து 2 நாட்களுக்குள் நீர் கிடைக்கப் பெறுவர்.
- மேலும் இத்திட்டத்தின் கீழ் உறுதியளிக்கப்பட்ட தேதியில் நிச்சயமாக நீர் வழங்கலைப் பெறுவர்.
- சென்னை மெட்ரோ தண்ணீர் லாரிகள் நாளொன்றிற்கு நகரம் முழுவதும் நீர் விநியோகத்திற்கென 12000 பயணங்களை மேற்கொள்கின்றன. இவற்றில் 2500 பயணங்கள் தண்ணீருக்கு அழையுங்கள் திட்டத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

## ➢ தமிழ்நாட்டில் நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்:

- தமிழ்நாடு அரசு நீர்ப் பாதுகாப்பிற்காகப் புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

### ➢ தமிழ்நாடு நீர் வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர் அதிகரிப்புத் திட்டம்:

- இத்திட்டத்தை மக்களின் இயக்கமாக மாற்றுவதற்கு ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் “தீவிரமான ஒரு வார காலப் பிரச்சாரம்” ஒன்று தொடங்கப்படவிருக்கின்றது.
- இத்திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்நிலைகளின் திறன் அதிகரிப்பு, அவற்றின் பாதுகாப்பு ஆகியவை மேற்கொள்ளப் படவிருக்கின்றன.
- கிராமங்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களில் நீர் பாதுகாப்பு ஆணையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

### ➢ நடந்தாய் வாழி காவிரி:

- இது நீர் மாசுபாடுகளிலிருந்து காவிரி நதியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ➢ கொடைக்கானல் மலைப் பூண்டு:

- புவிசார் குறியீட்டுப் பதிவுத் துறையானது கொடைக்கானல் மலைப் பூண்டிற்கு புவிசார் குறியீட்டு அடையாளத்தை வழங்கியுள்ளது.
- இந்தப் பூண்டு வகையானது, தனது மருத்துவ மற்றும் பாதுகாப்புப் பண்புகளுக்காகப் பெரிதும் அறியப்படுகின்றது.
- இது பெரும்பாலும் வெள்ளை அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்தைக் கொண்டுள்ளது.
- உயரமான மலை, மூடுபனி சார்ந்த நிலை மற்றும் கொடைக்கானல் மண் ஆகியவை அதன் மருத்துவப் பண்புகள் மற்றும் கெடாமல் நீண்ட நாட்கள் சேமித்து வைத்துப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்குக் காரணமாகின்றன.
- தமிழ்நாட்டில் பூண்டானது காரிப் பயிர் (ஜுன் - ஜுலை) மற்றும் ராபிப் பயிர் (அக்டோபர் - நவம்பர்) வகையாக இருக்கின்றது.

### ➢ தமிழ்நாடு மருத்துவமனைகள் தினம் - ஜுலை 30:

- தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள் ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பிறந்த தினமான ஜுலை 30 ஆம் தேதியை “மருத்துவமனை தினமாக” அனுசரிக்கவிருக்கின்றன.
- புதுக்கோட்டையைச் சேர்ந்த இவர் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டின் புகழ்பெற்ற பெண் மருத்துவர்களில் ஒருவராக விளங்கினார். இவர் தமிழ்நாடு மாநிலத்தின் முதலாவது பெண் சட்டசபை உறுப்பினர் ஆவார்.
- மேலும் இவர் 1954 ஆம் ஆண்டில் சென்னை அடையாறு புற்றுநோய் மையத்தையும் நிறுவியுள்ளார்.
- பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை நிதிகளை அளிக்கும் அரசு சாரா நிறுவனங்கள், நன்கொடையாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் பெரு நிறுவனங்களைப் பாராட்டுவதோடு மருத்துவமனைகளால் வழங்கப்படும் சேவைகளை விளம்பரப்படுத்துவதற்காகவும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1956 ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு பத்ம பூசண் விருது வழங்கி கௌரவித்தது.
- இவருடைய புத்தகம்: சட்டமன்ற உறுப்பினராக எனது அனுபவங்கள்.
- தேவதாசி முறையை ஒழிக்கும் சட்டத்தின் பின்னணியில் இருந்த முக்கியமான நபர் இவராவார். (மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது 1930 ஆம் ஆண்டில் - மசோதா நிறைவேற்றப்பட்டது 1947 ஆம் ஆண்டில்)

### ➢ புதிய தலைமைச் செயலாளர் - தமிழ்நாடு:

- மாநில அரசானது தனது 46வது தலைமைச் செயலாளராக k. சண்முகத்தின் நியமனத்தை அறிவித்து இருக்கின்றது.
- இவர் 1985 ஆம் ஆண்டில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாவார்.

- இவர் கிரிஜா வைத்தியநாதனையடுத்து இப்பதவியை ஏற்றுள்ளார்.

➢ **தமிழ்நாட்டின் புதிய DGP:**

- தமிழ்நாட்டின் காவல்துறையின் பொது இயக்குநர்/காவல் துறையின் தலைவராக ஜலத் k. திரிபாதி பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் 1985 ஆம் ஆண்டின் இந்திய காவல் பணி அதிகாரியாவார்.
- இவர் T.K.இராஜேந்திரனுக்கு அடுத்ததாக இப்பதவியினை ஏற்றுள்ளார்.

➢ **இவர் பெற்ற விருதுகள்:**

- ரோந்து காவலர் திட்டம், குடிசைப் பகுதி தத்தெடுப்புத் திட்டம் மற்றும் புகார் பெட்டி அமைப்பு முன்முயற்சி ஆகிய திட்டங்களுக்காக “பொது நிர்வாகத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக பிரதமரின் விருது”.
- வாஷிங்டனின் சர்வதேச காவல்துறை தலைவர்கள் சங்கத்தினால் நிறுவப்பட்ட “சர்வதேச சமூகக் காவலர் விருது”.
- கிளாஸ்கோவில் உள்ள பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மைக்கான காமன்வெல்த் சங்கம் வழங்கிய ‘ஆளுமையில் புத்தாக்கத்திற்கான தங்கப் பதக்கம்’.

➢ **‘குடிமகள் பெட்டகம்’:**

- தமிழ்நாட்டிலுள்ள 7 கோடி மக்களுக்கும் தனித்துவமான எண் வழங்குவதற்காக ‘குடிமகன் பெட்டகம்’ என்ற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனித்துவமான ‘மக்கள் எண்’ வாயிலாக குடிமகன் பெட்டகத்தை சம்பந்தப்பட்ட நபருக்குரிய ஆவணங்கள் மின்னணு முறையில் சென்றடையும். குடிமக்கள் எண்ணைப் பெற தமிழ்நாடு மின் - ஆளுமை முகமையில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான இணையதளம் - WWW.tnesevai.tn.gov.inஆகும்.

➢ **தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைப் பதவிகளுக்கு தெரிவான 6 மாநிலங்களவை உறுப்பினர்கள்:**

  - முகமது ஜான், சந்திரசேகர், அன்புமணி (பாமக) - அதிமுக.
  - சண்முகம் (தொமுச), மூத்த வழக்குரைஞர் வில்சன், வைகோ (மதிமுக) - திமுக.

➢ **‘அம்மா இயற்கை நலப்பெட்டகம்’:**

- வளரிளம் பெண்களுக்கு இரத்தசோகை பிரச்சனை ஏற்படாமல் தடுக்கும் நோக்கில் ஊட்டச்சத்துப் பொருள்கள் அடங்கிய ‘அம்மா இயற்கை நலப்பெட்டகம்’ இலவசமாக வழங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

➢ **மூன்றாவது உலக திருக்குறள் மாநாடு:**

- தில்லியில் வரும் செப்.23,24 ஆகிய தேதிகளில் மொரிசியஸ் சர்வதேச திருக்குறள் அறக்கட்டளை சென்னை ஆசியவியல் நிறுவனம் ஆகியவை இணைந்து மூன்றாவது உலக திருக்குறள் மாநாடு நடத்துகின்றன.

➢ **உலகம் தரம் வாய்ந்த யோகா பயிற்சி மையம்:**

- செங்கல்பட்டில் 50 ஏக்கர் பரப்பில்,ரூ.92 கோடி செலவில் உலகத்தரம்வாய்ந்த யோகா பயிற்சி மையம் அமைக்கப்படும் என சட்டசபையில், சுகாதார அமைச்சர் விஜயபாஸ்கர் கூறியுள்ளார்.

## தேசியம் நிகழ்வுகள்

### ➢ முதலாவது ஆதார் சேவை மையம்:

- இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI)தனது முதல் ஆதார் சேவை மையத்தை தில்லி மற்றும் விஜயவாடாவில் செயல்படுத்தியுள்ளது. வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் நடத்தப்படும் கடவுச்சீட்டு சேவை மையங்களுக்கு ஒத்தவை இந்தப் புதிய ஆதார் சேவை மையங்கள். இவை புதிய ஆதார் பதிவு, தகவல்கள் புதுப்பித்தல் மற்றும் பிற செயல்பாடுகளை எளிதாக்கும்.
- இந்த மையம், தினசரி 1,000 ஆதார் தொடர்பான கோரிக்கைகளை கையாளும் திறன்கொண்டது. செவ்வாய் தவிர அனைத்து நாட்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் மையம் திறந்திருக்கும். இதுபோன்ற மையங்கள், 300-400 கோடி ரூபாய் திட்ட செலவில், விரைவில், இந்தியாவின் 53 நகரங்களில் தொடங்கப்படவுள்ளன.

### ➢ இந்திய இரயில்வேயில் மிகநீளமான மின்மயமாக்கப்பட்ட சுரங்கப்பாதை:

- தெற்கு மத்திய இரயில்வே (SCR)சமீபத்தில் செர்லோபள்ளி மற்றும் ரபூரு நிலையங்களுக்கு இடையில் மொத்தம் ரூ.460 கோடி செலவில் கட்டப்பட்ட 6.6 கி.மீ நீளமுள்ள மிகநீளமான மின்மயமாக்கப்பட்ட சுரங்கப்பாதையை செயல்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளது. ஓபுலவாரிபள்ளி - வெங்கடாச்சலம் - கிருஷ்ணாபட்டினம் துறைமுகத்திற்கு இடையில் அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட 113 கி.மீ நீள புதிய இரயில் வழித்தடத்தின் ஒருபகுதியாக இந்தச் சுரங்கப்பாதை அமைந்துள்ளது.
- மின்மயமாக்கப்பட்ட இச்சுரங்கப்பாதை, புதிய ஆஸ்திரேலிய சுரங்கப்பாதை முறையில் ‘குதிரை லடா’ வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. சுரங்கப்பாதையின் உயரம் (இரயில் மட்டத்திலிருந்து கூரை வரை) 6.5மீ ஆகும். தொடர்புக்கம்பியின் குறைந்தபட்ச உயரம் 5.2 மீட்டர் என்ற அளவில் பராமரிக்கப்படுகிறது. இந்தப் புதிய வழித்தடம், தெற்கு மற்றும் மேற்கு கடற்கரை இரயில்வே மண்டலங்கள் இடையே நேரடி இணைப்புகளை எளிதாக்கும் மற்றும் மண்லத்தின் சரக்கு வருவாயையும் மேம்படுத்தும்.

### ➢ NITIஆயோக்கின் AMFFRகுறியீடு:

- NITI ஆயோக் வெளியிட்டுள்ள “Agricultural Marketing and Farmer Friendly Reforms Index –வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் உழவர்க்கு உகந்த சீர்திருத்த குறியீட்டில் - AMFFRI”மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. வேளாண் சந்தைப்படுத்துதலில் மாநிலங்கள் மேற்கொண்ட சீர்திருத்தங்களின் அடிப்படையில் இந்தக் குறியீடு அவற்றை வரிசைப்படுத்தியுள்ளது. குஜராத் நூற்றுக்கு 71.5 மதிப்பெண்ணுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. இராஜஸ்தான் &மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- NITIஆயோக்,APMC சட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட e-NAMதிட்டத்தில் சேருதல், சந்தைப்படுத்தும் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான சிறப்பு சிகிச்சை மற்றும் மண்டிகளில் வரிகளின் அளவு போன்ற ஏழு விதிகளை அமல்படுத்துவதன் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை தரவரிசைப்படுத்த ஒரு குறியீட்டை அறிமுகப்படுத்தியது. இந்தச் சுட்டிகள் (Indicators)வேளாண் வணிகத்தை எளிதாக்குவதையும், நவீன வணிகத்தின் மூலம் விவசாயிகள் பயனடைவதற்கான வாய்ப்புகளையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் அவர்களது விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான பரந்த வாய்ப்பையும் இது கொண்டுள்ளது. இந்தச் சுட்டிகள் வேளாண் சந்தைகளில் போட்டித்திறன், செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றையும் குறிக்கின்றன.

### ➢ இந்தியாவல் முதல் யானை மறுவாய்வு மையம்:

- இந்தியாவின் முதல் யானை மறுவாழ்வு மையமானது கேரள அரசால் அம்மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள சூழல் சுற்றுலா சிற்றூரான கோட்டூரில் அமைக்கப்படவுள்ளது.

இம்மையத்தில் யானைகள் அருங்காட்சியகம், யானைப்பாகன்களுக்கான பயிற்சி மையம், மீச்சிறப்பு மருத்துவமனை, ஓய்வில்லம் மற்றும் விலங்குகளுக்கான தகன வசதி முதலானவை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு கைவிடப்பட்ட, காயமுற்ற &வயதான யானைகளும் பாதுகாக்கப்படும். இலங்கையில் உள்ள பின்னவாலா யானைகள் காப்பகத்தின் மாதிரியில் இது திட்டமிடப்பட்டுள்ளது.

## ➢ இந்தியாவின் முதல் பசுக்கள் சரணாலயம்:

- இந்தியாவின் முதல் பசுக்கள் சரணாலயமான காமதேனு காவ் அபயரண்யா, மத்தியப்பிரதேசத்தின் அகர் மால்வா மாவட்டத்தில் அமைந்துள்ளது. நிதியில் நெருக்கடிகள் காரணமாக இந்தப் பசுக்கள் சரணாலயத்தை தனியார்மயமாக்க காங்கிரஸ் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளதால் இது அண்மைய செய்தியில் இடம்பெறுகிறது. 472 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தச் சரணாலயத்தில், சுமார் 4,000 பசுக்கள் வசித்து வருகின்றன. இந்தச் சரணாலயத்தை ம.பி.இன் காவ் சம்வர்தன் வாரியம் ரூ.32 கோடி செலவில் உருவாக்கியது.

## ➢ இந்தியாவில் முதல் விண்வெளிப்பூங்கா:

- விண்வெளித் துறையில் பணிபுரியம் பன்னாட்டு துளிர்நிறுவனங்களை (Startup)ஈர்ப்பதற்கும், விண்வெளி தொடர்பான தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதன்மை மையமாக அதை உருவாக்குவதற்குமாக திருவனந்தபுரத்தில் அதிநவீன விண்வெளி அமைப்புகள் பூங்காவை அமைக்க கேரள மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது இந்தியாவின் முதல் விண்வெளிப் பூங்காவாக இருக்கும் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.
- Dr.ஆ.ப.ஜெ அப்துல் கலாம் மையம் மற்றும் விண்வெளி அருங்காட்சியகம் ஆகியவற்றை விண்வெளிப் பூங்காவின் ஒருபகுதியாக மாற்றவும், அதனை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை ஒதுக்கவும் மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான முழு நிதியுதவியையும் விக்ரம் சாரபாய் விண்வெளி மையம் (VSSC)வழங்கும்.
- 20.01 ஏக்கர் நிலமானது கேரள மாநில தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிறுவனத்துக்கு (KSITIL)குத்தகைக்கு வழங்கப்படும். இதில், 16.07 ஏக்கர், சிறப்பு பொருளாதார மண்டலம் என்னும் (SEZ)தகுதியைப் பெற்றுள்ளது. அந்நிலம் டெக்னோபார்க்குக்கு சொந்தமானதாகும். இந்தத் திட்டத்தை கேரள அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை செயல்படுத்தும்.

## ➢ 'மக்களின் தேர்வு' விருது வென்ற இந்தியர்:

- இந்திய மணல் சிற்பக்கலைஞரும் 'பத்ம' விருது பெற்றவருமான சுதர்சன் பட்நாயக், அமெரிக்காவில் நடந்த மதிப்புமிக்க மணல் சிற்ப விழாவில்,'மக்களின் தேர்வு - People's Choice' விருதை வென்றார். மாசசூசெட்ஸின் பாஸ்டனில் நடந்த 2019 ரெவரே கடற்கரை சர்வதேச மணல் சிற்பவிழாவில்,'நெகிழி மாசுபாட்டிலிருந்து நமது பெருங்கடலைக் காப்பாற்றுங்கள் - Stop Plastic Pollution, Save Our Ocean'என்ற அவரது மணல் சிற்பத்துக்காக அவர் அவ்விருதை வென்றார்.
- பட்நாயக் தான் இந்தியா மற்றும் ஆசியாவின் சார்பாக கலந்துகொண்ட ஒரே போட்டியாளர். கடலில் நெகிழிப்பொருட்களால் ஏற்படும் மாசு, கடல் உணவுகள் மூலமாக மனிதனையும் பாதிக்கிறது என்பதை விளக்கும் வகையில் அவரின் சிற்பம் அமைந்திருந்தது.

## ➢ 5ஆவது சர்வதேசம் தர்ம - தம்மா மாநாடு:

- ஜுலை 27 &28 ஆகிய தேதிகளில், பீகார் மாநிலம் இராஜ்கிரில், 5ஆவது சர்வதேச தர்ம - தம்ம மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில், 15 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் பங்கேற்றனர். உலகில் நிலவும் பயங்கரவாதம், வன்முறை மற்றும் புவி வெப்பமடைதல் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

- இந்த இரண்டு நாள் மாநாட்டில், பௌத்தத்தின் முக்கிய தலைப்புகளாக சத் - சித் - ஆனந்தம் மற்றும் நிர்வாணம் ஆகியவற்றின் பாடங்களில் உரையாற்றப்பட்டது. தர்ம - தம்ம மாநாடானது ஹிந்து மற்றும் பௌத்த சிந்தனையாளர்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்த ஒரு தளமாக செயல்படுகிறது.

### ➢ அதிகச் செலவுடைய நகரங்கள் - மும்பை:

- மும்பை நகரமானது இந்தியாவின் மிக அதிகச் செலவுடைய நகரமாகவும் ஆசியாவல் அதிகச் செலவுடைய முதல் 20 நகரங்களில் ஒன்றாகவும் உள்ளது.
- மும்பையில் உள்ள வீடுகளின் விலையானது உலகிலேயே மிக உயர்ந்ததாக உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பானது மெர்சர் குழுமத்தால் வெளியிடப்பட்டது.
- புதுடெல்லி (118), சென்னை (154), பெங்களூரு (179) மற்றும் கொல்கத்தா (189) ஆகியவை இந்தப் பட்டியலில் உள்ள இதர இந்திய நகரங்களாகும்.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகின் அதிகச் செலவுடைய நகரமாக ஹாங்காங் நகரமும் அதனைத் தொடர்ந்து டோக்கியோ, சிங்கப்பூர் மற்றும் சியோல் ஆகிய நகரங்களும் உள்ளன.
- உலகின் மிகக் குறைந்தச் செலவுடைய நகரங்களாக துனிஸ் (209), தாஷ்கண்ட் (208), கராச்சி (207) ஆகியவை உள்ளன.

### ➢ விஜய் நடவடிக்கை - கார்கில் போர் 20வது ஆண்டு:

- கார்கில் போர் என்பது காஷ்மீரில் உள்ள கார்கில் மாவட்டம் மற்றம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே 1999 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற ஒரு ஆயுதம் தாங்கிய போராகும்.
- மேலும் இது "விஜய் நடவடிக்கை வெற்றி பெற்றதின் 20-வது ஆண்டு நினைவைக் குறிக்கின்றது.
- இந்திய இராணுவம் இந்திய விமானப் படையின் உதவியுடன் பாகிஸ்தான படைகளை திரும்பப் பெறச் செய்து, அனைத்து உயரிய மலைப் பகுதிகளையும் கைப்பற்றியது.

### ➢ "KSHITIJ"என்ற ஆவணப்படச் சங்கம்:

- மும்பையில், இந்திய ஆவணப்படத் தயாரிப்பாளர் சங்கத்துடன் (IDPA)இணைந்து இந்திய திரைப்படப் பிரிவு(FDI) "KSHITIJ"என்ற ஆவணப்படச் சங்கத்தைத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் 2 மற்றும் 4ஆம் தேதிகளில் மாலை 5:00 - 6:30 மணி வரை திரைப்படங்கள் பிரிவு வளாகத்தில் பொதுத் திரையிடல்கள் ஏற்பாடு செய்யப்படும்; அதைத்தொடர்ந்து படத்தின் இயக்குநருடன் பார்வையாளர்களின் குறுகிய உரையாடல் நடைபெறும்.
- அஜய் மற்றும் விஜய் பேடியின் புகழ்பெற்ற ஆவணப்படமான "Secret Life of Frogs"தொடக்க படமாக திரையிடப்படும். 1948ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட திரைப்படப் பிரிவானது நாட்டின் சமூகம், அரசியல் மற்றம் கலாசாரத்தின் கற்பனைகள் &யதார்த்தங்களின் பதிவுகளைத் தக்கவைக்க இடைவிடாமல் முயன்றுவருகிறது. இது தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் அரசாங்க நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்துவதற்கும், இந்திய வரலாற்றின் திரைத்துறைப் பதிவுகளுக்கும், ஆவணப்படங்கள் மற்றும் செய்தி இதழ்களை தயாரிக்கவும் செயல்படுகிறது.

### ➢ சட்டப்பேரவையில் விதி எண் 110இன் கீழ் தொழிற்துறை சார்ந்த அறிவிப்புகளை தமிழ்நாடு முதல்வர் பழனிசாமி வெளியிட்டார்:

- 'யாதும் ஊரே' (தனிச் சிறப்பு பிரிவு மற்றும் வலைதளம்) - உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், தமிழ்ச்சங்கங்கள், தொழிலமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி முதலீட்டு தூதர்களை உருவாக்கி முதலீடுகளை ஈர்க்க 60 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

- 'தொழில் தோழன்' என்ற இணைய அடிப்படையிலான குறைதீர் வழிமுறை ஏற்படுத்தப்படும்.
- 'தொழில் வளர் தமிழகம்' என்ற பெயரில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.
- காஞ்சிபுரம் வல்லம் - வடகால் மற்றும் ஈரோடு பெருந்துறை சிப்காட் பூங்காக்களில் தலா 50 கோடி ரூபாய் மதிப்பில் தொழிற்கூட கட்டடங்கள் ஏற்படுத்தப்படும்.
- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உற்பத்தியை பெருக்கிக் கொள்ள, நவீன தொழில்நுட்ப இயந்திரங்களை நிறுவிக்கொள்வதற்கான 25 சதவீத முதலீட்டு மானியத்தின் உச்சவரம்பு தற்போதைய ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

## ➢ ஹாச்சி வழிபாடு விழா (Kharchi Puja Festival):

- ஜுலை. 11 அன்று, திரிபுராவில் உள்ள புரான் அகர்தலாவில் நூற்றாண்டுகள் பழைமையான ஹாச்சி வழிபாடு விழா தொடங்கியது. 'ஹாச்சி' என்ற சொல் புவி எனப் பொருள்படும் 'கியா' என்ற சொல்லில் இருந்து உருவானது. ஹாச்சி வழிபாடு, அடிப்படையில் புவியை வணங்குவதற்காக செய்யப்படுகிறது. முதலில் இந்து பழங்குடியினரால் கொண்டாடப்பட்ட இவ்விழா, தற்சமயம் அனைத்து சமூகங்களாலும் மதங்களாலும் கொண்டாடப்படுகிறது.
- தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், சிவன், துர்கை, விஷ்ணு, லஷ்மி, சரஸ்வதி, கார்த்திக், விநாயகர், பிரம்மன், அபதி (நீர் கடவுள்), சந்திரன், கங்கை, அக்னி, காமதேவன் மற்றும் ஹிமாத்ரி (இமயமலை) முதலிய 14 தெய்வங்களின் வழிபாடுகள் அடங்கும்.

## ➢ நீர்க்கொள்கை (Water Policy)உடைய முதல் இந்திய மாநிலம்:

- மாநிலத்தின் நீர்ப்பிரச்சனைகள் மற்றும் நீராதாரங்களின் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான ஒரு வரைவு நீர்க்கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ள முதல் மாநிலமாக மேகாலயா திகழ்கிறது. இந்த வரைவுக் கொள்கைக்கு மாநில முதலமைச்சர் கான்ராட் Kசங்மா தலைமையில் நடந்த கூட்டத்தில், மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- நீராதாரங்களை ஒரு பொது வளமாக அங்கீகரிப்பது, குடிநீர் தேவை, வீட்டுப்பயன்பாடு மற்றும் சுகாதார தேவை மற்றும் வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான நீரை மாநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் வழங்குதலே இக்கொள்கையின் நோக்கமாகும். தீவிர மக்கள் பங்களிப்புடன் நீராதாரங்களின் பாதுகாப்பை மேம்படுத்த இது முயற்சி செய்கிறது. நீராதாரங்களின் அளவு மற்றும் தரம் குறைவைத் தடுப்பதற்காக அனைத்து நீராதாரங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ 'தாகம் நடவடிக்கை -Operation Thirst':

- அங்கீகரிக்கப்படாத போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் (Packaged Drinking Water)விற்பனையை தடுக்கும் ஒரு முயற்சியாக, இரயில்வே பாதுகாப்புப் படையானது அண்மையில் 'தாகம் நடவடிக்கை' என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது. இரயில் நிலையங்களின் வளாகத்தில், அங்கீகரிக்கப்படாதPDWஅச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக, நாடு முழுவதுமுள்ள அனைத்து முக்கிய ரயில் நிலையங்களிலும் இந்நடவடிக்கை தொடங்கப்பட்டதாக இரயில்வே பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.
- ஜுலை 8 & 9ஆம் தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது, அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களின் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை விற்பனை செய்ததற்காக, அதாவது ரயில்வே சட்டத்தின் 144 மற்றும் 153 ஆகிய பிரிவுகளின்கீழ், 1371 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தக் குற்றவாளிகளுக்கு மொத்தம் ரூ.6,80,855 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

### ➢ பரமார்ஷ் திட்டம்:

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் Dr.இரமேஷ் போக்ரியால் "நிசாங்க்", பல்கலைக்கழக மானியக்குழுவின் 'பரமார்ஷ்' என்ற திட்டத்தைத் தொடங்கிவைத்தார். புது தில்லியில் உயர்கல்வியில் தர உத்தரவாதத்தை மேம்படுத்துவதற்காக தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் கவுன்சிலின் (NAAC)அங்கீகாரத்தை பெற விரும்பும் நிறுவனங்களுக்கு வழிகாட்டும் நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில், 3.26 மற்றும் அதற்கு மேற்பட்ட NAACமதிப்பெண்களுடைய 71 பல்கலைகள் மற்றும் 391 கல்லூரிகளும் தலா ஐந்து கல்லூரிகளுக்கு வழிகாட்டும்.
- 'பரமார்ஷ் திட்டத்தின் கீழ், முன்னணி நிறுவனங்களானது கல்லூரிகளுக்கு உயர்தரத்தை அடைய உதவும் வழிகாட்டுதல்களை வழங்கும், வழிகாட்டும் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கவும், ஒரு வல்லுநரை நியமிக்கும் விருப்புத்தேர்வையும், அவர்களுக்கு மாதத்திற்கு ரூ.31,000 உதவித்தொகை வழங்கவும் இத்திட்டம் முன்மொழிகிறது. இந்தியாவில் உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான தேசிய சவாலை எதிர்கொள்வதில், இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

### ➢ 5ஆவதுசர்வதேச காவலர் கண்காட்சி:

- 5ஆவதுசர்வதேச காவல்துறை கண்காட்சியானது ஜூலை.19 - 20 வரை "அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான சவால்கள் - Challenges to Strengthen Peace and Security"என்ற கருப்பொருளுடன் புது தில்லியின் பிரகதி மைதானத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியானது பல்வேறு நாடுகளின் காவல்துறையின் பிரதிநிதிகள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழினுட்ப வழங்குநர்களை சந்திக்கக்கூடிய ஓர் ஊடாடும் தளமாகும்.
- இக்கண்காட்சியில் நவீன இரக துப்பாக்கிகள், போர்/கவச வாகனங்கள் மற்றும் இணைய பாதுகாப்பு, ஆளில்லா விமானங்கள், தாய்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் மீட்பு முதலானவற்றில் எதிரிகளை தாக்கியழிக்கும் நவீன தொழில்நுட்பங்களை 25க்கும் மேற்பட்ட நாடுகள் காட்சிப்படுத்தின. நெக்ஸ்ஜென் கண்காட்சியாளர் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்காட்சியில் சிங்கப்பூர், இஸ்ரேல், தென் கொரியா, தைவான், சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா, மலேசியா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, போலந்து மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சிறந்த மற்றும் நவீன தொழினுட்பங்களைக் காட்சிப்படுத்தின. அகில இந்திய அளவில் 100,000 மக்களுக்கு 117 காவலர்கள் என்ற விகிதத்தில் உள்ளனர்.

### ➢ தஸ்த்க் பிரச்சாரம்:

- கொடிய மூளைச் செயலிழப்பு நோய் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் ஆகியவற்றை ஒழிப்பதற்காக தஸ்தக் என்ற ஒரு பிரச்சாரத்தை உத்தரப் பிரதேச அரசு தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது ஜூலை 1 முதல் ஜூலை 31 வரை நடைபெறவிருக்கின்றது.
- இந்த இரண்டு நோய்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அம்மாநிலத்தின் 75 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு கிராமங்களின் வீடுகளுக்கும் சிறப்புக் குழுக்கள் செல்லவிருக்கின்றன.

### ➢ காண்டாமிருகம் பாதுகாப்புப் படை:

- அஸ்ஸாமின் காசிரங்கா தேசியப் பூங்காவில் 82 வீரர்களைக் கொண்ட சிறப்பு காண்டாமிருகப் பாதுகாப்புப் படை (Special Rhino Protection Force - SRPF) ஒன்று நிலை நிறுத்தப்பட்டுள்ளது.
- SRPF வீரர்கள் காசிரங்கா தேசியப் பூங்காவில் 8 பகுதிகளில் பணியமர்த்தப் படவிருக்கின்றனர்.
- இது காண்டமிருகம் வேட்டையாடப்படுதல் மற்றும் புலிகள் வேட்டையாடப் படுதல் ஆகியவற்றைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தப் பூங்கா புலிகள் காப்பகமாவும் விளங்குகின்றது.

- காசிரங்கா தேசியப் பூங்கா உலகின் அதிக எண்ணிக்கையிலான ஒற்றை கொம்பு காண்டாமிருகங்களுக்கு வாழ்விடமாக விளங்குகின்றது.
- இந்தப் பூங்கா உலகில் இருக்கும் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கையில் 68 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது.

## ➢ கேராளவின் புனித மரியம் திரேசியா:

- அக்டோபர் 13 அன்று போப் பிரான்சிஸ் கேரளாவில் கன்னியாஸ்திரி மற்றும் புனிதக் குடும்பச் சகோதரிகள் என்ற அமைப்பின் நிறுவனரான மரியம் திரேசியா என்பவரைத் துறவியாக அறிவிக்கவுள்ளார்.
- இவர் சிரோ மலபார் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர் ஆவார். இவர் அனாதை இல்லங்கள் மற்றும் பெண் கல்விக்காகப் பணியாற்றியுள்ளார்.
- புனிதத் துறவியர்கள் வாடிகன் தேவாலயத்தினால் நியமிக்கப்படுகின்றார்கள்.
- இது இதற்கு முன்பு கேரளாவில் பிறந்த 3 இந்திய கத்தோலிக்கர்களை (பர் குரியகோஸ் எலியாஸ் சவாரா யூப்ராஸியா மற்றும் அல்போன்சா) புனிதத் துறவிகளாக அறிவித்துள்ளது.

## ➢ கேரள மீனவர்கள்:

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது (ஐனெயைெ ளுியஉந சுநளநயசஉா ழுசபயளையவழைெ) 250 நேவிக் செய்தி பெறும் சாதனங்களை கேரள மீனவர்களுக்கு சோதனை அடிப்படையில் விநியோகித்துள்ளது.
- இந்த சாதனம் புயல், உயரமான அலைகள் மற்றும் சுனாமி போன்ற அவசரகால முன்னெச்சரிக்கைத் தகவல்களை அளிக்கும்.
- மேலும் இது மீன்பிடிப்பு மண்டலம் மற்றும் நேவிக் மூலம் இடம் குறித்த தகவலின் அடிப்படையில் சர்வதேச எல்லையைக் கடந்து செல்லுதல் குறித்தக் தகவலையும் அளிகக்கும்.

## ➢ கிரஷ் கியோஸ்க் - ஹரியானா:

- ஹரியானா மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரான ஓம் பிரகாஷ் கிரிஷி கியோஸ்க் மையத்தை (விவசாயிகள் சேவை) பஞ்சகுலாவில் தொடங்கி வைத்தார்.
- இவை விவசாயிகளுக்கு அரசின் திட்டங்களைப் பற்றியத் தகவல்களை வழங்குவதுடன் பிரதம மந்திரி பசல் பீமா யோஜனாவின் கீழ் கோரிக்கைகளைத் தாக்கல் செய்யவும் உதவும்.
- இவை விவசாயிகளுக்கான சேவைகளை நிகழ்நேர தளத்தில் (ஆன்லைனில்) கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுச் செயல்படும்'டிஜிட்டல் கிசான் சுவிதா' எனும் மாநில அரசின் திட்டத்தின் கீழ் இயங்கும்.
- விவசாயிகள் பயிர்த் தாளடிகளை எரிக்காமல் அதற்குப் பகுதிலாக அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி வயல்களில் அவற்றை விதைக்க ஊக்குவிக்கும் "சுச்சனா ரதம்" எனும் வசதியையும் அவர் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- மேலும் அமைச்சர் அக்ரி ஸ்கோப் எனும் தலைப்பிலான நூலையும் வெளியிட்டார்.

## ➢ பங்களா ஷஷ்யா பீமா - மேற்கு வங்காளம்:

- மேற்கு வங்காள அரசானது 2019 ஆண்டின் காரீ∴ப் பருவத்திற்கான பயிர் காப்பீட்டுத் திட்டத்தை இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து அறிவித்துள்ளது.
- பங்களா ஷஷ்யா பீமா என்றழைக்கப்படும் இந்தத் திட்டமானது 15 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கும் பொருந்தும்.

- முழு காப்பீட்டுத் தொகையையும் அரசே செலுத்துவதால் இந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டமானது விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாகும்.
- அமன் நெல், அவுஸ் நெல், சணல் மற்றும் சோளம் ஆகியவை இந்தக் காப்பீட்டின் கீழ் வரும் பயிர்களாகும்.
- நடவு செய்யும் போதும், சாகுபடியின் போதும், அறுவடை செய்த பின்னர் பயிர் வயலில் இருக்கும் போதும், மோசமான வானிலை சூழ்நிலைகளின் போதும் என 4 நிலைகளில் இந்தக் காப்பீடானது அளிக்கப்படும்.

### ➢ அருணாச்சலப் பிரதேசத்தில் விளையாட்டு மையங்கள்:

- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறைக்கான மத்திய இணை அமைச்சரான கிரண் ரிஜ்ஜு (தனிப் பொறுப்பு) இட்டா நகரில் 3 சிறப்புமிகு விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்.
- இந்த மையங்கள் உறைவிட வசதியுடன் 300 வியைாட்டு வீரர்கள் தங்கிப் பயிற்சி பெறும் திறன் கொண்டதாக இருக்கும்.
- தற்காப்புக் கலைகள்: பளு தூக்குதல் மற்றும் குத்துச் சண்டை ஆகியவற்றிற்காக இந்த 3 சிறப்புமிகு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

### ➢ கேரள பாம்புப் படகுகள் லீக்:

- கேரள மாநிலத்தின் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க “வல்லம்ளி” என்ற பாம்புப் படகுப் போட்டியை உலகத் தரத்திலான வியைாட்டுப் போட்டியாக மாற்ற அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- இது ஐபிஎல் போட்டியைப் போன்று சாம்பியன் படகுப் பேட்டியை (CBL – Champions Boat League) நடத்துவதை நோக்கமாகக் கொாண்டுள்ளது.
- “பாம்புப் படகு” அல்லது “சுந்தம் வல்லம்” என்பது 100 முதல் 138 அடி வரை நீளம் கொண்ட 100 நபர்கள் அமரக் கூடிய ஒரு பெரிய தோணியாகும்.
- இந்தப் படகுகள் 13 ஆம் நூற்றாண்டுகளில் ஆலப்புழாவின் உப்பங்கழிகளில் நடைபெற்ற போர்களில் பயன்டுத்தப்பட்டன.

### ➢ முக அங்கீகார அமைப்புடன் கூடிய முதலாவது விமான நிலையம்:

- ஹைதராபாத்தின் ராஜுவ் காந்தி சர்வதேச விமான நிலையமானத பயணிகள் விமான நிலையத்திற்குள் நுழையும் போது சோதனை செய்வதற்காக முக அங்கீகார அமைப்பைச் சோதனை முறையில் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.
- இந்த சோனைத் திட்டமானது மத்திய அரசின் டிஜி யாத்திரைத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்படுகின்றது.
- டிஜி யாத்திரை என்பத பல்வேறு இடங்களில் அடையாளத்திற்கான சோதனையைத் தவிர்க்கவும் காகிதமற்ற பயணத்திற்கு உதவுவதற்காகவும் உள்ள ஒரு வசதியாகும்

### ➢ வேளாண் தொழில் செய்ய உகந்த மாநிலங்கள்:

- நிதி ஆயோக்கின் வேளாண் சந்தையிடல் மற்றும் விவசாயிகளுக்கு உகந்த சீர்திருத்தக் குறியீடு (AMMFRI - Agricultural Marketing and Friendly Reforms Index) என்ற பட்டியலில் மகாராஷ்டிரா முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் குஜராத் மாநிலமும் அதற்கடுத்து இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களும் இடம் பிடித்துள்ளன.
- சந்தைச் சீர்திருத்தங்களை மிகவும் மோசமாக செயல்படுத்தியதன் காரணமாக இந்தப் பட்டியலில் தமிழ்நாடு 25-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தக் குறியீட்டில் வேளாண் சந்தையில் மாநிலங்கள் மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களின் அடிப்படையில் மாநிலங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

- AMMFRI-யில் உள்ள '0' என்ற மதிப்பானது தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் எந்தவொரு சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் "100" என்ற மதிப்பானது தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முழுமையான சீர்திருத்தங்களை மேற்கொண்டது என்பதையும் குறிக்கின்றன.
- இந்தக் குறியீடு 2016 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## ஆதார் சேவா கேந்திரா:

- இந்தியாவின் தனித்துவ அடையாள ஆணையமானது முதலாவது ஆதார் சேவா கேந்திராவை தில்லி மற்றும் விஜயவாடாவில் செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது.
- இந்தப் புதிய மையங்கள் சோதனை அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- 2019 ஆம் ஆண்டின் முடிவில் 53 நகரங்களில் இது போன்ற 114 மையங்களை அமைக்க UIDAI திட்டமிட்டுள்ளது.
- ASKமையங்கள் "கடவுச் சீட்டு கேந்திரங்களைப் போன்றுச் செயல்படும்"
- இவை பதிவுகள், புதுப்பித்தல் மற்றும் இதர நடவடிக்கைகளை எளிதாக்கும்.

## அபுஜாஹமத் வனத்தில் மத்திய ரிசர்வ் காவற் படை:

- தெற்கு சட்டீஸ்கரில் அணுக முடியாத பகுதியாக இருக்கும் அபுஜாஹமத்தில் மத்திய உள்துறை அமைச்சகத்தினால் மத்திய ரிசர்வ் காவற் படையைச் சேர்ந்து ஏறத்தாழ 7000 வீரர்கள் பணியில் அமர்த்தப்பட விருக்கின்றனர்.
- இந்தக் காடுகள் வருவாய் வரைபடத்தில் கூட குறிப்பிடப் படவில்லை. இந்த அடர்ந்த காடுகள் மாவோயிஸ்டுகளினால் மறைவிடப் பகுதிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- பாதுகாப்பு படைகள் அங்கு வலுவான தடுப்பை ஏற்படுத்தி, மாவோயிஸ்டுகளை அங்கிருந்து வெளியேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மேற்கு வங்காளத்தின் இடஒதுக்கீடு:

- மாநில அரசின் வேலைவாய்ப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பொதுப் பிரிவினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீட்டை வழங்க மேற்கு வங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதுவரை உள்ள மொத்த இடஒதுக்கீடு 48% ஆகும்.
- இந்த புதிய இட ஒதுக்கீட்டிற்குப் பிறகு புதிய இட ஒதுக்கீடு 53.2% என்றளவில் இருக்கும்.
- இதன் மூலம் தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானாவையடுத்து 50% இட ஒதுக்கீட்டைத் தாண்டிய 4-வது மாநிலமாக மேற்கு வங்காளம் மாறியுள்ளது.

## மிலாப் நடவடிக்கை - தில்லி காவல் துறை:

- காணாமல் போன குழந்தைகளை மீட்பதற்காக "மிலாப்" என்ற ஒரு நடவடிக்கையை தில்லி காவல்துறையின் குற்றவியல் பிரிவு நடத்தியுள்ளது.
- இது காணாமல் போன 333 குழந்தைகளை தில்லியில் மீட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் அந்தக் குழந்தைகளின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்துள்ளது.
- இந்தக் குழந்தைகள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து காணாமல் போயுள்ளனர். அந்தக் குழந்தைகள் தில்லியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.
- தில்லி காவல் துறையின் ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவானது 2014 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

- **மலை மருத்துவ நிறுவனம்:**
- ஆசியாவின் முதலாவது மலை மருத்துவம் மற்றும் மலையில் அதிக உயரத்தில் உள்ளவர்களை மீட்பதற்கான சிக்ஸ் சிக்மா நிறுவனத்தை ருத்திரபிரயாக் மாவட்டத்தில் அமைக்க உத்தரகாண்ட் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- மேலும் இந்த நிறுவனம் மலை மருத்துவத்தில் ஆயுதப் படைகள் மற்றும் துணை இராணுவப் படைகளுக்கும் பயிற்சி வழங்கவிருக்கின்றது.
- இது மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் புனிதப் பயணிகளுக்கு உயரமான பகுதிகளில் தேவையான மருத்துவ சேவையை அளிக்கவிருக்கின்றது.

- **ரயில்வேயின் தேனீ திட்டம்:**
- வடகிழக்கு எல்லை ரயில்வேக்கு 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான இந்திய ரயில்வே துறையின் சிறந்த புத்தாக்கத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.
- இது ரயில் தடங்களில் யானைகள் விபத்துகளைச் சந்திப்பதில் இருந்து காப்பாற்ற "தேனீ திட்டம்" எனும் தனித்துவமான திட்டத்தை செயல்படுத்தியது.
- இது காட்டு யானைகளை ரயில் தடங்களில் இருந்து விலக்கி வைக்க தேனீக் கூட்டங்களின் ரீங்காரங்களை உருவாக்கும் ஒரு அமைப்பாகும்.

- **வடகிழக்கு எல்லை ரயில்வே:**
- வடகிழக்கு எல்லை ரயில்வேயின் தலைமையகமானது அஸ்ஸாமின் தலைநகரமான கவுகாத்தியில் உள்ள மாலிகாயோனில் உள்ளது.
- இது முழு வடகிழக்கு இந்தியா மற்றும் மேற்கு வங்காளம், பீஹார் ஆகியவற்றின் சில பகுதிகளில் ரயில்களை இயக்குவதற்குப் பொறுப்புடையதாகும்.

- **OBCஇட ஒதுக்கீடு - மத்திய பிரதேசம்:**
- இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை தற்போதுள்ள 14 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக உயர்த்துவதற்கான தீர்மானத்தை மத்தியப் பிரதேச அமைச்சரவை நிறைவேற்றியுள்ளது.
- மேலும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 10% இடஒதுக்கீட்டுடன் சேர்த்து ஒட்டுமொத்த ஒதுக்கீடானது 73 சதவீதமாக உள்ளது.
- இது இட ஒதுக்கீடு தொடர்பான உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை மீறுவதாகவும் இந்திய அரசுக்கு எதிரான இந்திரா சவ்ஹானி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிரானதும் ஆகும்.

- **சாட்சிகள் பாதுகாப்புத் திட்டம் - ஒடிசாவில் நிறைவேற்றம்:**
- ஒடிசா மாநில அரசானது மத்திய அரசின் 2018 ஆம் ஆண்டின் சாட்சிகள் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது.
- இது குற்ற விசாரணை நீதிமன்ற விசாரணை மற்றும் அதற்குப் பின்னருமான அச்சுறுத்தல் மதிப்பீட்டின் அடிப்படையில் சாட்சிகளுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றது.
- இந்தத் திட்டமானது சாட்சிகளின் பாதுகாப்பு, அடையாள மாற்றம் ருஅவர்களின் இடமாற்றம், சாட்சிகளின் இல்லங்களில் பாதுகாப்புச் சாதனங்களை நிறுவுதல், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நீதிமன்ற அறைகளின் பயன்பாடு போன்றவற்றை உள்ளடக்கியது.
- அச்சுறுத்தல் மதிப்பீட்டின் அடிப்படையில் A,B,C என 3 பிரவாக பிரிக்கப்பட்டு சாட்சிகள் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.
- இந்த நிதியானது மாநில அல்லது ஒன்றியப் பிரதேசத்தின் உள்துறை அமைச்சகத்தால் இயக்கப்படும்.

## ➢ கர்ச்சி பூஜை திருவிழா - திரிபுரா:

- கர்ச்சி பூஜை திருவிழா என்பது திரிபுராவின் மிகவும் பிரபலமான பண்டிகைகளில் ஒன்றாகும்.
- இது திரிபுராவின் தலைநகரான அகர்தலாவில் (புராண அகர்தலா) உள்ள பதினான்கு கடவுள்களின் கோயில் வளாகத்தில் கொண்டாடப்பட்டது.
- ஒரு வார காலம் கொண்டாடப்படும் இத்திருவிழா ஜூலை மாத்தில் அமாவாசையை அடுத்த எட்டாம் நாளில் தொடங்குகின்றது.
- இவ்விழாவானது பூமிக் தாயின் மாதவிடாய் காலத்திற்கு அடுத்த அதனைச் சுத்தம் செய்வதற்காக கொண்டாடப்படுகிறது.
- விலங்குகள் பலியிடுதலும் இந்தப் பண்டிகையின் ஒரு முக்கியப் பதியாகும்.

## ➢ பெண்கள் தொழில் தொடக்க மாநாடு - 2019:

- பெண் தொழில் தொடங்குனரை ஊக்குவிக்கும் முயற்சியில் கேரளாவின் ஸ்டார்ட் அப் திட்டமானது அகஸ்ட் 01 ஆம் தேதி மகளிர் தொழில் தொடக்க மாநாட்டை நடத்தவிருக்கின்றது.
- இந்த மாநாடானது அனைத்துப் பெண் தொழில் வல்லுநர்கள், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், பெருநிறுவனத் தலைவர்கள் மற்றும் தொடக்க நிறுவனங்கள் அனைவருக்கும் அனுமதியளிக்கும்.
- “She Loves Tech” எனும் மிகப்பெரும் தேசிய சவாலில் பட்டியலிடப் பட்டவர்களில் இருந்து 20 பெண்களால் உருவாக்கப்பட்ட தொழில் தொடங்கங்கள் இம்மாநாட்டில் காட்சிப் படுத்தப்படும்.

## ➢ மத்தியப் பிரதேசத்தின் சா-பீஜ் விதைகள்:

- சான்றளிக்கப்பட்ட மற்றும் உயர் தர விதைகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்வதோடு விதைகளை உற்பத்தி செய்யவும் மத்திய பிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்த விதைகளின் பெயர் “சா-பீஜ்” ஆகும்.
- இவை அடுத்த “ராபி” பருவத்திலிருந்துத் தயாரிக்கப்படும்.
- மாநிலத்தின் விதைக் குழுக்கள் இந்த விதைகளின் விற்பனையில் ஈடுபடும்.

## ➢ அகல்யாபாய் ஹோல்கர் சர்வதேச விமான நிலையம்:

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் உள்ள தேவி அகல்யாபாய் ஹோல்கர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதலாவது சர்வதேச விமானம் 153 பயணிகளுடன் துபாய்க்கு புறப்பட்டுச் சென்றது.
- இது கடவுச் சீட்டு (இந்தியாவிற்குள் நுழைதல்) விதிகள், 1950-ன் விதி 3ன் துணை விதி (b)ன் கீழ் 2019 ஆம் ஆண்டு சர்வதேச விமானம் நிலையமாக அறிவிக்கப்பட்டது.
- இந்த விமான நிலையம் மராத்தியப் பேரரசின் ஹோல்கர் வம்சத்தைச் சேர்ந்து இந்தூரின் மகாராணி அகல்யா பாய் ஹோல்கரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.

## ➢ கர்நாடக கட்சித் தாவல்:

- இந்திய உச்ச நீதிமன்றம் 15 அதிருப்தி சட்டசபை உறுப்பினர்களை நடப்பு சட்டசபைக் கூட்டத் தொடரிலிருந்து வெளியேற அனுமதி வழங்கியுள்ளது.
- இது அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையின் பிரிவு 2(b)-ன் கீழ் இந்த எம்எல்ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற அச்சமின்றி ஒரு “கொறாடாவின் உத்தரவை” மறுக்க முடியும் என்பதைக் குறிக்கின்றது.

- **கட்சிக் கொறடா:**

- ஒரு கொறடா உத்தரவு என்பது ஒரு முக்கியமான வாக்கெடுப்புக்கு கட்சி உறுப்பினர்கள் ஆஜராக வேண்டும் அல்லது அவர்கள் ஒரு குறிப்பிட்ட வழியில் மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்பதற்கான ஒரு எழுதப்பட்ட உத்தரவாகும்
- "கொறடா உத்தரவை" வழங்குவதற்காக, அவையில் உள்ள தங்களது கட்சி உறுப்பினர்களில் மூத்த உறுப்பினரை "தலைமைக் கொறடாவாக" அரசியல் கட்சிகள் நியமிக்கின்றன.

- **திபாங் பல்நோக்குத் திட்டம்:**

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள இபாங் பல்நோக்குத் திட்டத்திற்கான பல்வேறு அனுமதிகள் மற்றும் செலவினங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது 278 மீட்டர் உயரமுள்ள கான்கிரீட் ஈர்ப்பு அணை கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இத்திட்டம் நிறைவு பெற்றால் இந்தியாவின் மிக உயரமான அணையாக இது விளங்கும்.
- இது அருணாச்சலப் பிரதேசத்தின் கீழ் திபாங் பள்ளத்தாக்கு மாவட்டத்தில் உள்ள திபாங் நதியின் மீது அமைந்துள்ளது.

- **வானிலிருந்து மருத்துவம் - தெலுங்கானா:**

- தெலுங்கானா மாநில அரசு மற்றும் உலகப் பொருளாதார மன்றத்தின் நான்காவது தொழிற்துறை புரட்சிக்கான மையம் ஆகியவை இணைந்து "வானிலிருந்து மருத்துவம்" என்ற ஒரு திட்டத்தை அறிவித்தள்ளன.
- இது ஆளில்லா சிறு விமானத்தின் மூலம் இரத்தம் மற்றும் மருந்துகள் போன்ற அவசர மருத்துவ சேவைகளை அளிக்கக் கூடிய ஒரு புத்தாக்கத் திட்டமாகம்.
- இது சுகாதாரச் சேவைகள் சங்கிலி விநியோகத் தொடர்களில் முடிவெடுப்பதை எளிதாக்க உதவும். இது கடை நிலையில் உள்ளவர்களுக்கு சேவையை அளிப்பதின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது. இது மருத்துவ சேவை விநியோக அமைப்பைப் பாதிக்ககூடிய பிரச்சினைகளைக் களைகின்றது.

- **யானைகள் மறுவாழ்வு மையம்:**

- நாட்டில் முதன் முறையாக யானைகளுக்கான மறுவாழ்வு மையத்தை கேரளாவின் தலைநகரான திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள சுற்றுச்சூழல் சுற்றுலா கிராமமான கோட்டூரில் அமைக்கும் பணியில் கேரள அரசு ஈடுபட்டுள்ளது.
- இந்த மறுவாழ்வு மையமானது யானைகள் அருங்காட்சியகம், பாகன்களுக்கான பயிற்சி மையம், அனைத்து வசதிகளையும் கொண்ட கால்நடை மருத்துவம் மற்றும் யானைகள் தகன மையம் அகியவற்றைக் கொண்டிருக்கும்.
- இலங்கையில் உள்ள பின்னவாலா யானைகள் ஆதரவு மையத்தின் வரிசையில் இது திட்டமிடப்பட்டுள்ளது.

- **சந்திப்புரா வைரஸ்:**

- சமீபத்தில் குஜராத் மாநிலத்தில் சந்திப்புரா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது.
- இது முதன்முதலில் 1965 ஆம் ஆண்டில் மகாராஷ்ரா மாநிலத்தின் சந்திப்புரா கிராமத்தில் அடையாளம் காணப்பட்டது.
- இந்த வைரஸானது ராப்டோவிரிடியே குடும்பத்தின் வெசிகுளோவைரஸ் இனத்தின் உறுப்பினராகும்.

## ஒடிசாவில் கரியால் முதலைகள் பாதுகாப்பு:

- உயர் அச்சுறுத்தல் நிலையில் உள்ள “கரியால்”(Gharials) முதலை இனங்களின் எண்ணிக்கையை, அதன் இயற்கை வாழிடங்களில் அதிகப்படுத்துவதற்கான தனது முயற்சியை ஒடிசா அரசு புதுப்பித்துள்ளது.
- இது கதிர்வழி அலைசெலுத்துக் கருவி பொருத்தப்பட்ட 5 முதலைகளை மகாநதியின் சத்கோசி பள்ளத்தாக்கிற்குள் விடுவித்துள்ளது.
- கடல் முதலைகள் மற்றும் மற்ற முதலைகளுடன் ஒப்பிடும்போது, கரியால் முதலை மிக நீண்ட மற்றும் குறுகிய முன்மூக்கைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் மூன்று வகை முதலை இனங்கள் காணப்படுகின்றன, அவையாவன
    - கரியால் (ஆற்று நீர் முதலை)
    - உவர்நீர் முதலை
    - சதுப்பு நில முதலை
- இந்த மூன்று முதலை இனங்களையும் கொண்டுள்ள ஒரே இந்திய மாநிலம் ஒடிசா ஆகும்.

## யமுனை நீர்ப் பாதுகாப்புத் திட்டம்:

- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT - National Tribunal) தில்லி அரசின் யமுனை நீர்ப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் யினால் NGT பரிந்துரைக்கப்பட்ட இந்தத் திட்டமானது,“மாய்லி சீ நிர்மல் யமுனை புனரமைப்புத் திட்டம்” என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் பின்வருவனவற்றின் மூலம் குறிப்பாகக் கோடைக் காலத்தின் போத தேசியத் தலைநகரில் நீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - யமுனை - சமவெளிப் பகுதியில் நீர்ப் பாதுகாப்பு
    - நீர்த் தேக்கங்களைக் கட்டமைத்தல்.

## நாகாலாந்தின் பானோவ் ஜெ.ஜமீர் ஆணையம்:

- நாகாலாந்தின் பூர்வகுடி மக்களின் பதிவேட்டை (Register of Indigenous Inhabitants of Nagaland RIIN) உருவாக்குவதற்கான முறைகளை வடிவமைப்பதற்கு ஒரு ஆணையத்தை நாகாலாந்து அரசு அமைத்துள்ளது.
- இக்குழுவானது ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளரான பானோவ் ஜெ.ஜமீர் என்பவரின் தலைமையில் செயல்படவிருக்கின்றது.
- இது தகுதி நிலை, அடையாளச் சான்றிதழ்களாக எற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் RIINI செயல்படுத்துதல் தொடர்பான பிற பிரச்சனைகள் ஆகியவை குறித்துப் பரிந்துரைக்கும்.
- RIIN என்பது நாகாலாந்து மாநிலத்தில் உள்ள அனைத்துப் பூர்வகுடி மக்களின் பதிவேடாகும். இது தகுதியற்ற நபர்களை நீக்குகின்றது.
- நாகாலாந்து ஒரு முழு மாநிலமாக உருவாகிய தினமான 1963 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதிக்கு முன்னர் நாகாலாந்தில் குடியேறிய மக்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவிருக்கின்றனர்.

## ஆயுஷ் கூட்டமைப்பு:

- ஆயுஷ் கூட்டமைப்புத் திட்டத்தின் வளர்ச்சி மற்றும் திட்டமிடலுக்காக ஆயுஷ் அமைச்சகத்துக்குத் தொழில்நுட்ப ரீதியிலான ஆதரவை அளிக்க மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளது.
- இது ஆயுஷ் தகவல், சிறந்த ஆராய்ச்சி கல்வி பல்வேறு சுகாதார நலத் திட்டங்களை வழங்குதல் மற்றும் சிறந்த மருந்து ஒழுங்குமுறைகள் ஆகியவற்றின் டிஜிட்டல் மயமாக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மத்திய ஆயுர்வேதம் யோகா மற்றும் இயற்கை மருத்தும் யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி அமைச்சகமானது இணை அமைச்சரான தனிப் பொறுப்பு ஸ்ரீபத் நாயக் தலைமையில் செயல்படுகின்றது.

## ➢ வேளாண் துறையில் மாற்றம்:

- இந்திய வேளாண் துறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக முதல் அமைச்சகர்களைக் கொண்ட ஒரு உயர்நிலைக் குழுவை இந்தியப் பிரதமர் அமைத்துள்ளார்.
- இக்குழுவின் தலைவராக மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஷ் இருப்பார்.
- கர்நாடகா ஹரியானா அருணாச்சலப் பிரதேசம் குஜராத் உத்திப் பிரதேசம் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் வேளாண்மை கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கான மத்திய அமைச்சர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்.

## ➢ ஹஜ் ஒதுக்கீடு:

- மெக்கா புனிதப் பயணத்திற்காக இந்தியாவின் ஹஜ் ஒதுக்கீட்டை 30,000 நபர்களாக சவுதி அரேபியா அதிகரித்துள்ளது.
- இது சவுதி அரேபியாவின் ஹெஜாசிப் பகுதியில் உள்ள ஒரு நகரமாகும்.
- இது கடந்த 3 ஆண்டுகளில் 3-வது முறையாக பயணிகளின் ஒதுக்கீட்டை அந்த நாடு அதிகரித்துள்ளது.

## ➢ எக்யூப் திட்டம்

- மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் உயர் கல்வித் துறையானது கல்வித் தர மேம்படுத்துதல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் திட்டம்' என்ற ஒரு 5 ஆண்டு தொலைநோக்குத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்தியாவின் கல்வித்துறையைப் பின்வருமாறு மாற்றுவதை நோக்கமாக் கொண்டுள்ளது.

## ➢ ஸ்ட்ரம் அடாகர் ஏவுகணை:

- இந்திய விமானப் படையின் (IAF - Indian Air force) மிக 35 தாக்குதல் விமானங்களில் பொருத்துவதற்காக ஸ்ட்ரம் அடாகா ஏவுகணை என்ற ஒரு பிரங்கி எதிர்ப்பு ஏவுகணையை வாங்குவதற்காக ரஷ்யாவுடன் ரூ.200 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் இந்திய கையெழுத்திட்டுள்ளது.
- இது எதிரிநாட்டுப் பிரங்கிகள் மற்றும் ஆயுதங்கள் எதிர்ப்பதற்காக IAF யின் தாக்கதல் ரக விமானங்களுக்கு கூடுதல் வலிமையை அளிக்கும்.

## ➢ புதிய NIMZ:

- மத்திய வணிக மற்றம் தொழில்துறை அமைச்சர் 3 புதிய தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலங்களை (NIMZ - National investment and Manufacturing Zone) அமைப்பதற்காக தனது இறுதி ஒப்புதலை வழங்கியுள்ளார்.
- இந்த 3 புதிய NIMZகள் பின்வரும் இடங்களில் அமைக்கப்படவிருக்கின்றன.
  - கலிங்கா நகர் ஓடிசாவின் ஜஜப்பூர் மாவட்டம்
  - ஆந்திரப் பிரதேசத்தின் பிரகாசம் மாவட்டம்
  - தெலுங்கானாவின் சங்காரெட்டி மாவட்டம் (முன்னதாக மேக் மாவட்டம்)

- **NIMZ:**

- NIMZகள் என்பது 2011 ஆம் ஆண்டின் தேசிய உற்பத்திக் கொள்கையின் முக்கியக் கூறுகளில் ஒன்றாகும்.
- இவை உலகத் தரத்திலான உற்பத்தி வடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக தேவையான சூழல் அமைப்புடன் மேம்படுத்தப்பட்ட மிகப் பெரிய நிலப் பரப்புப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இது மாநிலங்களுடன் இணைந்து தொழிற்துறை வளர்ச்சியை மேற்கொள்ளுதல் என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்படுகின்றது.

- **மருத்துவரின் ஆலோசனையின்றி வழங்கப்படும் மருந்துகள்:**

- செப்டம்பர் 12 ஆம் தேதிக்குள் மருத்துவரின் ஆலோசனையின்றி வழங்கப்படும் மருந்துகளின் (OTC – Over the Counter)பகுதியளவுப் பட்டியலை மருத்துவர்கள் மற்றும் மருந்துத் தயாரிப்பாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசை தில்லி உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
- மருந்துகள் தொழில்நுட்ப ஆலோசனை வாரியம் (DTAB – Drugs Technical Advisory Board) அப்பட்டியலை இறுதி செய்து வெளியிடும் பணியை மேற்கொள்ளும்.
- ITC மருந்துகளின் பட்டியலானது பல சுகாதார நிலைமைகளை எளிதாகவும் வெற்றிகரமாகவும் கையாண்டு சிகிச்சைப் பெறுவதற்கு மக்களை அனுமதிக்கின்றது.

- **துணை இராணுவப் படைகளுக்கு முறைப்படுத்தப்பட்ட குரூப் A பணி அங்கீகாரம்:**

- மத்திய ஆயுதப் காவல் படையின் மூத்த அதிகாரிகளுக்கு முறைப்படுத்தப்பட்ட குரூப் A சேவைகள் (Organised Group A Service - OGAS) அங்கீகாரத்தை மத்திய அரசு வழங்கியது.
- மத்திய அமைச்சரவையானது செயல்பாட்டில் அல்லாத நிதி மேம்பாடு (NFFU – Non Functional Financial Upgradation) மற்றும் செயல்பாட்டில் அல்லாத தேர்வு நிலை (NFSG/Non Functional Selection Grade) ஆகியவற்றின் பயன்களை நீடித்துள்ளது.
- இது பின்வரும் 5 முதன்மையான மத்திய ஆயுதக் காவல் படைகள் அல்லது துணை இராணுவப் படைகளில் 2006 ஆம் ஆண்டிலிருந்துப் பணி ஓய்வ பெற்ற சில ஆயிரம் அதிகாரிகள் மற்றும் தற்போது பணியில் உள்ள 11,000 அதிகாரிகளுக்குப் பயனளிக்கும்.
  - மத்திய ரிசர்வ் காவற் படை
  - எல்லைப் பாதுகாப்புப் படை
  - மத்தியத் தொழில் பாதுகாப்புப் படை
  - இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை
  - சாஸ்திரா சீமா பால

- **கருடா –VI**

- இந்திய விமானப் படை (Indian Air force – IAF) மற்றும் பிரெஞ்சு விமானப் படை (French Air Force – FAF) ஆகியவை பிரான்சின் மாண்ட்டி மார்சனில் 'கருடா –VI' என்ற இருநாட்டு விமானப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன.
- IAF - FAFஆகியவற்றிற்கிடையேயான கூட்டப் பயிற்சியின் கடைசிப் பதிப்பானது 2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இராஜஸ்தானின் ஜோத்பூர் விமானப் படைத் தளத்தில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் 6 வரை இந்தக் கூட்டுப் பயிற்சியின் 6வது பதிப்புப் பயிற்சியானது நடைபெறுகின்றது.
- இது போன்ற பயிற்சியானது விமானப் பாதுகாப்பு மற்றும் தரையில் நிகழ்த்தப்படும் தாக்குதல் திட்டங்களில் பிரெஞ்சு மற்றும் இந்தியப் படை வீரர்களின் செயல்படும் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய சர்வதேசக் கூட்டுறவு வணிகக் கண்காட்சி:

- முதலாவது இந்திய சர்வதேசக் கூட்டுறவு வணிகக் கண்காட்சி (IICTF - India International Cooperatives Trade Fair) 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 11 முதல் அக்டோபர் 13 வரை புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.
- இது விவசாயிகள் கலைஞர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் இதர உறுப்பினர்களை சர்வதேச வணிகத் துறைக்கு எடுத்துச் செல்வதற்கான ஒரு தனித்துவ முன்னெடுப்பாகும்.
- இந்த நிகழ்வு பின்வரும் அமைப்புகளால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
  - ஆசியா மற்றும் பசிபிக்கில் உள்ள விவசாயக் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கான அமைப்பின் ஆதரவுடன் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (NCDC - National Cooperative Development Corporation)
  - மூன்று அமைச்சகங்கள்
  - 4 மாநில அரசுகள்
  - பல்வேறு உச்ச நிலையில் உள்ள இந்தியக் கூட்டுறவு அமைப்புகள்

## மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் கல்வி:

- யுனெஸ்கோ மற்றும் டாட்டா சமூக அறிவியல் நிறுவனம் ஆகிய இரண்டும் இணைந்து ‘2019 ஆம் ஆண்டில் இந்தியாவின் கல்வி நிலை குறித்த அறிக்கை மாற்றுத் திறனுடன் இருக்கும் குழந்தைகள்’ என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது 2011 ஆம் ஆண்டில் மக்கட் தொகைத் தகவலை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது. இது நாட்டில் 5 முதல் 19 வயது வரை 79 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாற்றுத் திறனுடன் குழந்தைகள் இருப்பதை காண்பிக்கின்றது.
- மேலும் இது இந்தியாவில் மாற்றுத் திறனுடன் இருக்கும் 27 சதவிகிதக் குழந்தைகள் பள்ளிக்குச் சென்றதே இல்லை என்று கூறுகிறது.
- இந்த அறிக்கை கல்வி உரிமைச் சட்டம், 2009 என்பதை மாற்றுத் திறனாளிகளின் உரிமைச் சட்டம் 2016 உடன் ஒன்றிப் பொருந்துவதற்காக திருத்தம் செய்ய பரிந்துரைக்கின்றது.

## மாலத்தீவிற்குக் கப்பல்:

- கடலின் மூலம் பயணிகள் மற்றும் சரக்கு சேவைகளை ஏற்படுத்துவதற்காக இந்தியா மற்றம் மாலத் தீவுகள் ஆகிய நாடுகளுக்கிடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை முன் கூட்டியே ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தக் கப்பல் சேவையானது கொச்சியை மாலத் தீவின் தலைநகரமான மாலி நகரத்துடனும் மாலத் தீவின் மூன்றாவது புகழ்பெற்ற நகரமான குல்குத்பூசி என்ற நகரத்துடனும் இணைக்கின்றது.
- இது இந்தியாவிற்கான சுகாதார நலச் சுற்றுலாவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- மாலத்தீவு தற்பொழுது விமானங்கள் மற்றும் கடல் விமானங்கள் மூலம் மட்டுமே இந்தியாவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## விவசாயத்திற்கான வாட்சன் தீர்வுத் தளம்:

- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகமானது ஐபிஎல் இந்தியாவுடனும் நோக்கத்திற்கான அறிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த இரண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் வேளாண் துறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் காலநிலைத் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்துவதற்காக ஒரு சோதனை முறையிலான ஆய்வை மேற்கொள்ளவிருக்கின்றன.

- விவசாயத்திற்கான ஐபிஎம்யின் வாட்சன் தீர்வுத் தளமானது கிராம் நிலையில் மற்றும் விவசாய நிலையில் தீர்வுகளை வழங்கும்.
- இந்தச் சோதனை ஆய்வானது போபால் மத்திய பிரதேசம், ராஜ்காட் குஜராத் மற்றும் நந்தேத் (மகாராஷ்டிரா) ஆகிய 3 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விருக்கின்றது.
- இந்த ஆய்வு 2019 ஆம் ஆண்டின் காரிப் பருவகாலப் பயிர்களை உள்ளடக்க விருக்கின்றது.

## குறைந்தபட்ச ஆதரவு அதிகரிப்பு:

- 2019-20 ஆம் ஆண்டிற்கான அனைத்து காரிப் (Khari) பயிர்களுக்கான குறைந்த ஆதரவு விலையை (MSP – Minimum Support Prices) அதிகரிப்பதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை (Cabinet Committee on Economic Affairs – CCEA) ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த ஆண்டிற்கான MSP– ஆனது இந்திய அளவில் சராசரி உற்பத்தி விலையை விட 1.5 மடங்கு அதிகமாகும்.
- விவசாயிகளின் உற்பத்திச் செலவை விட அவர்களுக்கு அதிக சதவிகிதத்திலான வருமானமானது கம்பு (85%). உளுந்து (64%) மற்றும் துவரம் பருப்பு (68%) ஆகிய பயிர்களில் அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டவாறு கிடைக்கின்றது.
- MSP நடைமுறையானது சிறு மற்றும் நடுத்தரப் பிரிவில் உள்ள ஏறத்தாழ 86 சதவிகித விவசாயிகளுக்கு நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டுகின்றது. இது விவசாயிகளிடையே நியாயத் தன்மையை உறுதி செய்கின்றது.
- மேலும் இது சந்தைகளில் விலைகளை நிலைப்புத் தன்மையுடன் இருக்கு உதவுகின்றது. இது நுகர்வோர்களுக்கும் பயனளிக்கின்றது.

## மின்மயமாக்கப்பட்ட இரயில்வே சுரங்கம்:

- தெற்கு மத்திய இரயில்வேயானது மிக நீளமான ‘ மின்மயமாக்கப்பட்ட இரயில்வேச் சுரங்கத்தை’ இந்திய இரயில்வேயுடன் இணைத்துள்ளது.
- 6.6 கிலோ மீட்டர் தொலைவிற்கு அமைந்துள்ள இந்த மின்மயமாக்கப்பட்ட இரயில்வேச் சுரங்கமானது ஆந்திரப் பிரதேசத்தின் செர்லோபல்லி மற்றும் ரப்பூரு நிலையங்களுக்கு இடையே அமைந்துள்ளது.
- இது புதிய ஆஸ்தியச் சுரங்க மாதிரியின்படி (NATM–New Austrian Tunneling Method)‘ குதிரை லாட’வடிவத்தில் கட்டமைக்கப்படுகின்றது.
- 11.25 மீட்டர் தொலைவு கொண்ட பீர்பாஞ்சல் இரயில்வேச் சுரங்கமானது இந்தியாவின் நீளமான இரயில்வேச் சுரங்கமாகும். மேலும் இது ஆசியாவின் இரண்டாவது நீளமான இரயில்வேச் சுரங்கமாகும்.

## தில்லி காவல் துறையில் மேற்கூரை சூரிய ஒளி:

- தில்லி காவல் துறையானது இந்திய சூரிய ஒளி சக்திக் கழகத்துடன் (SECI – Solar Energy Corporation of India) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது தில்லி நகரத்திலுள்ள காவல்துறைக் கட்டிடங்களில் 200ற்கும் மேற்பட்ட மேற்கூரை சூரிய ஒளி சக்தி அமைப்புகளை அமைக்கவிருக்கின்றது.

## SECL:

- SECIஎன்பது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகத்தின் கீழுள்ள ஒரு நிறுவனமாகும்.
- இது 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது தேசிய சூரிய ஒளித் திட்டத்தைச் செயல்படுத்துலுக்கான அரசின் தலைமை நிறுவனமாகும்.
- இது சூரிய ஒளித் துறைக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரே மத்திய பொதுத் துறை நிறுவனமாகும்.

### ➤ துவரைப் பருப்பு விலை நிலைப்புத் தன்மை:

- 2019-20 ஆம் ஆண்டிற்கான துவரைப்பருப்பு இறக்குமதியை 2 இலட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 4 இலட்சம் மெட்ரிக் டன்களாக அதிகரிக்க மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இது இருப்பில் உள்ள இலட்டசம் மெட்ரிக் டன்கள் துவரைப் பருப்பை விலை நிலைப்படுத்துதல்நிதியத்தின் (Price Stabilization Fund ) கீழ் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றிற்கு வழங்கும்.
- இந்த நடவடிக்கையானது 2018-2019 ஆம் ஆண்டில் துவரைப் பருப்பு உற்பத்தி வீழ்ச்சியை ஈடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்த நடவடிக்கையானது 2018-2019 ஆம் ஆண்டில் துவரைப் பருப்பு உற்பத்தி வீழ்ச்சியை ஈடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### ➤ பவள மறுவாழ்வுத் திட்டம்:

- தேசியக் கடலோர ஆராய்ச்சி மையமானது (National Centre for Coaster Research) நெகிழிக் கழிவுகளை ‘உருவாக்கப்பட்ட நெகிழிப் பாறைகள்’ அல்லது பலகைகளாக மாற்றுவதன் மூலம் நெகிழிக் கழிவுகளை அப்புறப்படுத்தப் பரிந்துரைத்துள்ளது.
- இது பவளப் பாறைகள் வளருவதற்காக கடற்பரப்பின் மீது அக்கழிவுகளை கிடத்தத் திட்டமிட்டுள்ளது.
- மன்னார் வளைகுடாவின் கடல்சார் தேசியப் பூங்கா இத்திட்டத்தை எதிர்த்து இருக்கின்றது. இது இத்திட்டத்தின் மூலம் பவளப் பாறைகள் அழிந்து விடும் என்று அஞ்சுகின்றது.
- இது 2002 ஆம் ஆண்டு முதல் பவள மறுவாழ்வு திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

### ➤ வங்க தேச அதிகாரிகளுக்கு முசோரியில் பயிற்சி:

- தற்பொழுது பகுதியளவு பணிக் காலத்தை நிறைவு செய்துப் பணியாற்றிக் கொண்டிருக்கும் 1800 வங்க தேச குடிமைப் பணி அதிகாரிகளுக்கு 201-2025ற்கு இடையிலான கால கட்டத்தில் முசோரியில் உள்ள தேசிய நல்லாட்சி’ மையத்தில் பயிற்சியளிக்கப்பட உள்ளது.
- 30 குடிமைப் பணி அதிகாரிகளைக் கொண்ட முதல் குழுவானது முசோரியில் 2 வாரம் நடைபெறக் கூடிய பயிற்சித் திட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றது. இக்குழு டாக்காவில் உள்ள இந்திய உயர் ஆணையர் அலுவலத்திற்குச் சென்றுள்ளது.
- இது இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### ➤ தரைப்படை இராணுவத்தில் பெண்கள் பிரிவு:

- முதன்முறையாக இந்திய இராணுவம் அதன் ராணுவக் காவல் படைக்கு (Corps of military Police CMP) 100 பெண் வீராங்கனைகளைச் சேர்த்துக் கொண்டு இருக்கின்றது.
- இது பின்வருவனவற்றிற்குத் திட்டமிட்டுள்ளது.

### ➤ அனல் காற்று முன்கணிப்பு:

- புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலையில் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அனல் காற்றைக் கண்காணிப்பதற்காக விரிவுபடுத்தப்பட்ட வரம்பு கொண்ட முன்கணிப்பு அமைப்பை மேம்படுத்தியுள்ளனர்.
- இது மூன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே அனல் காற்று குறித்தத் தகவல்களை அளிக்கும்.
- 2017 ஆம் ஆண்டிற்கு முன்பு இது போன்ற அமைப்பு பயன்பாட்டில் இல்லை
- 1981 முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான ஆய்வுத் தரவின்படி, இந்தியாவில் உள்ள இரண்டு பகுதிகள் அனல் காற்று பாதிப்பிற்கு உள்ளாகக் கூடியதாக இருக்கின்றன. அவையாவன:

- தெற்கு கடற்கரையோரப் பகுதிகள்
- வடமேற்கு இந்தியா

### யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய அங்கீகாரம் ஜெய்பூர்:

- 'மென்சிவப்பு நகரமான' ஜெய்ப்பூர் இந்தியாவின் 38வது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோவினால் அசர்பைஜானின் பாகுவில் நடைபெற்ற உலகப் பாரம்பரியக் குழுவின் 43வது அமர்வின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- கோவிந்த் தேவ் ஆலயம் நகர அரண்மனை ஜந்தர் மந்தர் மற்றும் ஹவா மகால் ஆகியவை ஜெயப்பூரில் உள்ள புகழ்பெற்ற தளங்களாகும்.
- ஜெய்ப்பூர் நகரமானது 1699 முதல் 1744 வரை ஜெய்ப்பூரை ஆட்சி செய்த மகாராஜா ஜெய்சிங் - II என்பவரினால் 1717 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

### கிசான் கடன் அட்டை திட்ட விரிவாக்கம்:

- கிசான் கடன் அட்டை திட்டத்தின் வசதியை மீன் வளர்ப்போருக்கும் கால்நடைவளர்ப்பு விவசாயிகளுக்கும் மத்திய அரசு விரிவாக்கும் செய்துள்ளது.
- இது அவர்களின் தொழிலுக்கான மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவும்.
- இந்த அட்டையின் வசதியின் கீழ் தற்போது அட்டை வைத்திருப்பவர்கள் அவர்களின் தொழில்களுக்கான மூலதன தேவையைப் பூர்த்தி செய்ய அதிகபட்சமாக 3 லட்சம் ரூபாய் வரை கடனாகப் பெறலாம்.

### ஜல் ஜீவன் திட்டம்:

- மத்திய நிதி அமைச்சர் 2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் 'ஜல் ஜீவன் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- குடிநீர் மற்றும் துப்பரவுத் துறையின் கீழ் செயல்படும் இந்தத் திட்டம் உள்ளூர் நிலையில் நீரின் ஒருங்கிணைக்கப்பட்ட தேவை மற்றும் விநியோக மேலாண்மையின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.
- இது நீரை விவசாயத்தில் மீண்டும் பயன்படுத்துவதற்காக வீட்டுக் கழிவுநீர் மேலாண்மை நிலத்தடி நீரை அதிகரித்தல் மற்றும் மழைநீர் சேகரிப்புப் போன்ற உள்ளூர் கட்டமைப்புகளை ஏற்படுத்துவது ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

### வருடாந்திர நிதிநிலை அறிக்கை 2019-2020:

- நரேந்திர மோடியின் இரண்டாம் பதவிக் காலத்தல் முதல் வருடாந்திர நிதிநிலை அறிக்கையை ஜுலை 05 அன்று நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.
- காவோன், காரிப் மற்றும் கிசான் (கிராமம், வறுமை மற்றும் விவசாயி) என்பவை நரேந்திர மோடியின் இரண்டாம் அரசின் அனைத்துக் கொள்கைகளுக்கும் மையமாக உள்ளது.
- இது 89-வது மத்திய வருடாந்திர நிதிநிலை அறிக்கை ஆகும்.
- இது 1991 ஆம் ஆண்டின் பொருளாதார தாராளமயமாக்கத்திற்குப் பிந்தைய காலத்தில் இடைக்கால நிதி நிலையறிக்கைகள் நீங்கலாக 29-வது வருடாந்திர நிதிநிலை அறிக்கை ஆகும்.
- சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மத்திய வருடாந்திர நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த இரண்டாவது பெண்மணி என்ற பெருமையை நிர்மலா சீதாராமன் பெற்றுள்ளார்.
- இதுவரை மத்திய வருடாந்திர நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த ஒரே பெண்மணியாக முன்னாள் பிரதமரான இந்திரா காந்தி இருந்தார்.

- 1970 ஆம் ஆண்டில் நிதியமைச்சரான மொரார்ஜி தேசாய் பதவி விலகியதையடுத்து நிதித் துறையையும் நிர்வகித்த இந்திரா காந்தி 1970-71 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

## பொருளாதார ஆய்வறிக்கை:

- பொருளாதார ஆய்வறிக்கையானது ஜூலை 04 அன்று மத்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
- இந்த ஆய்வறிக்கையானது தலைமைப் பொருளாதார ஆலோசனைரான கிருஷ்ணமூர்த்திரி V. சுப்பிரமணியனால் தயாரிக்கப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி இந்தியாவானது காற்றாலை மின் உற்பத்தியில் 4வது இடத்திலும் சூரிய மின்னாற்றல் உற்பத்தியில் 5ஆம் இடத்திலும் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனில் 5-வது இடத்திலும் உள்ளது.

## முக்கிய குறிக்கோள்கள்:

- 2024-25 ஆம் ஆண்டு வாக்கில் 5 டிரில்லியன் டாலர்கள் என்ற பொருளாதார மதிப்பை அடைய நீடித்த அளவில் 8% என்ற விகிதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உண்மையான வளர்ச்சி விகிதம் தேவைப்படுகின்றது.
- இது பின்வரும் இலக்குகளைத் திட்டமிட்டிருக்கின்றது.
- 'பேட்டி பச்சாவோ படாவோ' என்பதிலிருந்து பத்லாவ் (BADLAV – Neti Aapki Dhan Lakshmi Aur Vijay Lakshmi– பெண் குழந்தை உங்களின் தனலெட்சுமி மற்றம் விஜயலட்சுமி என்ற திட்டத்திற்க மாறுதல்.
- தூய்மை பாரதத்திலிருந்து அழகு பாரதத்திற்கு மாறுதல்
- சமையல் எரிவாயு மானியத்திற்கான 'விட்டுக் கொடுங்கள்' எனும் கொள்கையிலிருந்து ' மானியத்தைக் குறித்து சித்தியுங்கள்' எனும் கொள்கைக்கு மாறுதல்.
- வரி ஏய்ப்பிலிருந்து வரி இணக்கத்திற்கு மாறுதல்.

## மாநிலங்களவையில் ஜெய்சங்கர்:

- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான டாக்டர் S. ஜெய்சங்கர் மாநிலங்களவையில் உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுத்தார்.
- இவர் குஜராத்திலிருந்து மாநிலங்களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- நாடாளுமன்றத்தின் உறுப்பினராவதற்குரிய தகுதி நிலைகள் இந்திய அரசியலமைப்பின் 84வது விதியில் கூறப்பட்டுள்ளன.
- 1977வது ஆண்டைச் சேர்ந்த இந்திய அயல்நாட்டுப் பணி அதிகாரியான சுப்பிரமணியம் ஜெய்சங்கர் 2017 ஆம் ஆண்டில் சீனாவுடன் ஏற்பட்ட டோக்லாம் மோதல்களுக்கு தீர்வு காண்பதில் முக்கியப் பங்காற்றினார்.
- மேலும் இவர் இந்தியா மற்றம் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே முக்கிய ஒப்பந்தமான அணு ஆயுத ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையிலும் பங்கு கொண்டிருந்தார்.

## காஷ்மீர் முதலீட்டாளர்கள் மாநாடு:

- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் அக்டோபர் மாதத்தில் ஸ்ரீ நகர் மற்றும் ஜம்மு ஆகிய பகுதிகளில், தனது முதலாவது முதலீட்டாளர் மாநாட்டை ஜம்மு காஷ்மீர் மாநிலம் நடத்தவிருக்கின்றது.
- சுற்றுலாவுடன் சேர்த்து, தோட்டக் கலை மற்றம் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றுடன் சேர்த்து மின்சக்தி மற்றும் உற்பத்தி துறை ஆகியவற்றிலும் கூடுதல் இங்கு செலத்தப்படக்கின்றது.

## ➢ தேசிய முதலிடு மற்றும் கட்டமைப்பு நிதி:

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக தேசிய முதலீடு மற்றும் உள்கூட்டமைப்பு நிதியத்துடன் (National Investment and Infrastructure Fund NIIF) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.
- NIIF ஆனது முதலீட்டாளர்களுக்குச் சொந்தமான நிதி மேலாண்மை அமைப்பாகும்.
- இது 40000 கோடி ரூபாய் திட்டமிடப்பட்ட தொகுப்புடன் 2016 ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது.
- நாட்டின் உள்கட்டமைப்புத் துறைக்கு நீண்டகால மூலதனத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## ➢ படேல் சிலை அருகே நடைபெறவிருக்கும் கருத்தரங்கு:

- முதன்முறையாக வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் வருடாந்திர திட்டத் தலைவர்களின் கருத்தரங்கானது குஜராத்தின் நர்மதை மாவட்டத்தில் உள்ள படேலின் ஒற்றுமைக்கான சிலை அருகே நடைபெறவிருக்கின்றது.
- மாநிலக் காவல்துறை பொது இயக்குநர்களின் வருமாந்திரக் கருத்தரங்கு இதே இடத்தில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- 'சர்தார் வல்லபாய் படேல்' இந்தியாவின் பிஸ்மார்க் என்று அழைக்கப்படுகின்றார்.

## ➢ மழை நீர் சேகரிப்புப் பிரிவு:

- ஜல் சக்தி அபியான் பிரச்சாரத்தின் முதல் நிலையில் ஒரு பகுதியாக (ஜூலை 01- செப்டம்பர் 15), நகர நீர்ப் பாதுகாப்பிற்கான வழிகாட்டுதல்களை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இது மழைநீர் சேகரிப்பைக் கண்காணிப்பதற்காக ஒரு பிரிவை அமைக்குமாறு நாட்டில் உள்ள அனைத்து நகராட்சி அமைப்புகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்த பிரிவானது நிலத்தழ நீர் உறிஞ்சப்படும் அளவு மற்றும் நிலத்தடி நீர் அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்காணித்து, இதன் தரவுகளை முக்கியமான பொது வெளிகளில் காட்சிப்படுத்த வேண்டும்.

## ➢ கௌஷல் யுவா சாம்வாத் - இளைஞர்களுக்காக உரையாடல்:

- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகமானது கௌஷல் யுவா சாம்வாத் எனும் இளைஞர்கள் உரையாடல் முன்முயற்சியைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது.
- இது அனைத்துத் திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களிலும் உள்ள இளைஞர்களிடமிருந்து நேரடி கருத்துருக்களைச் சேகரிப்பதும் அதனைத் திட்டங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்த பயன்படுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.
- இது 2019 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று உலக இளைஞர்களின் தினத்தை நினைவு கூறும் விதமாகவும் திறன் இந்தியா திட்டத்தின் 4வது ஆண்டு ஜூலை 15 அன்று தொடங்கப்பட்டது.
- தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டமானது 2015 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று தொடங்கப்பட்டது.

## ➢ பாகிஸ்தானின் பொருட்களுக்கு 200% வரி:

- பாகிஸ்தானில் இருந்து உற்பத்தியாகும் அல்லது ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் வரித் தீர்வை விதிக்க பாராளுமன்றமானது ஒரு சட்டப்பூர்வமான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- சட்டப்பூர்வமான தீர்மானம் என்பது அரசியலமைப்பில் உள்ள ஒரு விதிமுறை அல்லது பாராளுமன்றச் சட்டத்தின் படி நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும்.
- 200% சுங்கவரி வசூலிப்பதற்கான முடிவானது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் நாள் எடுக்கப்பட்டது.

- **இந்திய சினிமா அருங்காட்சியகத்தின் அறிக்கை:**

- இந்திய சினிமாவின் தேசிய அருங்காட்சியகத்தின் திரைப்படப் பிரிவானது 'NMIC' (Natural Museum of Indian Chennai) எனம் பதினைந்து நாட்களுக்கொரு முறை வெளிவரும் செய்தி அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நாட்டின் முதல் தேசியத் திரைப்பட அருங்காட்சியகமானது 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கப்பட்டது. இது மும்பையின் குல்ஷன் மஹாலில் அமைந்துள்ளது.
- இது 100 ஆண்டுகளாகப் பரந்து விரிந்திருக்கம் இந்திய சினிமாவின் வளமான பாரம்பரியத்தைக் காட்டுகிறது.

- **நாக் ஏவுகணை சோதனை:**

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது பொக்ரான் சோதனை தளத்தில் நாக் எவுகணைகளின் 3 சோதனைகளை பகல் மற்றும் இரவு நேரங்களில் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்த வெற்றிகரமான சோதனைகள் மூலம் நாக் வழிகாட்டும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையானது இராணுவத்தில் சேர்க்கப்படுவதற்கான இறுதிக் கட்டத்தில் உள்ளது
- நமிஸ் (NAMIS) அமைப்பில் 3 ஆம் தலைமுறை வழிகாட்டப்படும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை நாக் மற்றும் ஏவுகணையைச் சுமந்து செல்லும் வாகனம் ஆகியவை உள்ளடங்கும்.

- **இந்தியா - ராஷ்யா மூலொபாய பொருளாதார உரையாடல்:**

- இரண்டாவது இந்தியா – ராஷ்யா மூலோபாய பொருளாதார உரையாடல் ஆனது புதுடெல்லியில் நடத்தப்பட்டது.
- நிதி ஆயோக்கின் துணைத் தலைவரான ராஜீவ் குமாரால் இந்தியா பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.
- இந்த உரையாடல் அமைப்பானது நிதி ஆயோக் மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பின் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிறுவப்பட்டது.
  - இது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 05 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற வருடாந்திர இந்திய – ரஷ்யா இருதரப்பு மாநாட்டின் 19-வது பதிப்பின் போது தொடங்கப்பட்டது.
- இதன் முதல் கலந்துரையாடல் கூடுகையானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் 25-26 ஆகிய தேதிகளில் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் நடைபெற்றது.

- **துறைமுக ஒருங்கிணைப்புப் பிரச்சாரம்:**

- கடல்சார் ஊழல் தடுப்பு அமைப்பானது இந்தியாவில் துறைமுக ஒருங்கிணைப்புப் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
- இந்திய துறைமுகங்களில் செயல்பாடுகிளல் போது வர்த்தகம் செய்வதில் ஏற்படும் ஒருங்கிணைப்புப் பிரச்சனைகள் மற்றும் தடைகளை ( நீண்டகால அளவில்) அகற்றுவதே இதன் நோக்கமாகும்.
- கடல்சார் ஊழல் தடுப்பு அமைப்பானது கடல்சார் தொழில்களில் ஊழலை எதிர்கொள்வதற்காக 110-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இணைந்து பணிபுரியும் உலகளாவிய வணிக அமைப்பாகும்.
- கப்பல்துறை அமைச்சகம் இதற்கு பொறுப்புடையதாகும்.

- **ரெக்ஹைன் மாநில மேம்பாட்டுத் திட்டம் - மியான்மர்:**

- ரெக்ஹைன் மாநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரெக்ஹைன் மாநிலத்திற்காகக் கட்டப்பட்ட 200 வீடுகளை மியான்மரிடம் இந்தியா ஒப்படைக்கவுள்ளது.
- 2017-ன் பிற்பகுதியில் மியான்மரின் ரெக்ஹைன் மாநில மேம்பாட்டுத் திட்டத்தில் இந்தியா கையொப்பமிட்டது.
- இந்தத் திட்டமானது இடம்பெயர்ந்தோருக்கான வீட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரெக்ஹைன் மாநிலத்தில் உள்ள மியான்மர் அரசிற்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டது.

- ஆகஸ்ட் 2017 முதல் 7 லட்டசத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மையின் ரோஹிங்கியா இஸ்லாமியர்கள் மியானமரின் ரெக்ஹைன் மாநிலத்திலிருந்து அண்டை உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டது.
- ஆகஸ்ட் 2017 முதல் 7 லட்டசத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மையின் ரோஹிங்கியா இஸ்லாமியர்கள் மியான்மரின் ரெக்ஹைன் மாநிலத்திலிருந்த அண்டை நாடான வங்காள தேசத்திற்குத் தப்பிச் சென்று மாபெரும் அகதிகள் நெருக்கடியைத் உருவாக்கினர்.

## ➢ ஆதார் மசோதா:

- 2019 ஆம் ஆண்டின் ஆதார் மற்றும் இதர சட்டங்களின் திருத்தத்திற்கான மசோதாவானது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் 2019 ஆம் ஆண்டு ஜுலை 08 அன்று நிறைவேற்றப்பட்டது.
- இந்த திருத்தங்களானது நீதிபதி 8N ஸ்ரீ கிருஷ்ணா குழுவின் ஆதார் மீதான திருத்தங்களுக்கான பரிந்துரைகளின் அடிப்படையிலும் தனியுரிமை (அந்தரங்க உரிமை) மீதான உச்சநீதிமன்ற உத்தரவின் வழிகாட்டுதல்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இது கீழ்க்காணும் சட்டங்களில் திருத்தம் செய்கின்றது.
    - ஆதார் (நிதி மற்றம் பிற மானியங்கள், நன்மைகள் மற்றும் சேவைகளின் இலக்கு நோக்கிய விநியோகம்) சட்டம் - 2016
    - இந்திய தந்திச் சட்டம் - 1885
    - பண மோசடி தடுப்புச் சட்டம் - 2002

## ➢ முக்கிய திருத்தங்கள்:

- நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தால் அனுமதிக்கப் படாவிடில் எந்தவொரு நபரும் ஆதார் எண்ணை வைத்திருப்பதற்கான ஆதாரத்தை வழங்கவோ அல்லது தனது அடையாகத்தை உறுதி செய்யும் நோக்கத்திற்காக சோதனையை ஏற்கவோ கட்டாயப்படுத்தப்படவோ மாட்டார்.
- வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கு தன்னார்வ அடிப்படையிலான அங்கீகாரத்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய KYC (Know Your Customer) ஆவணமாக ஆதார் எண்ணைப் பயன்படுத்த இது அனுமதிக்கின்றது.
- இது குழந்தைகள் 18 வயதை எட்டும் போது பயோ மெட்ரிக் (உடல் அங்கங்கள்) அடையாளத் திட்டத்திலிருந்து வெளியேறுவதற்கான விருப்பத் தெரிவை வழங்குகின்றது.
- ஆதார் உறுதிச் சோதனை மறுப்பு அல்லது உறுதி செய்ய முடியாமல் போனதற்காக சேவைகளை வழங்க மறுப்பதை இது தடை செய்கிறது.
- இது இந்திய தனித்தவ அடையாள ஆணைய நிதியம் நிறுவப்படுவதற்க வழி வகுக்கின்றது.
- இது குடிமை அபராதங்கள் அதன் தீர்ப்புகள், ஆதார் சட்டத்தின் மீறல்கள் தொடர்பான மேல்முறையீடு மற்றும் ஆதார் சூழல் அமைப்பில் உள்ள நிறுவனங்களுக்கான விதிகளை உள்ளடக்கியது.

## ➢ பிலிப் காம்போஸ் நிபுணர் பணிக் குழு:

- பாதுகாப்பு அமைச்சரான ராஜ்நாத் சிங் பிலிப் காம்போஸ் நிபுணர் பணிக் குழுவின் பரிந்துரைகளை மீளாய்வு செய்யும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- வெடிமருந்து விபத்துகளைத் தடுக்கவும் அதன் விளைவுகளைக் குறைப்பதற்குமான வழிமுறைகளை உருவாக்க இந்த பணிக் குழு அமைக்கப்பட்டது.
- பாதுகாப்பு அமைச்சர் இதன் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கினார்.

## ➢ விவசாயிகளுக்கு நேரடி பயன் பரிமாற்றம் 2.0:

- இரசாயனங்கள் மற்றும் உரத் துறை அமைச்சகமானது உர மானியங்களுக்கான நேரடி பயன் பரிமாற்றத்தின் (DBT – Direct Benefit Transfer) 2-ம் கட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- இது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கசிவுகள், சிறு திருட்டுகள் மற்றும் கறுப்பு சந்தைப்படுத்துதல் ஆகியவற்றைத் தடுக்கவும் அதன் மூலமாக விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்குமான ஒரு படியாகும்.
- இரண்டாம் கட்ட DBTயின் வசதிகள்:
    - DBT முகப்பு பலகை – உர இருப்பு நிலை தொடர்பான நிகழ்நேர அறிக்கைகள்
    - விற்பனை முனை (PoS – Point of Sale) 3.0 மென்பொருள் - DBT மென்பொருளில் பதிவு, உள் நுழைவு மற்றும் விற்பனை நடவழக்கைகளை எளிதாக்ககிறது.
    - மேசைக் கணினி PoS பதிப்பு – அவசர நிலையை நிர்வகிக்கPOS சாதனங்களுக்கு மாற்றாக அல்லது கூடுதல் வசதியாக இது உள்ளது.
- இவை இரண்டுமே பன்மொழிப் பதிப்புகளில் கிடைக்கின்றன.

➢ **பவன் ஹன்ஸ் ஹெலிகாப்டர்:**

- பவன் ஹன்ஸ் நிறுவனத்தில் முதலீட்டைத் திரும்பப் பெறுவதற்கான புதிய மூலோபாய ஏல ஆவணத்தை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- தற்போது இதன் மொத்த பங்குகளில் 51%அரசிடமும் 49%ONGC நிறுவனத்திடமும் உள்ளன.
- 1985ல் தொடங்கப்பட்ட இந்த பவன் ஹன்ஸ் ஒரு மினி ரத்னா – 1 வகை பொதுத்துறை நிறுவனமாகும்.
- இது பல்வேறு மாநில அரசகளுக்கு குறிப்பாக வடகிழக்கு மாநிலங்கள், லட்சத்தீவு மற்றம் மினிக்காய் தீவுகள் வைஷ்ணவி தேவி ஆலயம் உள்ளிட்ட பகுதிகளுக்கு ஹெலிகாப்டர் சேவைகளை வழங்குகின்றது.
- இந்நிறுவனத்தின் விளம்பர முழக்கம் ‘நாங்கள் உங்களுக்காகப் பறக்கின்றோம்’ என்பதாகும்.

➢ **ரக்சா கியான் சக்தி திட்டம்:**

- ரக்சா கியான் சக்தி திட்டத்திற்கு பெரிய அளவில் ஊக்கவிக்கும் வகையில் அறிவுசார் சொத்துரிமை ஏற்பாட்டுப் பிரிவிற்கும் பாதுகாப்பு உற்பத்தி மற்றும் தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- ரக்சா கியான் சக்தி திட்டம் என்பது இந்தியப் பாதுகாப்பச் சாதன உற்பத்தி சுற்றுசசூழல் அமைப்பில் அறிவுசார் சொத்துரிமை கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 1000க்கும் மேற்பட்ட புதிய காப்புரிமை விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய அறிவுசார் சொத்துரிமை ஏற்பாட்டு பிரிவு வசதி செய்துள்ளது.
- பாதுகாப்புத் துறையில் தன்னிறைவு அடைவதற்கான புதிய யோசனைகள் மற்றும் புத்தாக்கங்களை முழுமையாகப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும்.

➢ **தாகம் நடவடிக்கை:**

- ரயில்வே பாதுகாப்புப் படையானது ‘தாகம் நடவடிக்கை’ எனும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ரயில்களிலும், ரயில் நிலையங்களிலும் அங்கீகரிக்கப்படாத குடிநீரை விற்பனை செய்வதைத் தடுக்கும் அகில இந்திய அளவிலான செயல் திட்டம் இதுவாகும்.
- ரயில்வே சட்டத்தின் 144, 153 பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்படாத குடிநீர் பட்டிகள் அப்போது பறிமுதல் செய்யப்பட்டன.

➢ **பல பரிமாண வறுமைக் குறியீடு - 2019:**

- ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்முயற்சி ஆகியவற்றில் இணைந்து 2019 ஆம் ஆண்டின் பல பரிமாண வறுமையின் குறியீடு வெளியிடப் பட்டுள்ளது.

- 2006 ஆம் ஆண்டு முதல் 2016 வரை இந்தியா 271 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளதை இக்குறியீடு சுட்டிக் காட்டியுள்ளது.
- இந்தியாவில் ஜார்க்கண்ட் மாநிலமானது மிக உயர்ந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.
- ஜார்க்கண்ட மாநிலத்தின் பல பரிமாண வறுமைக் குறியீடு 2005-2006 ஆம் ஆண்டுகளில் இருந்த 74.9% லிருந்து 2015-16 ஆண்டுகளில் 46.5% ஆக குறைந்துள்ளது.

## தேசியப் பசுமைத் தீர்ப்பாயம்:

- ‘தானாக முன் வந்து (Suo – moth)வழக்கினை எடுத்து விசாரிக்கும் அதிகாரம் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்திற்கு (NGT – National Green Tribunal) உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்ய அந்திய உச்ச நீதிமன்றம் ஒப்புப் கொண்டுள்ளது.
- NGT என்பது பல்துறைப் பிரச்சனைகள் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சனைகளக் கையாளுவதற்குத் தேவையான வல்லுநர்களைக் கொண்ட ஒரு சிறப்பு அமைப்பாகும்.
- இது தேசியப் பசுமைத் தீர்ப்பாயச் சட்டம், 2010ன் கீழ் 2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம், 1908-ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அனைத்து அதிகாரங்களையும் NGT பெற்றுள்ளது.
- இது சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து எழும் அனைத்து உரிமையியல் வழக்குகளின் மீதும் நேரடி அதிகார வரம்பை கொண்டுள்ளது.

## ஸ்வாதர் கிரே திட்டம்:

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது கடினமான சூழ்நிலைகளில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு வசதி அளிப்பதற்காக ஸ்வாதர் கிரே’ எனும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.
- எந்தவொரு சமூக மற்றம் பொருளாதார ஆதரவும் இல்லாத சூழ்நிலையில் உள்ள பெண்கள், வீட்டு வன்முறை, குடும்ப பிரச்சனைகள் மற்றும் இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.
- மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளின் உதவியுடன் நிர்பயா கட்டமைப்பின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக ஒற்றை உதவி மையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.
- இது தேவைப்படும் பெண்களுக்குத் தற்காலிகத் தங்குமிடம், காவல்துறை வசதிகள் மற்றும் மருத்துவ உதவி உள்ளிட்ட பிற வசதிகளுடன் சட்ட மற்றும் உளவியல் சமூக ஆலோசனைகளை ஒருங்கிணைந்த முறையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மகப்பேறு அறையின் தர மேம்பாட்டு முயற்சி - லக்சயா:

- மத்திய அரசானது லக்சயா (Laoshya – Labour room Quality improvement initiative / லக்சயா – மகப்பேறு அறையின் தர மேம்பாட்டு முயற்சி) எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது பொது சுகாதார மையங்களில் மகப்பேறு அறை மற்றும் அறுவை சிகிச்சை அரங்கு ஆகியவற்றில் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது மகப்பேறு அறை மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்குகளில் மகப்பேறு சுகாதாரத்தின் பராமரிப்புத் தொடர்புடைய கர்ப்பிணிப் பெண்கள் இறப்பு மற்றும் குழந்தைகள் இறப்பு, நோயுற்றத் தன்மை, கருவில் குழந்தைகள் இறப்பு ஆகியவற்றைக் குறைப்பதையும் மகப்பேறுப் பராமரிப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கங்கை டால்பின் சரணாலயம்:

- விக்ராமஷீலா கங்கை டால்பின் சரணாலயத்தில் (VGDS - Vikramshila Gangetic Dolphin Sanctuary) கங்கை நதி டால்பின்களைப் பாதுகாப்பதற்காகப் புதிய விதிமுறைகளை மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- VGDSஆனது பீகாரின் கங்கை நதியின் மீது சுல்தான்கஞ்ச்சிலிருந்த காஹல்கஞ்ச் வரை பரவியுள்ளது நாட்டில் உள்ள ஒரே டால்பின் சரணாலயம் இதுவாகும்.
- மேற்கு வங்கத்தின் ஹால்டியாவையும் உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியையும் இணைக்கக் தேசிய நீர்வழிப் பாதை - 1 ஆனது VGDS வழியாகச் செல்கிறது.
- கப்பல்களின் வேகக் கட்டுப்பாடு நச்சுத் தன்மையற்ற சாயங்களைப் பயன்படுத்துதல், கப்பலில் சுழலும் இயந்திரத்தில் பாதுகாப்புக் கலனைப் பொருத்துதல் ஆகியவை இந்த கங்கை நதி டால்பின்களைப் பாதுகாப்பதற்கான எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளாகும்.

## கர்தார்பூர் சாஹிப் ஒப்பந்தம்:

- கர்தார்பூர் சாஹிப்பின் கருத்வாராவிற்கு இந்தியப் புனிதப் பயணிகள் ஒரு ஆண்டு காலத்திற்கு நுழைவு இசைவும் இல்லாமல் வர பாகிஸ்தான் ஒப்புக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் வாகாவில் நடைபெற்ற 2வது முறைசார் சந்திப்பின் போது மேற்கொள்ளப்பட்டது.
- ஆண்டு முழுவதும் கர்தார் சாகிப்பிற்க ஒரு நாளைக்கு 5000 புனிதப் பயணிகள் அனுமதிக்கப்படுவர்.
- முதல் சார்ந்த பெருவழைப் பாதை வழியாக புனிதப் பயணிகள் பயணிப்பதற்கு அனுமதி முறைக்கான விதிமுறை ஒன்று இருக்கம்.
- குருத்வாரா தர்பார் சாஹிப் ஆனது பாகிஸ்தானின் கர்தார்பூரில் அமைந்மதள்ளது.
- இங்கு முதலாவது சீக்கிய குருவான (நானக் தேவ்) சீக்கிய சமூகத்தை ஒன்றாக இணைத்தார் 1539 ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை, ஏறத்தாழ 18 ஆண்டுகள் அவர் இங்கு வாழ்ந்தார்.
- மேலும் கருநானக் இறந்த பின் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடமும் இதுவாகும்.

## பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம்:

- 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் 2019 ஆம் ஆண்டு மார்ச் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பிரதம மந்திரி ரோஜ்கர் புரோடச்கன் யோஜனா (PMRPY – Pradhan Mantri Rojgar Protsahan Yojana)என்ற திட்டத்தின் கீழ் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலையின் இணைந்துள்ளனர்.
- மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களிலிருந்து 57 சதவிகிதம் நபர்கள் தொழிலாளர் சக்தியில் இணைந்துள்ளனர்.
- PMRPY திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகளுக்கு அனைத்துத் துறைகளிலும் உள்ள அனைத்து தகுதி வாய்ந்த புதிய தொழிலாளர்களுக்கம் தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் ஒய்வூதியம்த் திட்டம் ஆகியவற்றிற்கான பணியளிப்பவரின் ஒட்டுமொத்தப் பங்களிப்பினையும் (12 சதவிகிதம் அல்லது தகுந்தாற்போல்/ அரசே செலுத்துகின்றது.
- PMRPYஆனது வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக பணியளிப்பவர்கள் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## GSLV மாக் 3 சந்திரயான் 2 விண்கலன்:

- ஜிஸ்எல்வி மாக் 3 ஏவு வாகனத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சந்திராயன் - 2 செலுத்துதலானது தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.
- இஸ்ரோவின் மிகவும் சக்தி வாய்ந்த மற்றும் சமீபத்திய விண்கலன் ஜிஎஸ்எல்வி மாக் - 3 ஆகும்.

- இதுவரை இரண்டு முறை செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணுக்கு இது கொண்டுச் சென்றுள்ளது.
- இது பின்வருவனவற்றால் இயக்கப்படுகின்றது.
  - முக்கிய திரவ என்ஜின்
  - இரண்டு திட உந்துகலன்கள்
  - கிரையோஜெனிக் என்ஜின்
- கிரையோஜெனிக்ஸ் என்பது குறைந்த வெப்பநிலையில் பொருட்களின் செயல்படும் விதம் குறித்த அறிவியலாகும்.
- ஜிஎஸ்எல்வி விண்கலன்கள் அதிக எடையுள்ள செயற்கைக் கோள்களைக் தாங்கி விண்வெளியின் தொலைதூர பகுதிக்குப் பயணிக்கும் திறன் கொண்டது.

### ➢ தேசியப் புலனாய்வு அமைப்பு (திருத்த) மகோதா:

- மக்களவையானது 2019 ஆம் ஆண்டின் தேசியப் புலனாய்வு அமைப்பு (NIA – National Investigation Agency) திருத்தம் மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- பின்வரும் குற்ற வழக்குகள் NIA வினால் விசாரணை செய்ய முடியும்
  - ஆள் கடத்தல்
  - போலி செய்யப்பட்ட மற்றும் வங்கிய பணம் தொடர்பான குற்றங்கள்
  - தடை செய்யப்பட்ட ஆயுதங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை இணைய வழிக் குற்றம்
  - வெடி பொருள் சட்டம், 1908 –ன் கீழுள்ள குற்றங்கள்
- இந்தியா முழுவதும் இதுபோன்ற குற்றங்களை விசாரிப்பது தொடர்பான மற்ற காவல் துறை அதிகாரிகளைப் போல NIAஅதிகாரிகளும் அதிகாரங்களைக் கொண்டு இருப்பர்.
- இந்த வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக அதற்கான சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் நீதிபதிகளின் நியமானங்கள் இடமாறுதல்/தாமதம் ஆகியவற்றின் மூலம் இந்த வழக்குகள் தாமதமாகாது.
- வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் சொத்துகள் மற்றும் இந்தியத் தூதரங்களுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் குறித்தும் இந்த அமைப்பு விசாரிக்கும்.

### ➢ NIA:

- NIAஆனது மத்திய தீவிரவாதத் தடுப்புச் சட்ட அமலாக்க அமைப்பாக செயல்படுவதற்கு 2008 ஆம் அண்டில் அமைக்கப்பட்டது.
- மாநிலங்களில் இருந்து சிறப்பு அனுமதி இல்லாமல் மாநிலங்களில் தீவிரவாதம் தொடர்பான குற்றங்களை விசாரிக்க இந்த அமைப்புக்கு அதிகாரம் உள்ளது.

### ➢ மத்தியப் பல்கலைக் கழகங்கள் (திருத்த) மசோதா, 2019:

- மத்தியப் பல்கலைக் கழகங்கள் (திருத்த) மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.
- இது பல்வேறு மாநிலங்களில் கறிபித்தல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்காகப் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த வழிவகை செய்யும் மத்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டம், 2009ஐ திருத்தம் முனைகின்றது.
- இந்த மசோதா ஆந்திரப் பிரதேசத்தில் இரண்டு மத்தியப் பல்கலைக் கழகங்களின் உருவாக்கத்திற்கு வழிவகை செய்கின்றது.
  - ஆந்திரப் பிரதேச மத்தியப் பல்கலைக் கழகம்
  - ஆந்திரப் பிரதேச மத்தியப் பழங்குடியினப் பல்கலைக் கழகம்

- இதன் மூலம், கோவாவைத் தவிர இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் மத்தியப் பல்கலைக் கழகங்களைக் கொண்டு இருக்கின்றன.

## ➢ குல்பூஷன் ஜாதவ் - பன்னாட்டு நீதிமன்றம்:

- இந்திய உளவாளி என்று குற்றம் சாட்டப்பட்ட குல்பூஷன் ஜாதவ் என்பவரின் தண்டனைக்கான உத்தரவை மறு ஆய்வு செய்யுமாறு பன்னாட்டு நீதிமன்றம் (International Court of Justice – ICI) பாகிஸ்தானை அறிவுறுத்தியுள்ளது. இந்நீதி மன்றம் இவரின் தூக்கு தண்டனையையும் நிறுத்தி வைத்துள்ளது.
- ICIஆனது எவ்வளவு விரைவில் இந்தியாவானது தூதரக ரீதியில் இவரைச் சந்திப்பதை அனுமதிக்க வேண்டும். என்று இஸ்லாமாபாத்தைக் கேட்டுக் கெண்டுள்ளது.
- 1963 ஆம் ஆண்டின் தூதரக் உறவுகள் மீதான வியன்னா ஒப்பந்தத்தின் விதி 36-83 மீறியுள்ளதாக பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இராணுவம் இவரை விசாரணைக்கு எடுத்துக் கொண்டவுடன் அது குறித்த தகவரை உடனடியாக இந்தியாவிடம் தெரிவிக்க பாகிஸ்தான் தவறியது.

## ➢ ICI பற்றி:

- ICI ஆனது நெதர்லாந்தின் தி ஹேக்கில் அமைந்துள்ளது.
- இது 1945 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மற்றும் பாதுகாப்பு அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது. இவர்களின் பதவிக் காலம் 9 ஆண்டுகளாகும்.
- இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான தல்வீர் பண்டாரி 2012 ஆம் ஆண்டு முதல் ICIல் நீதிபதியாக உள்ளார்.

## ➢ மோதிஹரி – அம்லேஹ்குன்ஞ் பெட்ரோலியக் குழாய்த் தொடர்:

- மோதிஹரி அம்லேஹ்குன்ஞ் பெட்ரோலியக் குழாய்த் தொடர் இந்தியாவினால் வெற்றிகரமாக அமைக்கப்பட்டுள்ளதாக நேபாளத்திற்கான இந்தயத் தூதர் அறிவித்துள்ளார்.
- இருநாடுகளின் நிர்வாகத் தலைவர்களால் மெய்நிகர் முறையில் தொடங்கி வைக்கப்பட்ட பின்பு ஆகஸ்ட் மாதத்திலிருந்து இந்தத் திட்டத்தின் வணிக ரீதியிலான செயல்பாடுகள் தொடங்கும்.
- பீகாரின் மோதிஹரியிலிருந்து நேபாளத்தின் அம்லேஹுகுன்ஞ் வரையிலான 69 கிலோ மீட்டர் தொலைவுள்ள இந்த பெட்ரோலியக் குழாய்த் தொடரானது இந்தியாவினால் கட்டப்பபடுள்ளது.
- இது நேபாளத்தின் எண்ணெய் சேமிப்பு பிரச்சினையை எதிர் கொள்வதற்கும் வாரிகளின் மூலம் பெட்ரோலியப் பொருட்களின் போக்குவரத்திற்கு முடிவு கட்டுவதற்கும் உதவும்.

## ➢ சூரிய ஒளி சர்க்கா திட்டம்:

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சகம் நாடெங்கிலும் 50 சூரிய ஒளி சர்க்கா குழுக்களை செயல்படுத்துதலுக்காக ரூ550 கோடி மதிப்பில் சூரிய ஒளி சர்க்கா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- சூரிய ஒளி சர்க்கா அலகுகள் கிராமத் தொழிற்காலைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இது மும்பையில் உள்ள காதி மற்றும் கிராமத் தொழிற்சாலைகள் ஆணைய (Khadi and Village Industries Commission – KVIC) நிர்வாகக் கட்டுப்பாட்டகத்தின் கீழ் செயல்படும்.
- இது ஏறத்தாழ 1 லட்சம் நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பை உருவாக்கும்.

### ➢ பல்கலைக் கழக மானியக் குழுவின் பரமார்ஷ் திட்டம்:

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பல்கலைக் கழக மானியக் குழுவின் (UGC- University Grants Commission) பரமார்ஸ் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ், ஒரு குறிப்பிட்ட உயர் கல்வியானது வழிகாட்டியாகக் தேர்ந்தெடுக்கப்படும்.
- தேசிய அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் (National Accreditation and Accreditation and Assessment Council – NAAC) அங்கீகாரத்ததைப் பெறுதலையும் தரமான கல்வியை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ள நிறுவனங்கள் வழிகாட்டியாக இருக்கும்.
- இந்தத் திட்டமானது வழிகாட்டுதல் வழங்குவதற்காக 1000 உயர் கல்வி நிறுவனங்களை அமைப்பதை இலக்காகக் கொண்டிருக்கும்.

### ➢ ‘இணையதள சாத்தி’ திட்டம்:

- கூகுள் இந்தியாவின் ‘இணையதள சாத்தி’ என்ற திட்டமானது தற்பொழுது பஞ்சாப் மற்றும் ஒடிசாவையும் இத்திட்டத்தில் இணைத்துள்ளது.
- இது 2015ஆம் ஆண்டில் டாடா அறக்கட்டளையுடன் இணைந்து ஏற்படுத்தப்பட்டது.
- இந்தத் திட்டம் இணைய தளத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று கிராமப் புற பெண்களுக்கு கல்வியறிவு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தற்பொழுது 20 மாநிலங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

### ➢ சாகர் மைத்ரி திட்டம் - 2:

- கொச்சியில் உள்ள தெற்கு கடற்படைக் கட்டளைத் தளத்திலிருந்து 2 மாதம் நடைபெறும் சாகர் மைத்ரி திட்டம் 2 என்ற ஒரு திட்டத்திற்கான பயணத்தை ஐஎன்எஸ் சாகர்த்வானி தொடங்கியுள்ளது.
- இது கொச்சியில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் (DRDO – Defence Research and Development Organisation) கடற்படை இயற்பியல் மற்றும் கடல்சார் ஆய்வகத்தினால் வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது.
- சாகர் மைத்ரி திட்டத்தின் வட இந்தியக் கடலிலிருந்து தரவு சேகரிப்பு
- அந்தமான் கடல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடல்களின் மீது கவனத்தைச் செலுத்துதல்.
- கடல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையில் 8 இந்தியக் கடல் கூட்டமைப்பு நாடுகளுடன் நீண்ட கால ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்.
- இது 1962-65 ஆம் ஆண்டுகளில் சர்வதேச இந்தியக் கடல் பயணத்தை மேற்கொண்ட இந்தியாவின் ஒரே ஆராய்ச்சிக் கப்பலான ‘ஐஎன்எஸ் கிஸ்த்காவின்’ பொன்விழாக் கொண்டாட்டத்தினை அனுசரிக்கின்றது.

### ➢ அடல் பிமித் வியாக்தி கல்யான் யோஜனா:

- தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் சந்தோஷ் குமார் சுங்வார் அடல் பிமித் வியாக்தி கல்யான் யோஜனா’ என்ற ஒரு திட்டத்தை மாநிலங்களவையில் அறிவித்தார்.
- இந்தத் திட்டம் அரசுத்தொழிலாளர் காப்பீட்டுச் சட்டம், 1948ன் கீழ் உள்ளடங்கும் காப்பீடு பெற்ற நபர்களுக்காக அரசு தொழிலாளர் காப்பீட்டுக் கழகத்தினால் (Employment State insurance Corporation - ESIC)செயல்படுத்தப்படும்.
- இது தொடக்கத்தில் இரண்டு ஆண்டு காலத்திற்குச் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றது.
- இது மாறி வரும் வேலைவாய்ப்பு நிலைமையின் காரணமாக எந்வொரு காரணத்திற்காகவும் பணியை இழந்த அல்லது பணியில் இல்லாத நபர்களுக்க நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறாத சமயத்தில் இந்த நிவாணம் காப்பீடு பெற்ற நபர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணமாகச் செலுத்தப்படும்.
- அவர்கள் முந்தைய பணியிலிருந்து விலகிய தேதியிலிருந்து குறைந்தது 3 மாதங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருந்தால்,ESIC- ல் அவர்களின் மொத்தப் பங்களிப்பில் 47 சதவிகிதத்தினை அவர்கள் பெற்றுக கொள்ள முடியும்.
- ESI என்பது இந்தியத் தொழிலாளர்களுக்கான சுய நிதி சமூகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமாகும்.
- இது இந்திய அரசின் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தினால் சட்டப்பூர்வமாக உருவாக்கப்பட்ட ஒரு தனிச் சுதந்திர கழகமாகும்.
- இது ESI சட்டம், 1948-ல் கூறப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி ESICயினால் நிர்வகிக்கப்படுகின்றது.

## ➢ மாநிலங்களுக்கான புதிய ஆளுநர்கள்:

- மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், நாகலாந்து மற்றும் திரிபுரா ஆகிய 6 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை குடியரசுத் தலைவர் ராமநாத் கோவிந்த் நியமித்துள்ளார்.

## ➢ புதிய ஆளுநர்களின் பெயர்கள் பின்வருமாறு:

| வ.எண் | மாநிலங்கள் | புதிய ஆளுநர்கள் |
|---|---|---|
| 1 | மத்தியப் பிரதேசம் | லால் ஜி தாண்டன் |
| 2. | உத்திரப் பிரதேசம் | ஆனந்தி பென் படேல் |
| 3. | பீகார் | பாகு சவுகான் |
| 4. | மேற்கு வங்காளம் | ஜெகதீப் தங்கர் |
| 5. | திரிபுரா | ரமேஷ் பைஸ் |
| 6. | நாகலாந்து | RN ரவி |

## ➢ சந்திரயான் - 2 திட்டம்:

- 2019 ஆம் ஆண்டு ஜுலை 22 ஆம் தேதியன்று இந்தியாவின் மிகவும் வலிமையான செயற்கைக் கோள் செலுத்து வாகனமான ஜிஎஸ்எல்வி மாக் III-எம் 1 சந்திரயான் 2 விண்வெளிக் கலனை, அதன் திட்டமிடப்பட்ட சுற்றுவட்டப் பாதைக்குள் வெற்றிகரமாகச் செலுத்தியது.
- ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையம் SHAR-ன் 2 வது ஏவு தளத்திலிருந்து இந்தச் செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது.
- சந்திரயான் - 2 திட்டம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.
  - முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சுற்று வாகனம் (ஆர்பிட்டர்)
  - லேண்டர் (விக்ரம் என்று பெயரிடப்பட்ட தரையிறங்கும் சாதனம்)
  - ரோவர் (பிரக்யான் என்று பெயரிடப்பட்ட நிலவில் ஆய்வு செய்யும் சாதனம்.
- இந்த லேண்டர் சாதனம் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 அன்று நிலவில் உள்ள மன்சீனஸ், (மற்றும் சம்பெலியஸ் Nஎன்ற இரண்டு பள்ளங்களுக்கிடையே ஒரு உயரிய சமவெளிப் பகுதியில் மென்மையான தரையிறக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- லேண்டரின் ஆயுட் காலம் (ஆய்வுக் காலம்) 1 நிலவு நாள் ஆகும்.
- ஆய்வு செய்யும் சாதனம் 14 புவி நாட்களுக்குச் சமமான 1 நிலவு தினத்திற்கு நிலவின் மேற்பரப்பின்போது மீது ஆராய்ச்சியினை வெளியிட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும்.

## ➢ மக்கள் தொகை ஈவுக் காலம்:

- 2018 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் ஈவுக் காலமாகும் ஒரு 37 ஆண்டு காலத்திற்குள் இந்தியா நுழைந்துள்ளது என்று சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.
- அதிக எண்ணிக்கையிலான உழைக்கும் வயது கொண்ட மக்கள் தொகையானது 2015 ஆம் ஆண்டு வரை நீடிக்க இருக்கின்றது.
- ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியமானது (UN Population Fund – UNFPA),'மக்கள் தொகை ஈவுத் தொகையை' மக்கள் தொகையின் வயது அமைப்பில் நிகழும் மாற்றங்களின் விளைவாக ஏற்படும் 'திறன் வளர்ச்சி' என்று வரையறுக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டு முதல், உழைக்கும் வயது கொண்ட மக்கள் தொகையானது (15 வயது முதல் 64 வயது வரை உள்ள மக்கள்) சார்ந்துள்ளோரின் மக்கள் தொகையைவிட (0 முதல் 14 வயது வரை மற்றும் 65 வயதிற்கு மேல்) அதிக அளவில் வளர்ந்துள்ளது.
- ஜப்பான், சீனா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் ஏற்கெனவே இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி, அதிக அளவிலான பொருளாதாரச் செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

## ➢ புதிய ஆளுநர்கள் - நியமனங்கள்:

- பின்வரும் மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| குஜராத் | ஆச்சார்யா தேவ்ராத் |
| இமாச்சலப் பிரதேசம் | கல்ராஜ் மிஸ்ரா |
| சத்தீஸ்கர் | அனுசுயா உய்கே |
| ஆந்திரபிரதேசம் | பிஸ்வா பூசன் ஹரிசந்தன் |

## ➢ பிராந்திய இணைப்பிற்கான உடான் திட்டம்:

- உடான் என்ற பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 8 வழிகள் செயல்படத் தொடங்கியுள்ளன.
- இத்திட்டம் பிராந்தியத்திற்கிடையே விமான வழியான இணைப்பை அதிகரிக்க முயல்கின்றது. இது விமான நிறுவனங்களுக்கு பல்வேறுச் சலுகைகளை அளிக்கின்றது.
- தற்பொழுது செயல்பாட்டில் உள்ள மொத்த உடான் திட்டவழிகளின் எண்ணிக்கையானது 194 ஆக அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று உடான் திட்டம் தொடங்கப்பட்டது.

## ➢ உஜ் பாலம் மற்றும் பசந்தர் பாலம்:

- ஜம்மு காஷ்மீரில் உள்ள 2 புதிய பாலங்களை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
  - கத்துவா மாவட்டத்தில் உள்ள 1 கிலோ மீட்டர் நீளம் கொண்ட உஜ் பாலம்
  - சம்பா மாவட்டத்தில் உள்ள 617.40 மீட்டர் நீளம் கொண்ட பசந்தர் பாலம்
- இந்த இரண்டு பாலங்களும் சம்பார்க் திட்டத்தின் கீழ், எல்லைச் சாலைகள் அமைப்பினால் (BRO- Norder Roads Organisaiton) கட்டப்பட்டன.
- 1000 மீட்டர் நீளம் கொண்ட உஜ் பாலமானது BROவினால் சுட்டப்பட்ட மிக நீளமான பாலமாகும்.

- BRO ஆனது இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாப்பதற்காகவும் நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதியில் உள்ள தொலைதூரப் பகுதிகளை மேம்படுத்துவதற்காகவும் 1960 ஆம் ஆண்டு மே 07 அன்று ஏற்படுத்தப்பட்டது.
- இந்த அமைப்பு பின்வரும் இடங்களில் செயல்படுகின்றது.
  - 21 மாநிலங்கள் 1 ஒன்றியப் பிரதேசம் (அந்தமான் நிக்கோபர் தீவுகள்)
  - ஆப்கானிஸ்தான், பூடான், மியான்மர், இலங்கை போன்ற அண்டை நாடுகள்

## ➢ "யுகேய்ரி கல்விப் பயணத் திட்டம்: இந்தியாவில் பயில்வோம்"

- இந்தியா ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளுக்கிடையே "யுகேய்ரி கல்விப் பயணத் திட்டம் இந்தியாவில் பயில்வோம்", என்ற ஒரு புதிய திட்டமானது சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டது.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கல்விக்காக ஐக்கிய இராஜ்ஜிய மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கு பிரிட்டனின் பல்கலைக் கழகங்கள் இந்திய நிறுவனங்களுடன் இணையவிருக்கின்றன.
- இந்த திட்டம் ஐக்கிய இராஜ்ஜியத்தின் சர்வதேசத்திற்குச் செல் வெளியே சென்று கல்வி கல்" என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.

## ➢ "Hand in Hand"இராணுவப் பயிற்சி:

- இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுகடகிடையேயான "Hand in Hand" என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 2019 ஆம் ஆண்டுப் பதிப்பானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மேகாலயாவின் ஷில்வாங்கிற்கு அருகில் உள்ள உம்ரோயில் நடைபெறவிருக்கின்றது.
- இது தீவிரவாத எதிர்ப்பு, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் இரண்டு வார காலப் பயிற்சியாகும்.
- இது சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து தலா 120 இராணுவ வீரர்களைக் கொண்டு நடைபெறும் ஒரு படை அளவிலான பயிற்சியாகும்.

## ➢ இந்த்ஸ்பேஸ்எக்ஸ் (IndSpace Ex)- முதலாவது விண்வெளிப் போர்ப் பயிற்சி:

- இந்திய ஆயுதப் படைகள் நாட்டின் முதலாவது உருவகப்படுத்தப்பட்ட விண்வெளிப் போர்ப் பயிற்சியான ' இந்த்ஸ்பேஸ்எக்ஸ்' என்ற பயிற்சியை நடத்தத் தயாராகியுள்ளன.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட முப்படை பாதுகாப்புப் பணியாளர்களுடன் அனைத்து இராணுவ மற்றும் அறிவியல்துறை சார்ந்த பங்காளர்கள் இப்பயிற்சியை நடத்த இருக்கின்றனர்.
- இந்த ஆண்டில் மார்ச் 27 அன்று செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- கண்காணிப்பு தகவல் தொடர்பு எவுகணை குறித்த முன்கூட்டிய எச்சிக்கை மற்றும் துல்லியமான இலக்கு ஆகியவற்றிற்குப் பயனளிப்பதாக விளங்கும் இந்திய செயற்கைக் கோள்களை அழிக்க அல்லது செயலிழக்கச் செய்யும் எதிரி நாடுகளின் முயற்சிகளுக்குத் தடை ஏற்படுத்துவதற்கு இது போன்ற திறன் தேவையானதாக உள்ளது.

## ➢ மெட்ரோலைட் இரயில்கள்:

- மத்திய அரசு 'மெட்ரோலைட்' என்ற பெயர் கொண்ட ஒருசிறு நகர இரயில் போக்குவரத்து அமைப்பை பரிந்துரைத்துள்ளது.

- இது குறைந்த அளவு பயணத் தொலைவுள்ள நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் அமைப்பைப் பரிந்துரைத்துள்ளது.
- ஓவ்வொரு இரயிலும் 3 பெட்டிகளைக் கொண்டிருக்கும் இதன் வேகம் ஒரு மணி நேரத்திற்கு 25கிலோ மீட்டர் அளவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- நிலத்தின் மேற்பரப்பு மற்றும் உயர்த்தப்பட்ட பாதைகளில் ஏற்படுத்தப்படவிருக்கும் இந்த 'மெட்ரோலைட்அமைப்பின்' தர அம்சங்களை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் வழங்கியுள்ளது.
- மெட்ரோலைட் அமைப்பு தானியங்கி கட்டண வசூலிப்புக் கதவுகள், நடைமேடை திரை வாயில்கள், எக்ஸ் கதிர் மற்றும் உடமைகள் வருடி ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது.

## ➤ வங்கி தேசியமயமாக்கல் - 50 ஆண்டுகள்:

- 1969 ஆம் ஆண்டு ஜுலை 19 அன்று வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதின் 50வது ஆண்டை இந்தியா அனுசரிக்கின்றது.
- அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கடனளிக்கும் முக்கியமான 14 வங்கிகளின் தேசிய மயமாக்கத்தைத் தொடங்கி வைத்தார். நாட்டில் உள்ள மொத்த வங்கி வைப்பு நிதியில் 85 சதவிகித வைப்பு நிதியை இந்த வங்கிகள் கொண்டுள்ளன.
- வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பொதுத் துறைப் பரிமாற்றம் அவசரச் சட்டம், 1969-ன் கீழ் இந்த வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. இந்த அவசரச் சட்டம் பின்னர் மசோதாவாக மாறியது.
- பின்னர் 1980ஆம் ஆண்டில் மேலும் 6 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன.
- பெரிய வணிகங்கள் கடன் வழங்குதலில் ஆதிக்கம் செலுத்திய அந்த நேரத்தில் முன்னுரிமைத் துறைகளை ஊக்கப்படுத்துவது என்பது தேசியமயமாக்கலின் முக்கியக் குறிக்கோளாகும்.
- இந்தியாவில் மிகப்பெரிய கடனளிக்கும் வங்கி பாரத ஸ்டேட் வங்கியாகும்.

## ➤ நாம்தாபா புலிகள் காப்பகம்:

- நாம்தாபா புலிகள் காப்பகத்தில் 53 முன்னணிப் பணியாளர்கள் மற்றும் அனைத்து கடைநிலைப் பணியாளர்களையும் அதிகாரிகள் பணி நீக்கம் செய்துள்ளதால், அச்சரணாலயத்தில் வங்கப் புலிகளின் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.
- நாம்தாபா பாதுகாக்கப்பட்ட பகுதியானது புலிகள் காப்பகமாகவும் தேசியப் பூங்காவாகவும் விளங்குகின்றது.
- இது இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுக்கிடையேயான சர்வதேச எல்லைக்கு அருகில் அருணாச்சலப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவின் மிகவும் கிழக்கில் உள்ள புலிகள் காப்பகமாகும்.

## ➤ தகவல் அறியும் உரிமைத் திருத்த மசோதா - 2019:

- சமீபத்தில் மக்களவையில் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைத் திருத்த (Right to information – RTI) மசோதா, 2019 ஆனது மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவானது மாநிலங்கள் மற்றும் மத்தியில் தலைமைத் தகவல் ஆணையர் (CIC – Chief Information Commissioner) மற்றும் பிற தகவல் ஆணயைர்கள் ஆகியோரின் 'பதவிக் காலம் மற்றும் விதிமுறைகளை' மாற்றி அமைக்கின்றது.
- மத்திய அரசானது தலைமைத் தகவல் ஆணையர் மற்றம் பிற தகவல் ஆணையர்கள் ஆகியோரின் ஊதியம் மற்றும் படி நிலைகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தை 'தன்னகத்தே' கொண்டுள்ளது.
- கணிப்பின்படி, ஓவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 60 இலட்ச RTI விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

- **வந்தே மாதரம் வழக்கு:**

- ‘ஜன கன மண’ விற்கு இணையாக ‘வந்தே மாதரத்தை’ அறிவிக்க மத்திய அரசிற்கு வழிகாட்டுதல் வழங்கக் கோரிய ஒரு மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- வந்தே மாதரம் என்பது 1870 ஆம் ஆண்டில் பக்கிம் சந்திர சட்டர்ஜியால் எழுதப்பட்ட ஒரு வங்க மொழிக் கவிதையாகம். இவர் இதை 1882 ஆம் ஆண்டில் தன்னுடைய நாவலான ‘ஆனந்தமடத்தில்’ இணைத்துள்ளார்.
- இந்தக் கவிதையானது இரவீந்திரநாத் தாகூரால் பாடலாக மாற்றப்பட்டது.
- இது இந்திய தேசியக் காங்கிரஸின் 1896 ஆம் ஆண்டின் கல்கத்தா கூட்டத் தொடரின் போது இரவீந்திரநாத் தாகூரால் அரசியல் நோக்கில் பாடப்பட்டது.

- **புலிகள் - கணக்கெடுப்பு, பாதுகாப்பு மற்றும் காப்பகங்கள்:**

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 29 அன்று சர்வதேசப் புலிகள் தினம் அனுசரிக்கப்பட்டது.
- இக்கொண்டாட்டத்தின் போது, இந்தியாவில் நான்காவது புலிகள் கணக்கெடுப்பு முடிவுகள் வெளியிடப்பட்டன.
- இந்த ஆய்வானது இந்திய வனவிலங்கு நிறுவனத்தினால் (WWI. Wildlife Institute of India) மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தியா ஒட்டுமொத்தமாக 2967 புலிகளைக் கொண்டுள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- முதலாவது புலிகள் கணக்கெடுப்பு 2006ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- தற்பொழுது இந்த ஆய்வு 4வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது.
- மத்தியப் பிரதேசம் அதிக அளவிலாக 526 புலிகளைக் கொண்டுள்ளது இதற்கு அடுத்து கர்நாடகா (524) மற்றும் உத்தரகாண்ட் (442) ஆகிய மாநிலங்கள் அதிக புலிகளைக் கொண்டுள்ளன.
- சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் புலிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியைக் கண்டுள்ளன.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள பென்ச் புலிகள் காப்பகம் அதிக எண்ணிக்கையிலான புலிகளைக் கொண்டுள்ளது.
- ‘Tx2’’ என்ற ஒரு திட்டமானது 2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெறும் செயிண்ட் பீட்டர்ஸ்பெர்க் புலிகள் மாநாட்டின் போது உலக வனவிலங்கு அமைப்பினால் (World Wildlife Foundation – WWF) தொடங்கப்பட்டது.
- இதன்கீழ் புலிகளைக் கொண்டு இருக்கும் 13 நாடுகள் 2022 ஆம் ஆண்டில் புலிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- உலக வனவிலங்கு அமைப்பின் “Tx2” என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக தனது புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக்கிய உலகின் முதலாவது நாடு நேபாளம் ஆகும்.

- **தமிழ்நாடு புள்ளி விபரங்கள்:**

- தமிழ்நாட்டில் உள்ள 4 புலிகள் காப்பகங்களும் இந்தக் கணக்கெடுப்பில் ‘மிகவும் சிறந்ததாக’ தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அவையாவன.
  - முதுமலை புலிகள் காப்பகம்
  - ஆனைமலை புலிகள் காப்பகம்
  - சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் (STR)
  - களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகம்
- தமிழ்நாட்டில் உள்ள STRஆனது 2015 ஆம் ஆண்டு முதல் ‘மிகப் பெரிய அளவிலான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. இங்கு 2014 ஆம் ஆண்டு முதல் புலிகளின் எண்ணிக்கை 30 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

- நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் புலிகள் கணக்கெடுப்பில் STR-ல் புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பிற்காக இதற்குப் பிரதம் அமைச்சரால் விருது வழங்கப்பட்டது.
- மேலும் பின்வருவனவற்றை இணைத்து தமிழ்நாட்ழல் 5-வது புலிகள் காப்பகத்தை அமைப்பதற்கு பரிந்துரைக்க செய்யப்படுகின்றது.

## ➢ பதவியில் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதி - குற்றச் சாட்டு:

- ஏறத்தாழ 30 ஆண்டுகளில் பதவியில் இருக்கும் நீதிபதி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள முதலாவது நபராக தற்பொழுது பதவியிலுள்ள அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி SM சுக்லா உருவெடுத்து உள்ளார்.
- இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் நீதிபதி சுக்லாவிற்கு எதிராக முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய சிபிஐக்கு அனுமதி வழங்கியுள்ளார்.
- 1991 ஆம் ஆண்டில் K.வீராசாமி (எதிர்) மத்திய அரசு என்ற புகழ்பெற்ற வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு வரும் முதலாவது வழக்கு இதுவாகும்.

## ➢ K. வீராசாமி வழக்கு:

- இந்த வழக்கில், உயர் நீதிமன்றங்களின் அனைத்து நீதிபதிகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதற்குக் கூட உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அனுமதியைக் கட்டாயம் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- வழக்கு விசாரணைக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரம் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் இருக்கின்றது.
- ஆனால் உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியினால் வழங்கப்பட்ட அறிவுரையின் படியே இந்தியக் குடியரசுத் தலைவர் செயல்படுவதற்கான நடைமுறைகளை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

## சர்வதேசம்நிகழ்வுகள்

### ➢ ஆப்பிரிக்க உயிரித் தொழில்நுட்பப் பூங்கா:

- மகாத்மா காந்தி தகவல் தொழில்நுட்பம் &உயிரித் தொழில்நுட்பப் பூங்காவானது (MGIT - BP/ Mahatma Gandhi Information Technology & Biotech Park)கோட்டி டி ஐவரி என்ற நாட்டில் தொடங்கி வைக்கப்பட்டது.
- MGIT-BPஆனது எக்ஸிம் வங்கியினால் வழங்கப்பட்ட 20 மில்லியன் அமெரிக்க டாலர் கடனின் மூலம் இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளது.
- இது தகவல் தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம் ஆகியவற்றுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தடையற்ற வர்த்தக மண்டலமாகும்.

### ➢ G20 மாநாடு:

- 14வது G20மாநாடானது ஜப்பானின் ஒசாகா நகரத்தில் ஜூன் 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- G20உறுப்பினர்களில் அமெரிக்காவைத் தவிர ஏனைய 19 உறுப்பினர்களும் பாரீஸ் காலநிலை ஒப்பந்தத்தின் முழு அமலாக்கத்தின் மீதான அவர்களின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர். மேலும் பரந்த அளவிலான பசுமைத் தொழில்நுட்பங்கள் மற்றும் அணுகுமுறைகளை நோக்கவும் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.
- G20 நாடுகளின் தலைவர்கள் உலகளாவிய அளவிலான முக்கியப் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள ஒன்றிணைந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கான "ஒசாகா பிரகடனத்தை" வெளியிட்டனர்.
- இந்த உச்சி மாநாட்டிற்கு முன்னதாக ஜப்பான் அமெரிக்கா - இந்தியா (JAI / Japan-America – India)ஆகிய நாடுகளுக்கிடையேயான முத்தரப்புப் பேச்சுவார்த்தை ஒசாகாவில் நடைபெற்றது.
- அதேபோல் ரஷ்யா - இந்தியா - சீனாவிற்கு (RIC / Russia – India – China)இடையேயான முத்தரப்புப் பேச்சுவார்த்தையும் நடைபெற்றது.
- ஜப்பானிய பிரதமரான ஷின்ஸோ அபேவால் அறிவிக்கப்பட்ட "ஒசாகா பாதை" என்ற அறிக்கைக்கு 24 நாடுகள் மற்றும் குழுக்கள் கையொப்பமிட்டன.
- இந்தியா, இந்தோனேசியா, எகிப்து மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இதில் கையொப்பமிடவில்லை.
- "ஒசாகா பாதை" என்பது மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகளுடன் எல்லைத் தாண்டிய தரவு ஓட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பாகும்.
- இந்த மாநாடானது கீழ்க்காணும் 8 கருத்துருக்களின் கீழ் நடைபெற்றது.
  1. உலகளாவிய பொருளாதாரம்
  2. வர்த்தகம் மற்றும் முதலீடு
  3. புத்தாக்கம்
  4. சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல்
  5. வேலைவாய்ப்பு
  6. பெண்களுக்கு அதிகாரமளித்தல்
  7. வளர்ச்சி
  8. சுகாதாரம்
- முதல் G20 மாநாடானது 1999 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்றது.
- G20 மாநாடானது "நிதியியல் சந்தைகள் மற்றும் உலகப் பொருளாதாரம் மீதான மாநாடு" என பொதுவாக அறியப்படுகிறது.

- **ஈரானின் அணு ஆயுதத் திட்டம்:**

- 2015 ஆம் ஆண்டு அணு ஆயுதத் திட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட 300 கிலோகிராம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் என்ற அளவை விட அதிகமாக தனது இருப்பில் அதிக அளவு செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் வைத்திருக்கின்றது.
- 2015 ஆம் ஆண்டில் சர்வதேச அழுத்தத்தின் காரணமாக, தனது அணு ஆயுத நடவடிக்கைகளைக் குறைக்க ஈரான் ஒப்புக் கொண்டது. பொருளாதாரத் தடைகளை நீக்கியதற்காக சர்வதேச ஆய்வாளர்களை அனுமதிக்கவும் ஈரான் ஒப்புக் கொண்டது.
- ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையேத் தொடர்ந்து அதிகரித்து வரும் பதற்றத்தின் காரணமாகவும் ஈரானின் மீதான தொடர் பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் ஈரான் மீண்டும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைச் சேர்க்கத் தொடங்கியுள்ளது.
- இது இறுதியில் அணு ஆயுதப் பொருட்களின் உற்பத்திக்கு வழிவகுக்கும்.

- **நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு இணையான அங்கீகாரம்:**

- 2020 ஆம் நிதியாண்டிற்கான தேசியப் பாதுகாப்பு அதிகாரமளிப்புச் சட்டம் அமெரிக்க செனட்டால் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இது தென் கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற அமெரிக்காவின் பாரம்பரிய நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு இணையாக இந்தியாவையும் கொண்டு வரும்.
- இது மனிதாபிமான உதவி, தீவிரவாத எதிர்ப்பு, கடற்கொள்ளை எதிர்ப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இந்திய பெருங்கடலில் அமெரிக்கா - இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கும்.
- 2016 ஆம் ஆண்டில் அமெரிக்காவினால் "முக்கியமான பாதுகாப்புக் கூட்டாளி" என்ற அங்கீகாரம் இந்தியாவிற்கு வழங்கப்பட்டது.

- **டிரம்ப் மற்றும் கிம் சந்திப்பு:**

- வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன்னைச் டிரம்ப் சந்தித்த போது ஜனநாயக மக்கள் கொரியக் குடியரசில் (வட கொரியா) காலடி வைத்த பதவியில் உள்ள முதலாவது அமெரிக்க அதிபர் என்ற பெருமையை டிரம்ப் பெற்றுள்ளார்.
- இவர் வட கொரியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள இராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் கிம்மைச் சந்தித்தார்.
- டிரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் ஆகியோர் சிங்கப்பூர் மாநாடு மற்றும் வியட்நாமின் ஹனோயில் ஏற்கனவே இருமுறை சந்தித்துப் பேசியுள்ளனர்.

- **தன் - நலம்:**

- உலக சுகாதார அமைப்பானது (World Health Organisation - WHO) சுகாதாரத்திற்கான "தன் நலம் தொடர்பான இடையீடுகள்" மீதான தனது முதலாவது வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏனெனில் சமீபத்தியக் கணிப்பின்படி, 2035 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 13 மில்லியன் சுகாதாரப் பணியாள்களின் பற்றாக்குறையை உலகம் எதிர் கொள்ளவிருக்கின்றது.
- WHOவழிகாட்டுதல்களானது தனது முதல் பதிப்பில் பாலினம் மற்றும் மகப்பேறு ஆரோக்கியம் &உரிமைகள் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

## ➢ இசேல்எக்ஸ் 19 (ISALEX 19):

- சர்வதேசப் பாதுகாப்புக் கூட்டணியின் (International Security Alliance – ISA "ISALEX 19"(இசேல்எக்ஸ் 19) என்ற முதலாவதுப் பாதுகாப்புப் பயிற்சியை அபுதாபி நடத்திக் கொண்டிருக்கின்றது.
- அபுதாபியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டுப் பாதுகாப்பில் பயிற்சியில் ISA வைச் சேர்ந்த 50 சட்ட அமலாக்கத் துறை அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## ➢ ISA:

- ISA ஆனது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் தலைமையகம் அபுதாபியில் உள்ளது.
- இது ஒருங்கிணைக்கப்பட்ட, நாடு கடந்த மற்றும் மிகக் கொடிய குற்றங்களைத் தடுப்பதற்கான ஒரு சர்வதேசப் பணிக் குழுவாகும்.

## ➢ பாலஸ்தீனத்திற்கு இந்தியா உதவி:

- 2019 ஆம் ஆண்டில் இந்தியா ஐக்கிய நாடுகள் பாலஸ்தீன அகதிகள் அமைப்பிற்கு 5 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க உறுதியளித்துள்ளது.
- இந்தியா ஒவ்வொரு ஆண்டும் இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் 150 பாலஸ்தீன தொழில்துறை நிபுணர்களுக்கு உதவுகின்றது.

## ➢ புவி வெப்பமயமாதல் மீதான ILO அறிக்கை:

- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது "வெப்பமான புவியில் பணியாற்றுதல்: தொழிலாளர் உற்பத்தித் திறன் மற்றும் நாகரிகமான பணி மீதான வெப்ப அழுத்தத்தின் தாக்கம்" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- புவி வெப்பமயமாதலின் காரணமாக 34 மில்லியன் முழு நேர வேலைவாய்ப்புகளுக்குச் சமமாக 2030 ஆம் ஆண்டில் 5.8% பணி நேரத்தினை இந்தியா இழக்கும் என்று இது கூறுகின்றது.
- இது முக்கியமான வேளாண்மை மற்றும் கட்டமைப்புத் துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
- அதிக அளவிலான மக்கட் தொகையின் காரணமாக இந்தியா மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நாடாக இருக்கும் என்று அறிக்கை கூறுகின்றது.

## ➢ ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்:

- ஜெர்மனியைச் சேர்ந்த உர்சுலா வோன் டெர் லியென் என்பர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களால் ஐரோப்பிய ஆணையத்தின் அடுத்தத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கடந்த 50 ஆண்டுகளில் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜெர்மனைச் சேர்ந்த ஒருவர் தலைமைப் பதவியை வகிப்பது இதுவே முதல் முறையாகும்.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் தினசரிப் பணிகளை மேலாண்மை செய்தல், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒப்பந்தங்களை உறுதி செய்தல், சட்டங்களைப் பரிந்துரைத்தல் மற்றும் முடிவுகளைச் செயல்படுத்தல் ஆகியவை ஐரோப்பிய ஆணையத்தின் பொறுப்பாகும்.
- பெல்ஜியத்தின் பிரசெல்சைத் தலைமையிடமாகக் கொண்டுச் செயல்படும். இது 1958 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

## ➢ ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீடு:

- சமீபத்தில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீட்டில் 58 பயணப் புள்ளிகளுடன் 86வது இடத்தில் இந்தியக் கடவுச் சீட்டு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தப் புள்ளிகள் இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் முன்கூட்டியே வழங்கப்படும் நுழைவு இசைவு இல்லாமல் 58 நாடுகளுக்குச் செல்ல முடியும் என்று கூறுகின்றது.
- இந்தப் பட்டியலில் 189 பயணப் புள்ளிகளுடன் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முதலிடத்தில் உள்ளன.
- இந்தத் தரவரிசையானது சர்வதேச விமானப் போக்குவரத்துக் கூட்டமைப்பிலிருந்து (IATA – International Air Transport Association)தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீடானது, தங்களது குடிமக்களுக்கான பயணச் சுதந்திரத்தின்படி நாடுகளை சர்வதேச அளிவல் தரவரிசைப் படுத்துவதாகும்.

## ➢ பிரான்சினால் முகநூல், கூகுள் ஆகிய நிறுவனங்களுக்கு வரி விதிப்பு:

- கூகுள், அமேசான் மற்றும் முகநூல் போன்ற இணைதள நிறுவனங்களின் மீது சிறிய அளவிலான, ஒரு முன்னோடி வரியை விதிக்க பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் கீழ் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த மசோதாவானது தொழில்நுட்ப பன்னாட்டு நிறுவனங்கள் வரி குறைவான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், தங்களது தலைமையிடங்களை அமைப்பதன் மூலம் வரி செலுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்கின்றன. இந்த மசோதா இதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரான்ஸ் போன்ற நாடுகளில் தற்பொழுது அதிக அளவு விற்பனையைக் கொண்டிருக்கும் இந்த நிறுவனங்கள், அந்நாடுகளில் வரி செலுத்துவதில்லை.

## ➢ மேற்கு ஆப்பிரிக்காவின் கடற் கொள்ளையர்கள்:

- சர்வதேசக் கடல்சார் அமைப்பின்படி (IMB – International Maritime Bureau),2018 ஆம் ஆண்டில் உலகில் கடற் கொள்ளையர்களால் மிகவும் பாதிக்கப்பட்ட கடலாக மேற்கு ஆப்பிரிக்காவின் கினியா வளைகுடா உள்ளது.
- இந்தப் பகுதியானது 2018 ஆம் ஆண்டில் 72 தாக்குதல்களை எதிர்கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து தற்பொழுது வரை இந்தப் பகுதி 30 தாக்குதல்களைச் சந்தித்துள்ளது.
- 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட IMBஆனது சர்வதேச வணிகக் கூட்டமைப்பின் (International Chamber of Commerce - ICC)ஒரு சிறப்புத் துறையாகும்.
- இதன் பணி கடல்சார் வர்த்தகம் மற்றும் பயணம் தொடர்பானவற்றில் அதிலும் குறிப்பாக கடற் கொள்கை தொடர்பானவற்றில் பெருங் குற்றங்களைத் தடுப்பதாகும்.

## ➢ UNFAO - சீன நாட்டைச் சேர்ந்த தலைவர்:

- சீனாவின் துணை வேளாண்துறை அமைச்சரான குயு டோங்யூ என்பவர் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (Food and Agriculture Organization – FAO)பொது இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த அமைப்பிற்குச் சீனாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது தலைவர் இவராவார். இதற்கு முன்பு இப்பதவியில் பிரேசிலைச் சேர்ந்த ஜோஸ் கிராஸியனோடா சில்வா என்பவர் இருந்தார்.
- இவரது நான்கு ஆண்டுகாலப் பதவிக் காலம் ஆகஸ்டு 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கவிருக்கின்றது.

## ➢ FAO:

- FAOஎன்பது பட்டினியை ஒழிப்பதற்காக சர்வதேச முயற்சிகளுக்கு தலைமையேற்கும் ஐக்கிய நாடுகளின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.
- இத்தாலியின் ரோமைத் தலைமையிடமாகக் கொண்ட இது 1945 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- ஏறத்தாழ 11,500 பணியாளர்களுடன் செயல்படும் இந்த அமைப்பு ஐக்கிய நாடுகளின் ஒரு மிகப் பெரிய தொழில்நுட்ப நிறுவனமாகும்.

- FAOஆனது வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், வனங்கள், மீன்பிடித் தொழில்கள், சிறந்த ஊட்டச்சத்தை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பு போன்றவற்றில் வளரும் நாடுகளுக்கு உதவுகின்றது.

## ➢ பாபிலோன் பாரம்பரியத் தளம்:

- யுனெஸ்கோவின் உலகப் பாராம்பரியக் குழுவானது ஈராக்கின் “பாபிலோன்” நகரத்தை உலகப் பாரம்பரியத் தளமாகப் பட்டியலிட்டுள்ளது.
- இந்தப் பழமையான மெசபடோமிய நகரமானது கற்குகைகள் மற்றும் கோபுரங்கள், பாபெல் கோபுரம், இஷ்தார் வாயில் ஆகியவற்றைக் கொண்ட சுவரால் சூழப்பட்ட நகரமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இது 400 ஆண்டுகளுக்கு முன்பு பழமையான பாபிலோனியப் பேரரசின் மையமாக விளங்கியது.
- ஹம்முராபி மற்றும் நெபுசந்நேசர் ஆகியோர் பாபிலோனை ஆட்சி செய்த புகழ்பெற்ற ஆட்சியாளர்கள் ஆவர்.
- பாபிலோன் ஆனது அங்கு இருக்கும் தொங்கும் தோட்டங்களுக்கு உலகப் புகழ் பெற்று விளங்குகின்றது.
- சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியல் பின்வருமாறு

1. Ancient Femous Metallurgy Sites of Burkina Faso
2. Paraty and the Grande, Brazil
3. Vatnajokull National Park, Iceland
4. French Austral Lands and Seas, France
5. Natural and Cultural Heritage of the Ohrid Region, Albania – an extension from the North Macedonian side of the lake, which has been on the World Heritage List since 1979

## ➢ ஐந்து கண்கள் (Five Eyes)திட்டம்:

- சீனத் தொலைத்தொடர்புத் துறை நிறுவனமான ஹவாய் நிறுவனத்தின் சாதனங்கள் அல்லது சேவைகளை ஐந்து கண்கள் **Five Eyes** எனப்படும் நாடுகள் பயன்படுத்தினால், அந்நாடுகளுடன் பகிரப்பட்டு வரும் நுண்ணறிவுத் தரவுகள் நிறுத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.
- ஐந்து கண்கள் என்ற பெயரானது நுண்ணறிவு ஆவணங்களின் பாதுகாப்பு வகைப்பாட்டைக் குறிக்கும். அந்த நாடுகள் பின்வருமாறு
  - ஆஸ்திரேலியா
  - கனடா
  - நியூசிலாந்து
  - ஐக்கியப் பேரரசு
  - அமெரிக்கா
- இந்தத் திட்டமானது அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளுக்கிடையே நுண்ணறிவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக 1946 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன் பின் பிற நாடுகள் இத்திட்டத்தில் இணைந்தன.
- பனிப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இந்த நாடுகள் இரஷ்யாவை உளவு பார்த்தன. 9/11 இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்பு இந்த நாடுகள் சர்வதேசத் தீவிரவாதிகளையும் கண்காணிக்கின்றன.

## ➢ சித்திரவதைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் மீதான ஐக்கிய நாடுகள் தீர்மானம்:

- சமீபத்தில் ரோமானியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானம் மீதான ஓட்டெடுப்பிலிருந்து இரஷ்யா மற்றும் இதர 42 நாடுகளுடன் இணைந்து இந்தியா வெளியேறியுள்ளது.

- இந்தத் தீர்மானம் தூக்குத் தண்டனை மற்றும் சித்திரவதை ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிகள் குறித்து ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா ஓட்டெடுப்பிலிருந்து வெளியேறியதற்கான காரணங்கள் பின்வருமாறு:
  - இது இந்தியாவில் "அரிதிலும் அரிதான" வழக்குகளில் மட்டும் தூக்குத் தண்டனை வழங்க அனுமதிக்கும் இந்தியச் சட்டத்திற்கு எதிராக உள்ளது.
  - தூக்குத் தண்டனையைச் சித்திரவதைக்கு இணையாக வைப்பதற்கான முயற்சியின் காரணமாக இந்த ஓட்டெடுப்பில் இருந்து இந்தியா விலகியுள்ளது.

## ➢ இலங்கையில் உள்ள மாதிரிக் கிராமம்:

- மாதிரிக் கிராமங்கள் திட்டத்தின் கீழ் இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள முதலாவது மாதிரிக் கிராமம் இலங்கையின் காம்பஹாவில் உள்ள ராணிடுகாமாவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- இது போரின் போது இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்காகத் தொடங்கப்பட்ட வீட்டுவசதித் திட்டத்தன் ஒரு பகுதியாகும்.
- இந்தியா தலா 2400 வீடுகளுடன் இது போன்ற 100 மாதிரி கிராமங்களைக் கட்டமைககத திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் பங்களிப்பில் இலங்கையின் மாத்தராவில் உள்ள ருஹுனா பல்கலைக் கழகத்தில் உள்ள மிகப்பெரிய பல்கலைக்கழக அரங்கமும் அடங்கும்.

## ➢ தங்க நுழைவு இசைவுச் சீட்டு:

- ஷார்ஜா நாட்டின் முதல் தங்க நுழைவு இசைவுத் சீட்டானது இந்தியாவிலிருந்து குடியேறிய தொழிலதிபரான லாலு சாமுவேலுக்கு வழங்கப்பட்டது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் வளர்ச்சியில் ஈடுபடும் முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் அறிவியலாளர்கள் ஆகியோர் இந்த 10 ஆண்டுகாலத்திற்குச் செல்லுபடியாகும் நுழைவு இசைவுச் சீட்டைப் பெற தகுதியுடையோர் ஆவர்.
- இந்த இசைவுச் சீட்டை வைத்திருப்பவர்கள் தங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு உத்திரவாதமளிப்பவர் இல்லாமலேயே தங்கும் வசதி கொண்ட நுழைவு இசைவுச் சீட்டைப் பெறும் சலுகைகளும் உரிமைகளும் உடையவர்களாவர்.

## ➢ ஹஜ்ஜிலிருந்து ஜம்ஸாம் புனித நீர்:

- சவுதி அரேபியாவின் ஹஜ்ஜிலிருந்து திரும்பும் பயணிகள் ஜம்ஸாமிலிருந்துப் புனித நீரை அனுமதிக்கப்பட்ட உடைமைகளுடன் எடுத்துவர அனுமதிக்கப்படுவர் என ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.
- ஜம்ஸாம் கிணறு சவுதி அரேபியாவின் மெக்காவில் அமைந்துள்ளது.
- பல ஹஜ் பயணிகள் இந்தக் கிணற்றிலிருந்துப் புனித நீரை தங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் கொண்டு வருகின்றனர்.

## ➢ உயர்திறன் பெற்ற புலம்பெயர்ந்தோர்க்கான வாய்ப்பு -அமெரிக்கா:

- அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையானது நிரந்தரக் குடியுரிமை அட்டைக்கான (கிரீன் கார்டு) விண்ணப்பதாரர் மீதான நாடு சார்ந்த ஏழு சதவீத உச்ச வரம்பை நீக்குவதற்கானச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- ஒரு நிரந்தரக் குடியுரிமை அட்டையானது அமெரிக்க குடிமகன் அல்லாதோர் அங்கு நிரந்தரமாக வாழவும் பணியுரியவும் அனுமதிக்கின்றது.

- இதனால் குறிப்பாக H-1Bபணி நுழைவு இசைவுச் சீட்டு அடிப்படையில் அமெரிக்காவில் நுழையும் உயர்திறன் உடைய இந்தியத் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்த சட்டப் பூர்வமான வசிப்பிடத்தை அதிக அளவில் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ➢ சுயாதீன நிபுணர் நியமனம் குறித்த வாக்கெடுப்பு:

- பாலியல் ரீதியாக சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள் குறித்த அறிக்கை அளிக்கும் முக்கியமான ஐ.நா. அதிகாரியின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான வாக்கெடுப்பில் இந்தியா வாக்களிக்கவில்லை.
- இந்தக் தீர்மானமானது உலகெங்கிலும் உள்ள LGBTQசமூகத்திற்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து அறிக்கையளிக்கும் தனிச் சுதந்திரமுடைய நிபுணருக்கு மூன்று ஆண்டுக் கால பதவி நீட்டிப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்தத் தீர்மானத்திற்கு மனித உரிமைகள் மன்றத்தில் பெரும்பாலான உறுப்பு நாடுகளின் ஆதரவு கிடைத்தது.
- ஆனால் இந்தியா, அங்கோலா, புர்கினா பாஸோ, கேமரூன், காங்கோ, ஹங்கேரி, தாகோ மற்றும் செனகல் போன்ற நாடுகள் இறுதி வாக்கெடுப்பில் வாக்களிக்கவில்லை.
- பாகிஸ்தான், சவுதி அரேபியா, சீனா, வங்காள தேசம், பஹ்ரைன், கத்தார், சோமாலியா ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.
- 2016 ஆம் ஆண்டின் தனிச் சுதந்திரமுடைய நிபுணர் தேர்ந்தெடுப்பிற்கான வாக்கெடுப்பின் போதும் இந்தியா வாக்களிக்கவில்லை.
- கோஸ்டாரிகா நாட்டின் விக்டர் மாட்ரிகல் போர்லியோஸ் தற்போதைய தனிச் சுதந்திர நிபுணராக உள்ளார்.

## ➢ மாலத்தீவிற்கான இந்தியாவின் ஆதரவு:

- காமன்வெல்த் நாடுகளில் மாலத்தீவை ஒரு உறுப்பினராக மீண்டும் இணைப்பதை துரிதப்படுத்தக் கோரி இந்தியா காமன்வெல்த் அமைப்பை வலியுறுத்தியுள்ளது.
- லண்டனில் நடைபெற்ற 19வது காமன்வெல்த் நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்ஷங்கர் இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவித்தானர்.
- 2016 ஆம் ஆண்டில் அப்துல்லா யாமீன் அதிபராக இருந்த போது மாலத்தீவு காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேறியது.

## ➢ காமன்வெல்த் நாடுகள்:

- காமன்வெல்த் என்பது 53 சுதந்திர மற்றும் இறையாண்மை கொண்டுள்ள நாடுகளின் தன்னார்வக் கூட்டமைப்பாகும். இவையணைத்தும் முன்னதாக பிரித்தானியப் பேரரசின் ஆளுகையின் கீழ் இருந்த நாடுகளாகும்.
- 1931 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பானது லண்டனைத் தலைநகரமாகக் கொண்டது.
- 2009 ஆம் ஆண்டில் கடைசியாக இணைந்த நாடு ருவாண்டா ஆகும்.
- அனைத்து 53 உறுப்பினர் நாடுகளும் பொருளாதார நிலை அல்லது பொருளாதார அளவு ஆகியவற்றின் படியல்லாமல் சமமான கருத்துரிமையைக் கொண்டு உள்ளது.

## ➢ ஹோமியோபதி மருத்தவத்திற்கான மறு செலுத்துகை ரத்து - பிரான்ஸ்

- 2021 ஆம் ஆண்டு முதல் ஹோமியோபதிச் சிகிச்சையை மேற்கொள்ளும் அதன் குடிமக்களுக்கு மருத்துவக் கட்டணங்களைத் திருப்பியளிப்பதை நிறுத்த பிரெஞ்சு அரசு முடிவு செய்துள்ளது.

- 2017 ஆம் ஆண்டில் ஹோமியோபதிச் சிகிச்சைக்கு நிதியளிப்பதை நிறுத்த பிரிட்டன் அரசு முடிவு செய்தது.
- மாற்று மருத்துவமான ஹோமியோபதியை 1796 ஆம் ஆண்டு ஜெர்மனியின் சாமுவேல் ஹேன்மேன் என்பவர் உருவாக்கினார்.

### ➢ ரோஹிங்கியா அகதிகள்:

- ரோஹிங்கியா அகதிகள் மியான்மர் நாட்டிற்குத் திரும்பிச் சென்ற பின் பயன்படுத்துவதற்காக அந்நாட்டு அரசிற்கு முன்கூட்டியே கட்டி முடிக்கப்பட்ட 250 வீடுகளை இந்தியா வழங்கியுள்ளது.
- 2017ஆம் ஆண்டில் இந்தியா ரோஹிங்கியா மக்களின் மறுவாழ்விற்காக 5 ஆண்டு காலத்திற்கு 25 மில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவிட உறுதி எடுத்திருந்தது.
- மியான்மர் அரசின் இன அழித்தொழிப்பின் காரணமாக ஏறத்தாழ 7,00,000 ரோஹிங்கியா முஸ்லீம்கள் வங்க தேசத்திற்கும் அதனைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் இடம் பெயர்ந்தனர்.

### ➢ புதிய வடகொரிய அரசியலமைப்பு:

- புதிய வட கொரிய அரசியலமைப்பானது கிம் ஜாங் உன்னை “வட கொரிய நாட்டின் தலைவர்” என்றும் “இராணுவப் படைத் தலைவர்” என்றும் அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- இதற்கு முந்தைய அரசியமைப்பானது கிம் ஜங் உன்னை நாட்டின் ஒட்டுமொத்த இராணுவத்திற்குத் தலைமை வகிக்கும் “தலைமைத் தளபதி” என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தது.
- இந்தப் பெயர் மாற்றமானது வட கொரியாவின் அமெரிக்காவுடனான அமைதி உடன்படிக்கையின் முன்னோட்டமாகக் கருதப்படுகின்றது.

### ➢ இலங்கையில் தட்டம்மை ஒழிப்பு:

- உலக சுகாதார அமைப்பினால் (World Health Organization)மிகவும் தொற்று ஆபத்துடைய “தட்டம்மை” நோயற்ற நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டுள்ளது.
- இலங்கையில் தட்டம்மை நோயானது கடைசியாக 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவு செய்யப்பட்டது.
- சமீப காலத்தில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளில் தட்டம்மை நோய் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது.

### ➢ ஒன் மோர் ஆர்பிட் - உலகைச் சுற்றும் பயணம்:

- ஆக்சன் ஏவியேசன் நிறுவனத்தின் தலைவரான ஹமிஷ் ஹார்டிங் மற்றும் விண்வெளி வீரரான டெர்ரி விர்ட்ஸ் தலைமையிலான “ஒன் மோர் ஆர்பிட்” குழுவானது ஜுலை 11 அன்று உலகை வலம் வந்து முடித்துள்ளது.
- இந்தப் பயணமானது அப்பல்லோ 11 விண்கலம் சந்திரனில் தலையிறங்கிய 50வது ஆண்டு நிறைவையும் 1519 ஆம் ஆண்டில் பெர்டினாண்ட் மெகல்லனால் முதல் உலகச் சுற்றுப் பயணம் தொடங்கப்பட்ட நாளின் 500வது வருடத்தையும் குறிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டது.
- இது அதிவேக தொலைதூர சொகுசு விமானமான கல்ஃப் ஸ்ட்ரீம் G 650ER (Gulf stream G650ER)என்ற விமானத்தால் முடிக்கப்பட்டது.
- இது கஜகஸ்தான், மொரிஷியஸ், சிலி ஆகிய நாடுகளில் பழுது நீக்கம் மற்றும் எரிபொருள் நிரப்புவதற்காக நிறுத்தப்பட்டது.
- ரஷ்யாவின் விண்வெளி வீரரான ஜென்னடி படல்கா இந்த 8 பேர் கொண்ட குழுவில் ஒருவராவார்.
- இவர் 879 நாட்களை மொத்தமாக விண்வெளியில் கழித்து உலக சாதனைப் படைத்தவர் ஆவார்.

## ➢ ரான்சம்வேரினால் பில்லியன் டாலர்கள் இழப்பு:

- சர்வதேச இணையதள சமூகத்தின் நிகழ்நேர அறக்கட்டளைக் கூட்டிணைவினால் தொகுக்கப்பட்டத் தரவின்படி, சர்வதேச அளவில் கடந்த ஆண்டில் ரான்சம்வேரினால் 60% இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதன் மதிப்பு 8 பில்லியன் டாலர்கள் ஆகும்.
- "வானாக்ரை" மற்றும் "நாட்பெட்டையா" ஆகியவை சமீபத்தில் ஏற்பட்ட இரண்டு மிகவும் ஆபத்தான ரான்சம்வேர்களாகும்.
- ரான்சம்வேர் (தரவுகளை முடக்கிப் பணம் கோருவது) என்பது கணினி அமைப்புக்குள்ளேயே முக்கியமான கோப்புகள் மற்றும் ஆவணங்களை அணுக மறுக்கும் ஒரு வகையான மால்வேராகும் (தரவுகளைத் திருடுவது).
- இது கணினிக்குள்ளே இருக்கும் ஆவணங்கள் மற்றும் கோப்புகளை அணுகப் பயனாளிகளிடம் பிணைத் தொகையைக் கேட்கும்.
- கணினிகள் காலாவதியான அல்லது சிதைந்த மென்பொருளை எதிர்கொள்ளும்போது ரான்சம்வேர் எளிதில் பரவுகின்றது.

## ➢ ஐரோப்பிய நாடாளுமன்றம்:

- இத்தாலியைச் சேர்ந்த சமூக ஆர்வலரான டேவிட் மரியா சசோலி என்பவர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் 2022 ஆம் ஆண்டு ஜனவரி வரை இந்தப் பாராளுமன்றத்தை நடத்தவிருக்கின்றார்.
- இவர் அண்ட்டோனியா டஜானி என்பவரையடுத்துப் பதவி ஏற்பார்.
- மேலும் இவர் ஐரோப்பிய ஒன்றியத்திலும் சர்வதேச அளவிலும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரதிநிதியாகச் செயல்படுவார்.
- பெரும்பாலான ஐரோப்பிய ஒன்றியச் சட்டங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வரவு செலவுத் திட்டங்கள் ஆகியவற்றை இயற்றுவதற்குத் தலைவரின் கையொப்பம் தேவைப்படுகிறது.

## ➢ கடந்த 30 ஆண்டுகளில் சீனாவின் மோசமான வளர்ச்சிக் குறைவு:

- இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 6.2 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.
- உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடான சீனாவின் கடந்த 27 ஆண்டுகளில் மிகவும் மோசமான பொருளாதார வளர்ச்சி இதுவாகும்.
- இது அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் மற்றும் மோசமான உலகளாவிய தேவை ஆகியவற்றின் விளைவாக நிகழ்ந்துள்ளது.

## ➢ காங்கோவில் எபோலா நோய் பாதிப்பு - சர்வதேச அவசர நிலை:

- உலக சுகாதார அமைப்பானது (WHO-World Health Organisation) காங்கோ மக்களாட்சிக் குடியரசில் பரவி வரும் எபோலா நோயினைச் சர்வதேச அளவில் பொதுச் சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளது.
- WHO ஆனது சர்வதேச "அவசர நிலையை" மற்ற நாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற மற்றும் ஒருங்கிணைந்த சர்வதேச மீட்புப் பணி தேவைப்படுகின்ற ஒரு "அசாதாரண நிகழ்வு" என்று வரையறுக்கின்றது.
- இது போன்ற ஒரு அறிவிப்பானது சர்வதேச ஈர்ப்பையும் நிதியையும் கொண்டு வரும்.
- வரலாற்றில் இது போன்ற வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 5-வது அறிவிப்பு இதுவாகும்.

- இதற்கு முந்தைய அவசர நிலை அறிவிப்புகள் பின்வருமாறு: அமெரிக்காவில் ஏற்பட்ட ஜிக்கா நோய், பன்றிக் காய்ச்சல், போலியோ ஒழிப்பு மற்றும் 2014-16ல் மேற்கு ஆப்பிரிக்காவில் பரவிய எபோலா நோய்.

## ➢ ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு:

- உலகின் மிகப்பெரிய செல்வந்தராக அமேசானின் தலைவரான ஜெப் பெசோஸ் தொடர்கிறார். இவருடைய மொத்த சொத்து மதிப்பு 125 பில்லியன் அமெரிக்க டாலராகும்.
- பில் கேட்ஸ் 107 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 3-வது இடத்தில் உள்ளார்.
- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனரான பில்கேட்ஸ் ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீட்டில் ஒருபோதும் இரண்டாவது இடத்திற்குக் கீழே சென்றதில்லை. ஆனால் தற்பொழுது இவர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான பெர்னார்டு அர்னால்ட் என்பவரால் 3-வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.
- பில் கேட்ஸின் கொடைப் பண்பு சார்ந்த முயற்சிகள் இந்தத் தரவரிசையில் இவர் பின்தங்கியதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.
- பில் கேட்ஸ் 35 பில்லியன் அமெரிக்க டாலருக்கு மேலாக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.
- செல்வமிக்க இந்தியரான முகேஷ் அம்பானி இந்தத் தரவரிசையில் 51.8 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்து மதிப்புடன் 13வது இடத்தில் உள்ளார்.
- அஸிம் பிரேம்ஜி என்பவர் இரண்டாவது செல்வமிக்க இந்தியராக இந்தத் தரவரிசையில் 20.5 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் 48-வது இடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்து இந்தத் தரவரிசையில் சிவ் நாடார் 92-வது இடத்திலும் உதய் கோட்டக் 96-வது இடத்திலும் உள்ளனர்.
- ப்ளூம்பெர்க் செல்வந்தர்கள் குறியீடு என்பது 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனத்தால் வெளியிடப்படும் உலக செல்வந்தர்களின் தினசரித் தரவரிசையாகும்.
- இது உலகில் உள்ள 500 செல்வமிக்க நபர்களைப் பட்டியலிடுகின்றது.

## ➢ அணி சேரா இயக்கத்தின் சந்திப்பு:

- அணி சேரா இயக்கத்தின் ஒருங்கிணைப்பு மன்றத்தின் அமைச்சர்களுக்கிடையேயான சந்திப்பானது வெனிசுலாவில் உள்ள காராகஸில் நடைபெற்றது.
- 2019ஆம் ஆண்டுச் சந்திப்பின் கருத்துரு,"சர்வதேசச் சட்டத்திற்கு மதிப்பளிப்பதன் மூலம் அமைதியை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்" என்பதாகும்.
- 2016ஆம் ஆண்டு முதல் NAM அமைப்பின் தலைவராக வெனிசுலா இருந்து வருகின்றது. தற்பொழுது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் NAMஅமைப்பின் தலைவர் பதவி அஸர்பைஜானுக்குச் செல்லவிருக்கின்றது.
- அமைப்பு 1961 ஆம் ஆண்டு பெல்கிரேடில் ஏற்படுத்தப்பட்டது.
- இது இந்தியாவின் முன்னாள் பிரதமரான ஜவஹர்லால் நேரு மற்றும் யூகோஸ்லேவியாவன் அதிபரான ஜோசிப் ப்ரோஸ் டிட்டோ ஆகியோரின் கூட்டு முயற்சியாகும்.
- இது ஐக்கிய நாடுகளுக்குப் பிறகு 120 உறுப்பு நாடுகளைக் கொண்ட 2-வது மிகப் பெரிய சர்வதேச அமைப்பாகும்.
- இது அமெரிக்கா மற்றும் சோவியத் இரஷ்யா ஆகிய நாடுகளினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டிணைவின் ஒரு பகுதியாக இல்லாமல் வளரும் நாடுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு முதன்மை அமைப்பாகும்.

## ➢ ஏழை இடப்பெயர்வாளர்களது மீள்குடியேற்றம்:

- ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 8 நாடுகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு இடப்பெயர்வாளர்கள் மீள்குடியேற்றத் திட்டத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்த நாடுகள் மத்தியத் தரைக்கடலில் மீட்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான இடப்பெயர்வாளர்களைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டுள்ளன.
- ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இடப்பெயர்வாளர்கள் தரைக்கடலைக் கடந்து ஐரோப்பாவிற்குச் செல்ல முயற்சிக்கின்றனர். அவர்கள் மிக முக்கியமான பகுதியான லிபியாவிலிருந்துப் புறப்படுகின்றனர்.

## ➢ தியாங்காங் 2: சீனா:

- சீனாவின் ஒரு மனித விண்வெளி நிலையமான தியாங்காங் -2 ஆனது ஜூலை 19 அன்று பசுபிக் பெருங்கடல் பகுதியில் பூமியின் வளிமண்டலத்திற்குள் அதன் கட்டுப்படுத்தப்பட்ட மறு நுழைவின் (மீண்டும் திரும்பி வருதல்) போது அழிக்கப்பட்டது.
- தியாங்காங் -2 ஆனது 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று செலுத்தப்பட்டது. 2016ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த விண்வெளி நிலையத்தில் 2 விண்வெளி வீரர்கள் 30 நாட்கள் தங்கியிருந்தனர்.
- இது சீனாவின் மிக நீண்ட மனித விண்வெளித் திட்டமாக இதுநாள் வரை இருந்து வருகின்றது.
- புவியில் உள்ள மிகவும் தொலைதூரப் பகுதியான நெமோ என்ற புள்ளிக்கு அருகில் விண்வெளிக் கழிவுகள் விழுகின்றன.

## ➢ சீனாவில் இரகசியக் கடற்படைத் தளம் - ரியாம்:

- தாய்லாந்து வளைகுடாவில் உள்ள ஒரு கடற்படைத் தளத்தின் பிரத்தியேகப் பயன்பாட்டிற்குச் சீனாவை அனுமதிக்கும் "இரகசிய ஒப்பந்தம்" ஒன்றில் சீனா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- ரியாம் கடற்படைத் தளம் என்பது தாய்லாந்து வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ள கம்போடியா கடற்படையால் நிர்வகிக்கப்படும் ஒரு தளமாகும்.
- சீனா அடுத்த 30 ஆண்டுகளுக்கு தனது இராணுவ வீரர்களை அங்கு நிறுத்தவும், ஆயுதங்களை அங்கு சேமித்து வைக்கவும், போர்க் கப்பல்களை அங்கு நிறுத்தி வைக்கவும் திட்டமிட்டுள்ளது.
- இது சீனாவின் அயல்நாட்டில் உள்ள 2-வது கடற்படைத் தளமாக விளங்கும். 2017 ஆம் ஆண்டில் டிஜிபவுட்டியில் தனது முதல் கடற்படைத் தளத்தை சீனா திறந்துள்ளது.

## ➢ நீருக்கடியில் அமைந்த இராணுவ வாகனங்கள் அருங்காட்சியம்:

- ஜோர்டன் நாடு அகாபா கடற்கரைக்கு அருகில் செங்கடலின் கீழ்ப்பரப்பில், தனது முதலாவது நீருக்கடியிலான இராணுவ வாகனங்கள் அருங்காட்சியகத்தைத் திறந்துள்ளது.
- இந்த அருங்காட்சியகத்தில் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்ட 19 இராணுவ வன்பொருள் வாகனங்கள் உள்ளன. இந்த அருங்காட்சியகம் கடலுக்கடியில் 92 அடி ஆழம் வரை மூழ்கியுள்ளது.
- இந்தத் தனித்துவ சுற்றுலா அனுபவமானது ஏற்கெனவே புகழ்பெற்று விளங்கும் அகாபா டைவிங் (மூழ்கும்) பொழுதுபோக்கு இடத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ➢ செங்கடல்:

- செங்கடல் என்பது ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா ஆகியவற்றிற்கு இடையே அமைந்த இந்தியப் பெருங்கடலின் கடல்நீர் நுழைவுப் பகுதியாகும்.
- இது உலகளாவிய இயற்கை நிதியத்தினால் சர்வதேச 200 சூழலியல் பிரதேசமாக (சுற்றுச்சுழலுக்கு உகந்த) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- சர்வதேச 200 சூழலியல் பிரதேசங்கள் பட்டியலில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட சூழல் பிரதேசங்கள் “அருகிவரும் பகுதிகளாக” தரப்படுத்தப்பட்டுள்ளன.

## ➢ ஒமேகா தொகுதி - ஐரோப்பாவில் காலநிலை சார்ந்த அவசர நிலை:

- பெல்ஜியம், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் இரண்டாவது முறையாக தங்களது மிக அதிக வெப்பநிலையைப் பதிவு செய்துள்ளன.
- சமீபத்திய இந்த அனல் காற்றானது “ஒமேகா தொகுதியினால்” ஏற்பட்டிருக்கின்றது.
- மேற்கு ஐரோப்பாவின் வானிலையானது அதிவேகக் காற்றுப் புனலினால் (jet stream)மிகப் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.
- ஒமேகா தொகுதி என்பது அதிவேகக் காற்றுப் புனலைத் தடுத்து, திசை மாற்றக்கூடிய ஒரு உயர் காற்று அழுத்த அமைப்பாகும்.
- இது வட ஆப்பிரிக்கா மற்றும் ஐபீரியத் தீபகற்பம் ஆகியவற்றில் இருந்து ஏராளமான அனல் காற்றை மேலே செல்ல அனுமதிக்கின்றது.
- இது ஒமேகா வடிவத்தில் இருக்கின்றது. எனவே இது “ஒமேகா தொகுதி” என்ற பெயரைப் பெற்றுள்ளது.

## ➢ சர்வதேசப் புகையிலைப் பரவல்:

- உலக சுகாதார அமைப்பானது சர்வதேசப் புகையிலைப் பரவல் மீதான தனது 7-வது அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது புகையிலையின் தேவையைக் குறைப்பதற்காக உலக நாடுகள் எடுத்துள்ள தேசிய முயற்சிகளை ஆய்வு செய்கின்றது.
- தற்பொழுது ஏறத்தாழ 1.1 பில்லியன் புகைபிடிப்பவர்கள் உள்ளனர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 80 சதவிகித நபர்கள் குறைந்த வருமானம் கொண்ட மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இருக்கின்றனர்.

## ➢ “Working on a Warmer Planet”அறிக்கை:

- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது “Working on a Warmer Planet – The Impact of Heat Strees on Labour Productivity and Decent Work –ஒரு வெப்பமான கோளில் பணிபுரிதல் - தொழிலாளர் உற்பத்தித்திறன் &பண்பார்ந்த வேலைகளில் வெப்ப அயர்ச்சியின் தாக்கம்” என்று தலைப்பிடப்பட்ட தனது அறிக்கையை சமீபத்தல் வெளியிட்டது. பணிபுரியும் இடம் சூடாக இருக்கும் காரணத்தாலோ அல்லது தொழிலாளர்கள் ஆமை வேகத்தில் பணி செய்யும் காரணத்தாலோ வருங்காலத்தில் வேலை நேர இழப்பு (working hours loss)ஏற்படும் என அந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தியாதான் அதிகம் பாதிக்கப்படும் நாடாக இருக்கும் என்று ஐ.நா அறிக்கை தெரிவித்துள்ளது. இந்தியா அதன் அதிக மக்கள்தொகை காரணமாக வரும் 2030ஆம் ஆண்டில் உற்பத்தித்திறனில், 34 மில்லியன் அளவுக்கு முழுநேர வேலைகளை (full-time jobs)இழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புவி வெப்பமடைதலால் (Global warming)2030இல் இந்தியா 5.8%வேலை நேரத்தை இழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவும் குறிப்பாக விவசாயம் மற்றும் கட்டுமானத் துறைகளை இதன் பாதிப்பு மிகுந்திருக்கும்.
- 21ஆம் நூற்றாண்டின் இறுதியில் $1.5^0$ செல்சியஸ் என்ற அளவிலான உலகளாவிய வெப்பநிலை உயர்வு மற்றும் தொழிலாளர் வளத்தின் போக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் இக்கூற்றுகள் உள்ளன. இந்தியாவின் பெரும்பாலான தாக்கங்கள் விவசாயத்துறையிலேயே உணரப்படும். ஆனால், கட்டுமானத் துறையில், வெப்ப அயர்ச்சியானது ஆண் பெண் தொழிலாளர்களை பாதிப்பதால் வேலை நேரம் அதகரிப்பு என்பது இழப்பையே ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக ஈரப்பதம் உள்ள இடங்களில் $35^0$ செல்சியசுக்கு மேல் வெப்பநிலை காணப்பட்டால் பொதுவாக அது வெப்ப அயர்ச்சி (Heat Stress)என வரையறுக்கப்படுகிறது.

## ➢ புகழ்பெற்ற கதிர்காமம் கோயில்:

- இலங்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழா தொடங்கியுள்ளது. இதில் அனைத்து மதங்களையும் சேர்ந்த பக்தர்களும் பங்கேற்றனர். 15 நாட்கள் நீடிக்கும் இந்தத் திருவிழாவில் இலங்கை மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மக்களும் பங்கேற்கின்றனர். இந்தத்திருவிழா அடுத்த வாரம் வரும் முழுநிலவு இரவில்,'நீர் வெட்டும்' விழாவுடன் முடிவடையும்.
- ஆண்டுதோறும் இம்மாதத்தில் நடைபெறும் இத்திருவிழாவைக் காண, இலங்கை முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள், நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கதிர்காமத்தின் புனித ஆலயத்திற்கு வருகை தருகிறார்கள். இவ்விடம், ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் பல நூற்றாண்டுகள் பழமையான 'கார்த்திகை தேவி'யாலும் இக்கோவில் பிரபலமாக அறியப்படுகிறது. அந்நாட்டில்,'கதிர்காம தேவியோ' என்று அத்தெய்வம் அழைக்கப்படுகிறது.
- கதிர்காமம் பல்வேறு மதத்தினர் வசிக்கும் ஒரு நகரமாகும். இந்தக் கோவில் வளாகத்தினுள்ளேயே ஒரு பள்ளிவாசலும் அருகிலேயே ஒரு பௌத்த கோவிலும் உள்ளது. இலங்கையிலுள்ள பௌத்த யாத்திரைக்கான 16 முக்கிய இடங்களுள் ஒன்றாக அது கருதப்படுகிறது. 15 நாட்கள் நடைபெறும் இத்திருவிழா, இலங்கையின் கலாசார மற்றும் ஆன்மீக நிகழ்வுகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றான எசல பெரஹராவையும் காண்கிறது. பெரஹராவின்போது, ஆட்டக்காரர்கள் மற்றும் மேளக்காரர்கள் புடை சூழ, நன்கு அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது 'கதிர்காம தேவி' வலம் வருவார்.

## ➢ சிறைக்கைதிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம்:

- அஸ்ஸாம் மாநிலத்தின், போங்கைகான் மாவட்டத்தில், சிறைக் கைதிகளுக்கான மூன்று மாத திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகள் தங்களது தண்டனைக் காலத்தில் பலன்தரும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இது தவிர, கைதிகள் தங்களின் விடுதலைக்குப் பின்னர், வேலைவாய்ப்பைப் பெறவும் இது உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. திறன் மேம்பாட்டுப் பயிற்சி தவிர, போங்கைகான் மாவட்ட சிறைக்கைதிகளுக்கு ஒரு மாத கால யோகா பயிற்சியும் தொடங்கப்படவுள்ளது.

## ➢ நடுவணரசின் சாட்சிப் பாதுகாப்புத் திட்டம்:

- நவீன் பட்நாயக் தலைமையிலான ஒடிசா அரசு சமீபத்தில் மாநில உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசின் சாட்சிகள் பாதுகாப்புத் திட்டம் (Witness Protection Scheme) - 2018ஐ நடைமுறைப்படுத்தியுள்ளதாக அறிவித்தது. குற்றச் செயல்களில் விசாரணை, வழக்குத் தொடுப்பு மற்றும் நீதிமன்ற விசாரணை ஆகியவற்றில் எவ்வித பாரபட்சமும் இல்லை என்பதை உறுதிசெய்வதே இத்திட்டதின் நோக்கம் ஆகும். ஏனெனில், பிற குற்றவாளிகளிடமிருந்து சாட்சிகள் வழங்கும் சாட்சியங்களை காக்க எவ்வித பாதுகாப்பும் இல்லா காரணத்தால் அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் / அச்சுறுத்தப்படுகிறார்கள்.
- மாநில அரசாங்கத்தின் அறிவிப்பின்படி, இந்தத் திட்டத்தில் அச்சுறுத்தல் கருத்துப்படி மூன்று வகை சாட்சிகள உள்ளனர். விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையின்போது சாட்சி அல்லது அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வழக்குகளை உள்ளடக்கியது வகை A ஆகும். விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையின்போது சாட்சி அல்லது அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு, நற்பெயர் அல்லது சொத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வழக்குகள் வகை Bஆகும். விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையின்போதோ அல்லது அதற்குப் பிறகோ சாட்சி அல்லது அவர்தம் குடும்ப உறுப்பினர்களை மிதமாக அச்சுறுத்துவது அல்லது துன்புறுத்துவது, அவர்தம் புகழ் அல்லது சொத்துக்கு பங்கம் விளைவிப்பது வகை Cஆகும்.
- விசாரணையின்போது சாட்சியும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் நேருக்கு நேர் சந்தித்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுதல், பாதுகாத்தல் மற்றும் அடையாளத்தை மாற்றுதல், சாட்சியை இடமாற்றம் செய்தல்,

இரகசியத்தன்மை மற்றும் பதிவுகளை பாதுகாத்தல் மற்றும் செலவுகளை மீட்டெடுத்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களுள் அடங்கும்.

### ➢ விமானப் பயணச்சீட்டுகளுக்கு பசுமை வரி:

- மாசு குறைவான போக்குவரத்துத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக பிரான்சில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலிருந்தும் புறப்படும் அனைத்து விமானங்களுக்குமான விமானப் பயணச்சீட்டுகளில் 18 யூரோக்கள் ($ 20)வரை வரி விதிக்க பிரெஞ்சு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. 2020ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வரும் இந்தப் புதிய வரிவிதிப்புத் திட்டத்தின்படி, சிக்கன வகுப்பு பயணச்சீட்டின் மீது 1.5 யூரோக்கள் வரி விதிக்கப்படும் என்றும், அதிகபட்ச வரி உயர்தர வகுப்புக்கு விதிக்கப்பட உள்ளது என்றும் பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.
- இந்தப் புதிய திட்டத்தால் ஆண்டொன்றுக்கு சுமார் 182 மில்லியன் யூரோக்கள் வருவாய் கிடைக்கும். இந்த வருவாய் பசுமைப் போக்குவரத்து உட்கட்டமைப்பிற்கு, முக்கியமாக இரயில்வே துறைக்கு பயன்படுத்தப்படும். இந்த வரி விதிப்பு பிரான்ஸிலிருந்து புறப்படும் விமானங்களுக்குத்தானேயொழிய, பிரான்சுக்குள் வரும் விமானங்களுக்கு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, ஏப்ரல் 2018இல் இதேபோன்ற வரி சுவீடனில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது காலநிலையில் விமானப் பயணத்தின் தாக்கத்தை குறைக்கும் முயற்சியாக ஒவ்வொரு பயணச்சீட்டுக்கும் C40வரை வரி விதித்தது.

### ➢ 2019 சர்வதேச பல் - பரிமாண ஏழ்மைக் குறியீடு:

- நடப்பாண்டு சர்வதேச பல் - பரிமாண ஏழ்மைக் குறியீட்டை (Multidimensional Poverty Index)சமீபத்தில் ஐ.நா வளர்ச்சித்திட்டம் (UNDP), ஆக்ஸ்போர்டு ஏழ்மை மற்றும் மனித மேம்பாட்டுத் திட்டம் (OPHI)ஆகியவை வெளியிட்டுள்ளன. இந்தக் குறியீட்டின்படி, 2006 மற்றும் 2016க்கு இடையில் 271 மில்லியன் மக்களை இந்தியா ஏழ்மை நிலையிலிருந்து மீட்டுள்ளது. மேலும் சொத்துக்கள், சமையல் எரிபொருள், நலம் &ஊட்டச்சத்து போன்ற துறைகளில் வலுவான முன்னேற்றங்களுடன் அக்காலகட்டத்தில், பல்பரிமாண ஏழ்மைக் குறியீடு மதிப்புகளில் மிக விரைவான ஒடுக்கத்தை இந்தியா பதிவு செய்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் நலமிகு சூழல், நல்ல வேலை, சமூக பாதுகாப்பு, கல்வி, மருத்துவம் போன்ற வாழ்வின் 10 அடிப்படை அம்சங்களின் அடிப்படையில் பல்பரிமாண ஏழ்மை வகைப்படுத்தப்படுகிறது. 101 நாடுகள் இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. குறைந்த வருவாய் உள்ள 31 நாடுகள், நடுத்தர வருவாய் உடைய 68 நாடுகள், அதிக வருவாய் உள்ள 2 நாடுகள் என மொத்தம் 101 நாடுகளில் 130 கோடி மக்கள் ஏழ்மை நிலையில் உள்ளனர்.

## பொருளாதார நிகழ்வுகள்

### ➢ ஆதார் மற்றும் பான்:

- 2019-20 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையானது ஆதார் தகவலை நிரந்தர கணக்கு எண்ணுடன் (பான் தகவலுடன்) பரிமாற்றிக் கொள்வதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- இது வருமான வரித் தாக்கல் செய்வதற்குப் பான் அட்டை இல்லாமல் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி வரித் தாக்கல் செய்ய மக்களை அனுமதிக்கின்றது.
- எந்த இடங்களில் எல்லாம் பான் எண் கேட்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் ஆதார் எண்ணைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தரவின்படி 42 கோடி பான் அட்டைகளில் 23 கோடி பான் அட்டைகள் மட்டும் ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளன.

### ➢ நடப்புக் கணக்குப் பற்றாக்குறை:

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2019 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.1 சதவிகிதம் அல்லது 57.2 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளது.
- அதிகமான கச்சா எண்ணெய் இறக்குமதியின் காரணமாக ஏற்பட்ட அதிக வர்த்தகப் பற்றாக்குறையினால் கடந்த 6 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையானது 2018 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 சதவிகிதம் அல்லது 48.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.

### ➢ டிஜிட்டல் உடான்:

- ரிலையன்ஸ் ஜியோவானது நாட்டில் முதன்முறையாக இணையப் பயனாளர்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவு அளிக்கும் முன்முயற்சியை அறிவித்துள்ளது.
- முக நூலோடு இணைந்து மேற்கொள்ளப்படும் இந்த டிஜிட்டல் உடான் முயற்சியின் ஒரு பகுதியாக, ஜியோவானது ஒவ்வொரு சனிக்கிழமையும் அதன் பயனர்களுக்கு ஜியோ தொலைபேசியின் அம்சங்கள், வெவ்வேறு செயலிகளின் பயன்கள் மற்றும் முகநூல் பயன்பாடு உள்ளிட்ட இணையப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றி அறிய உதவும்.
- இந்த டிஜிட்டல் உடான் முன்முயற்சியானது 10 பிராந்திய மொழிகளில் ஒளி-ஒலிப் பயிற்சிகளைக் கொண்டிருக்கும்.

### ➢ முதன்மை முதலீட்டு நிறுவனங்கள்:

- இந்திய ரிசர்வ் வங்கியானது முதன்மை முதலீட்டு நிறுவனங்களுக்கான (Core Investment Companies - CIC) ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை ஆய்வு செய்வதற்காக பணிக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இக்குழு இந்திய மத்திய வங்கியின் நிர்வாகம் சாராத தலைவரான தபன் ராய் தலைமையில் செயல்படும்.
- 100 கோடிக்கும் மேல் சொத்து மதிப்பு கொண்ட வங்கி சாரா நிதியில் நிறுவனங்கள் CIC நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

### ➢ RBI-யின் மூன்று ஆண்டு காலத் திட்ட வரைவு:

- மத்திய வங்கியின் பிற செயல்பாடுகளில், ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வையை மேம்படுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான திட்ட வரைவை இறுதி செய்துள்ளது.
- இந்த வரைவானது "உத்கார்ஷ் 2022" என பெயரிடப்பட்டுள்ளது.
- இது உலகளாவிய மத்திய வங்கிகள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகளை ஒத்ததாக அமைந்துள்ளது.

### ➢ RBI-யின் துணை ஆளுநராக மறு நியமனம்:

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக NS விஸ்வநாதன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் வங்கியின் ஒழுங்கு முறைகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கின்றார்.
- NS விஸ்வநாதனைத் தவிர B.Pகனுங்கோ மற்றும் M.K.ஜெயின் ஆகியோர்யின் இதர துணை ஆளுநர்கள் ஆவர்.
- மேலும் இவர் RBIக்கான தகுந்தப் பொருளாதார மூலதனக் கட்டமைப்பு குறித்து ஆய்வு செய்யும் பீமல் ஜலன் குழுவிலும் உறுப்பினராக உள்ளார்.

### ➢ மூன்றாம் தரப்பு காப்பீட்டு நிர்வாகிகள்:

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது சுகாதார சேவைக்கான காப்பீடுகளின் மூன்றாம் தரப்பு நிர்வாக நிறுவனங்களை நிர்வகிக்கும் விதிமுறைகளில் மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- காப்பீட்டு நிறுவனம் மற்றும் பாலிசிதாரருக்கு இடையில் ஒரு இடைத் தரகராக இந்த நிர்வாக நிறுவனங்கள் செயல்படுகின்றன.
- காப்பீட்டு உரிமைக் கோரல்களையும் இவை கையாள்கின்றன.
- புதிய விதிமுறைகளானது பாலிசிதாரர்கள் தங்களுக்கு விருப்பமான நிர்வாக நிறுவனங்களைத் தேர்வு செய்ய அனுமதியளிக்கின்றது.

### ➢ அரசு உரிமை பெற்ற தங்கப் பத்திரங்கள்:

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 08 அன்று தொடங்கவிருக்கும் அரசு உரிமை பெற்ற தங்கப் பத்திரங்களின் (SGB - Sovereign Gold Bonds)புதிய தொகுதிக்கான விலையை கிராமிற்கு ரூ.3443 ஆக அரசு நிர்ணயித்துள்ளது.
- 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட SGBதிட்டத்தின் கீழ் உள்ள பத்திரங்கள் தங்கத்தின் ஒரு கிராம் அலகில் குறிக்கப்பட்ட பத்திரங்களாகும்.
- ஒரு நிதியாண்டில் ஒரு நபருக்கு பத்திரங்களின் மீதான குறைந்தபட்ச முதலீட்டு வரம்பு 1 கிராம் மற்றும் அதிகபட்ச முதலீட்டு வரம்பு 500 கிராம் ஆகும்.

### ➢ முக்கியமான தகவல்களின் அங்கீகரிக்கப்படாத கசிவு:

- மின்னணுத் தரவு தளங்களை சேதப்படுத்தும் அல்லது அழிக்கும் அல்லது விசாரணையின் போது தக்கத் தரவை வழங்கத் தவறும் நிறுவனங்கள் மீது அதிக அளவு அபராதங்களை விதிக்க 2019 ஆம் ஆண்டின் நிதி மசோதாவானது செபிக்கு (SEBI)அதிகாரமளித்துள்ளது.
- அபராதமானது 10 கோடி வரை அல்லது சட்ட விரோதமான ஆதாயங்களின் மூன்று மடங்குத் தொகை இவற்றில் எது அதிகமோ அந்தத் தொகை விதிக்கப்படும்.
- தனிப்பட்டத் தரகர்களுக்கு ரூ.1 கோடி வரை அபராதம் விதிக்கலாம்.

- இந்த நடவடிக்கையானது கட்செவி அஞ்சல் மற்றும் இதர டிஜிட்டல் வழிமுறைகள் மூலம் விலைத் தகவல் மற்றும் பிற முக்கிய தரவுகளின் அங்கீகாரமற்ற கசிவைத் தடுப்பை நோக்கமாகக் கொண்டது.

## ➢ வெளிநாட்டுச் சந்தையிலிருந்து கடன் வாங்குதல்:

- மத்திய அரசு, தனது மொத்தக் கடன் வாங்கலின் ஒரு பகுதியை வெளிநாட்டுச் சந்தையிலிருந்து வாங்க முடிவு செய்துள்ளது.
- இதுவரை, இந்திய அரசு உள்ளூர் சந்தையில் மட்டுமே பத்திரங்களை வெளியிட்டு வந்தது.
- இது தற்பொழுது வெளிநாட்டில் அரசின் உரிமை பெற்ற பத்திரங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
- குறிப்பிட்ட கால வட்டி உத்தரவாதங்களைச் செலுத்துவதற்கான உறுதி மொழியுடன் அரசாங்கம் பத்திரங்களை வெளியிடுகின்றது. இந்திய அரசு அப்பத்திரங்களின் முதிர்வுத் தேதியில் பத்திரத்தின் முழு மதிப்பையும் திருப்பிச் செலுத்துகின்றது.

## ➢ நன்மைகள்:

- வெளிநாட்டுச் சந்தையில் கடன் வாங்குதலானது வலிமையான ரூபாய்க்கு வழிவகுக்கும்.
- அரசாங்கம் இறக்குமதியைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் நேரத்தில் ஒரு வலிமையான ரூபாயானது இறக்குமதியை ஊக்கப்படுத்தும்.

## ➢ இந்தியா - ஆசியோன் முக்கூட்டு வர்த்தக அமைச்சர்கள் சந்திப்பு:

- விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுறவு (Regional Comprehensive Economic Partnership – RCEP) மீதான அதிகாரப் பூர்வமற்ற கலந்தறிதலுக்காக இந்தியா - ஆசியான் முக்கூட்டு வர்த்தக அமைச்சர்கள் சந்திப்பு புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இந்தச் சந்திப்பானது மத்திய வணிக தொழில் துறை மற்றும் இரயில்வே துறை அமைச்சரான பியூஷ் கோயலால் கலந்து கொள்ளப்பட்டது.
- இந்தியப் பொருட்களுக்கு சீனாவுடனான சந்தை அணுகல் பிரச்சினைகள் மிகக் குறிப்பாக சிக்கலானவை என்று அவர் அங்கு வலியுறுத்தினார்.
- RCEP என்பது பின்வருவனவற்றிற்கிடையே பரிந்துரைக்கப்பட் ஒரு வர்த்தகத் தடையற்ற ஒப்பந்தமாகும்.
  - தென்கிழக்கு ஆசிய நாடுகள் கட்டமைப்பின் (Association of Southeast Asian Nations – ASEAN)10 உறுப்பினர் நாடுகள் (புருனேய், கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்).
  - ஆசியாவில் தற்பொழுதுள்ள வர்த்தகத் தடையற்ற ஒப்பந்தங்களைக் கொண்ட இந்தோ – பசிபிக் நாடுகள் (சீனா, ஜப்பான், தென் கொரியா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து).

## ➢ சர்வதேச முதலீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு:

- சர்வதேச நடுவர் நீதிமன்றமானது பாகிஸ்தான் மீது 5 பில்லியன் டாலர்கள் அபராதத்தை விதித்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் செம்புப் பிரித்தெடுத்தல் திட்டமான ரெக்கோ டிக் திட்டத்திற்காக ஒரு நிறுவனத்திற்குச் "சுரங்கக் குத்தகை அனுமதியை" சட்டவிரோதமாக மறுத்ததற்காக இந்த அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பிரச்சினை உலக வங்கியின் சர்வதேச முதலீட்டுப் பிரச்சினைகள் தீர்வு மையத்தினால் (International Centre for Settlement of Investment Disputes – ICSID)தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.
- பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மகாணத்தில் உள்ள ரெக்கொ டிக் சுரங்கமானது, அங்குள்ள தங்கம் மற்றும் செம்பு ஆகியவற்றின் இருப்பிற்காகப் புகழ் பெற்று விளங்குகின்றது.

## ➢ 15வது நிதி ஆணையத்தின் பதவிக் காலம் - நீட்டிப்பு:

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது 15வது நிதி ஆணையத்தின் பதவிக் காலத்தை 2019 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான நிதிகளையும் உள்ளாக்க நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் வரம்பை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளது.
- 2014-19 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு நிதி மற்றும் பட்ஜெட் சீர்திருத்தங்கள் காரணமாக இந்த நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ➢ நிதி ஆணையம் பற்றி:

- 15வது நிதி ஆணையமானது குடியரசுத் தலைவரின் ஆணையால் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் N.K.சிங் தலைமையில் அமைக்கப்பட்டது.
- இது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான 5 ஆண்டு காலகட்டத்திற்கு மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பங்கீடுகளுக்கான விதிமுறைகள் குறித்து முடிவெடுக்கும்.

## ➢ பீமல் ஜலன் குழுவின் மிகை நிதி மாற்றம்:

- பீமல் ஜலன் குழு இந்திய ரிசர்வ் வங்கியிடம் உள்ள மிகை நிதியை அரசிற்கு வழங்குமாறு பரிந்துரைக்க முடிவு செய்துள்ளது.
- 3-5 ஆண்டுகளுக்கு படிப்படியாக இந்த நிதி அரசிற்கு வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த மிகை நிதி மாற்றமானது, தனது நிதிப் பற்றாக்குறை இலக்கை எட்டுவதற்கு அரசிற்கு உதவும்.
- இந்த மிகை நிதி மாற்றப் பரிந்துரையில் எதிர்பாராத நிதி மற்றும் மறுமதிப்பீட்டு நிதி ஆகிய இரண்டும் அடங்கும்.

## ➢ மிகவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மாநிலம்:

- பெங்களூருவில் உள்ள பணவழங்கீட்டுத் தீர்வுகள் நிறுவனமான "ரசோர்பே" ஆனது 'வளர்ந்துவரும் நிதியில் தொழில்நுட்பங்களில் சகாப்தம்" என்ற தனது டிஜிட்டல் பரிமாற்றம் அறிக்கையின் 2-வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி மிகவும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மாநலங்களின் பட்டியலில் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இந்தப் பட்டியலில் மகாராஷ்டிரா மற்றும் தில்லி ஆகியவை தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தப் பட்டியலில் தமிழ்நாடு 4-வது இடத்திலும் ஆந்திரப் பிரதேசம் 5-வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

## ➢ சரக்கு மற்றும் சேவைகள் வரியின் 2-ஆம் ஆண்டு:

- 2019 ஆம் ஆண்டு ஜுலை 1 அன்று சரக்கு மற்றும் சேவைகள் வரி செயல்படுத்துதலின் 2வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.
- மறைமுக வரி முறையை எளிமைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இதர சீர்திருத்தங்கள் தவிர ஒரு புதிய வரித் தாக்கல் முறையை நிதி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் ஜுன் மாதத்திற்கான GSTவசூலானது 1 இலட்சம் கோடிக்கும் (ரூ.99,939 கோடி) குறைவாக இருந்தது.

- நந்தன் நிலகேனி,'சஹமதி -Sahamati'என்னும் ஒரு கணக்குத் திரட்டு மாதிரியை (Account Aggregator Model)அறிமுகப்படுத்தியுள்ளார். இதன்மூலம் தனிநபர்கள் மற்றும் சிறு வணிகர்கள் தங்களின் டிஜிட்டல் நிதிசார் ஆவணங்களை மூன்றாம் தரப்பினருடன் பாதுகாப்பான முறையில் பகிர்ந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக, கடனைப் பெற விரும்பும் ஒரு பயனர், விருப்பான கணக்கு ஒருங்கிணைப்பாளரை தேர்ந்தெடுப்பதன் மூலம் கடன் வழங்கும் நிறுவனத்திடம் டிஜிட்டல் முறையில் அவரது வங்கி அறிக்கைகள் மற்றும் பிற விவரங்களை விரைவாகப் பகிர முடியும்.
- இதுவரை, ஆறு கணக்கு ஒருங்கிணைப்பாளர்கள் ரிசர்வ் வங்கியின் கொள்கை ரீதியான ஒப்புதலைப் பெற்றுள்ளன. இதில்,NESL Asset Data, CAMS Finserv Financial Services, Cookiejar Technologies Pvt Ltd, FinSec AA Solutions Pvt Ltd. Yodlee Finsoft Pvt Ltdமற்றும் Jio Information Solutionsஆகியவை அடங்கும். சூழலமைப்பை ஆதரிக்கும் பொருட்டு,'சஹமதி'யானது பிரிவு 8இன் கீழ், இலாப நோக்கற்ற மாதிரியாக உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு OneIndia.comஐ நிறுவிய BGமகேஷ் தலைமை தாங்குவார்.
- ரிசர்வ் வங்கியிடம் சுய ஒழுங்குமுறை அமைப்பு உரிமத்திற்கு சஹமதி விண்ணப்பிக்கவுள்ளது. அது ஒரு தன்னாட்சி அமைப்பு நிலையை 'சஹமதி'க்கு வழங்கும். இத்தொழில்நுட்பக் கட்டமைப்பை இலாப நோக்கற்ற ispirt உருவாக்கியுள்ளது.

## ➢ குடியிருப்பு சொத்து விலை கண்காணிப்பு ஆய்வு:

- 13 நகரங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள்/ வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் (HFC)வழங்கிய வீட்டுக் கடன்கள் குறித்த காலாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் குடியிருப்பு சொத்து விலை கண்காணிப்பு ஆய்வை ரிசர்வ் வங்கி (RBI)நடத்தியுள்ளது. வருமானத்துக்கேற்ற வீட்டு விலை விகிதம்(House Price to Income - HPTI) 2015 மார்ச்சில் 56.1 ஆக இருந்து 2019 மார்ச்சில் 61.5 ஆக அதிகரித்ததால் கடந்த 4 ஆண்டுகளில் வீடு வாங்கும் வாய்ப்புத் திறன் (Housing Affordability)மோசமடைந்துள்ளதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
- HPTI விகிதமானது வீடு வாங்கும் வாய்ப்புத் திறனை பிரதிபலிக்கிறது. மும்பை (HPTI 74.4உடன்) இந்தியாவில் மிகவும் குறைந்த வீடு வாங்கும் வாய்ப்புடைய நகரமாக உள்ளது. 2015 மார்ச்சில் 47.2 என்ற அளவிலிருந்த HPTIஉடன் ஒப்பிடும்போது மார்ச் காலாண்டில் 54.3 என்ற வருமானத்துக்கேற்ற வீட்டு விலை விகிதத்துடன் வீடு வாங்குவதற்கான மிகவும் அதிக வாய்ப்புடைய நகரமாக புவனேசுவர் (54.3) உள்ளது. வருமானத்துக்கேற்ற வீட்டு விலை விகிதம் என்ற கருத்தை, கடன் வழங்குநர்கள், வீடு வாங்குவதற்கான வாய்ப்பை அளவிட பயன்படுத்துகின்றனர்.

## ➢ ஊடக சுதந்தரத்திற்கான முதலாவது சர்வதேச மாநாடு:

- ஊடக சுதந்திரத்திற்கான முதலாவது சர்வதேச மாநாட்டை இலண்டனில் இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகள் இணைந்து நடத்தின. உலகெங்கிலும் ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இம்மாநாடு நடைபெற்றது. இதில் பிரசார் பாரதி தலைவர் A சூர்ய பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்வபன் தாஸ் குப்தா &பத்திரிகை கவுன்சில் உறுப்பினர் காஞ்சன் குப்தா ஆகியோர் பங்கேற்றனர்.

### ➢ சர்வதேச சிறப்புமிகு விருதுகள் 2019:

- அமெரிக்கா இந்தியா உத்திசார் பங்காளர் மன்றமானது (Us India Strategic Partnership Fourm – USISPF)தனது 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச சிறப்புமிக்க விருதுக்கான மாஸ்டர் கார்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் தலைவரான அஜய் பங்கா மற்றும் விப்ரோவின் தலைவரான அசிம் பிதேம்ஜி ஆகியோரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்தப் புகழ்மிக்க விருதானது அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு இவர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளுக்காக இவர்களுக்கு வழங்கப்படுகின்றது.
- அமெரிக்க அதிபரின் மூத்த ஆலோசகரான ஜாரெட் குஸ்னெர் என்பவர் இச்சந்திப்பு நடைபெறும் போது இந்த விருகளை வெற்றியாளர்களுக்கு வழங்கவிருக்கின்றார்.

### ➢ USISPF:

- 2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த இலாப நோக்கில்லா அமைப்பானது அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே இருநாட்டு மற்றும் உத்திசார் பங்காளர் உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜுலை 11 அன்று USISPFவின் 2-வது வருடாந்திர தலைமைத்துவ மாநாடானது வாஷிங்டன் D.C.யில் நடைபெற இருக்கின்றது.

### ➢ ஆலன் தூரிங்:

- இரண்டாம் உலகப் போரின் போது குறிமுறை நீக்க வல்லுநராக இருந்த ஆலன் தூரிங் என்பரின் உருவத்தை பிரிட்டனின் புதிய 50 பவுண்ட் பணத்தில் பொறிப்பதற்காக இங்கிலாந்து வங்கியினால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பழமையான பிரிட்டிஷ் சட்டத்தின் கீழ் அவருடைய ஓரினச் சேர்க்கைக் குற்றத்திற்காக அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அதன் மூலம் ஏற்பட்ட அவருடைய துயரமான இறப்பிற்குப் பின்பு பத்தாண்டுகள் கழித்து இந்த முக்கியமான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் இவர் இறந்த பின்பு இரண்டாம் எலிசபெத் அரசிடமிருந்து கருணை மன்னிப்பினைப் பெற்றார்.
- இவருடைய தூரிங் இயந்திரங்கள் ஜெர்மனின் நாஜிப் படைகளின் மீது அழுத்தம் செலுத்துவதற்கு நேச நாடுகளுக்கு உதவியது.
- அறிவியல் துறையில் இவருடைய தலைசிறந்த பங்களிப்புகளுக்கான கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் தந்தை என்று இவர் அறியப்படுகின்றார்.

### ➢ சங்கீத நாடக நிறுவனத்தின் வருடாந்திர விருதுகள்:

- சங்கீத நாடக நிறுவனம் 2018 ஆம் ஆண்டிற்கான பின்வரும் மூன்று பிரிவுகளில் விருதுகளை அறிவித்துள்ளது.

### ➢ சங்கீத நாடக நிறுவனத்தின் தோழமை விருதுகள்:

- இது உயரிய மற்றும் அரிதான ஒரு கௌரவ விருதாகம். எப்போதும் இந்த விருதைப் பெறும் நபர்களின் எண்ணிக்கை 40 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
  - ஜாகீர் ஹுசைன் (தபேலா கலைஞர்)

- சோனல் மான்சிங் (நடனக் கலைஞர்)
- ஜதீன் கோஸ்வாமி (பயிற்சியாளர்)
- கல்யாண சுந்தரம் பிள்ளை (பரத நாட்டியக் கலைஞர்)

### ➢ சங்கீத நாடக நிறுவன விருதுகள் (அகாடமி புரஸ்கர்)

- நிகழ்த்துக் கலைகள் பிரிவில் இசை, நடனம், நாடகம், பாரம்பரியம், நாட்டார் / பழங்குடியின இசை ஆகிய துறைகளில் 44 கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இந்த விருது கலைகளில் நீடித்து விளங்கும் தனிநபரின் பணி மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக 1952 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது.
- இந்த விருதுகள் இந்தியக் குடியரசுத் தலைவரா் விருது வழங்குவதற்கான சிறப்பு விழாவின் போது வழங்கப்படவிருக்கின்றன.
- 2018 ஆம் ஆண்டில் விருது பெற்றவர்கள்: பாரத நாட்டியத்திற்காக ராதா ஸ்ரீதர், மணிப்பூரி நடனத்திற்காக அஹும் லட்சுமி தேவி, நாடக ஆசிரியருக்காக ராஜுவ் நாயக் மற்றும் நாட்டுப்புற இசைக்காக மாலினி அவாஸ்தி.

### ➢ உஸ்நாத் பிஸ்மில்லாஹ் கான் யுவ புரஸ்கர்ஸ்:

- நிகழ்த்துக் கலையில், அவரவருடைய துறையில் சிறந்து விளங்கும் இளம் திறமையாளர்களைக் கௌரவிப்பதற்காக 40 வயதிற்குக் கீழுள்ள 32 இளம் கலைஞர்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- சங்கீத நாடக நிறுவனத்தின் தலைவர் இந்த விருதுகளை வழங்குகின்றார்.

### ➢ சார்க் திரைப்படத் திருவிழா 2019:

- 2019 ஆம் ஆண்டு ஜுலை 02 முதல் 07 வரை தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மன்றத்தின் (South Asian Association for Regional Cooperation – SAARC)9-வது பதிப்பு இலங்கையின் கொழும்புவில் நடத்தப்பட்டது.
- இது சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஆப்கானிஸ்தான், வங்க தேசம், பூட்டான், இந்தியா, மாலத் தீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த திரைப்படங்களை காட்சிப்படுத்தியது.
- வங்காள மொழித் திரைப்படமான நாகர்கீர்த்தன் சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்றுள்ளது. இத்திரைப்படத்தை இயக்கிய கவுசிக் கங்குலி சிறந்த இயக்குநருக்கான விருதை வென்றுள்ளார்.
- இந்தியா மொத்தம் 6 விருதுகளை வென்றுள்ளது.

### ➢ டாக்டர் ஜெயா அருணாச்சலம்:

- வேலைக்குச் செல்லும் பெண்கள் மன்றத்தின் (WWF - Working Women’s Forum)நிறுவனர் மற்றும் சமூக ஆர்வலரான ஜெயா அருணாச்சலம் சென்னையில் காலமானார்.
- இவர் இந்தியாவில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களின் முன்னோடியாக விளங்கினார்.
- முறைசாராத் துறைகளில் பணியாற்றும் ஏழைப் பெண்களுக்கு சிறு கடன்கள், தொழிற்சங்க ஆதரவு, சுகாதார நலம் மற்றும் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்காக 1978 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

### ➢ நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு பிரதமர் - புத்தக வெளியீடு:

- முன்னாள் கடற்படைத் தலைவரான அட்மிரல் சுஷில் குமார் எழுதிய “நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு பிரதமர்” எனும் புத்தகமானது ஜுன் 28 அன்று வெளியிடப்பட்டது.

- இந்தப் புத்தகமானது 2001 ஆம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றத்தில் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு அப்போதையப் பிரதமரான வாஜ்பாய் மற்றும் முப்படைத் தலைவர்களுக்கிடையேயான உறவு குறித்து விளக்குகிறது.

## ➢ 5-வது சர்வதேச காவல்துறை கண்காட்சி - 2019:

- சர்வதேச காவல்துறை கண்காட்சியானது 2019 புதுடெல்லியின் பிரகதி மைதானத்தில் நடைபெறுகின்றது.
- இந்தக் கண்காட்சியானது பல்வேறு நாடுகளின் காவல் துறையின் பிரதிநிதிகள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப வழக்குநர்களை சந்திக்கக் கூடிய ஊடாடும் தளமாகும்.
- நெக்ஸ்ஜென் கண்காட்சியாளர் ஏற்பாடு செய்திருந்த இந்த கண்காட்சியில் சிங்கப்பூர், இஸ்ரேல், தென் கொரியா, தைவான், சீனா, ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, போலந்து மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சிறந்த மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை இங்கு காட்சிப்படுத்தின.
- அகில இந்திய அளவில் 100,000 மக்களுக்கு 117 காவலர்கள் என்ற விகிதத்தில் உள்ளனர்.

## ➢ சிற்பி இலக்கிய விருது:

- சிற்பி பாலசுப்பிரமணியம் தலைமையிலான சிற்பி அறக்கட்டளை, கவிஞர் தேவதச்சனுக்கு 24ஆம் ஆண்டுக்கான 'சிற்பி இலக்கிய' விருதை அறிவித்துள்ளது. 'விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி' நூலுக்காகக் கவிஞர் சோலை மாரியப்பனுக்கு 'சிற்பி இலக்கியப் பரிசையும் 'Target 0'என்னும் சுற்றுச்சூழல் வனப்பாதுகாப்பு அமைப்புக்கு பொ.மா.சுப்பிரமணியம் விருதையும் சிற்பி அறக்கட்டளை அறிவித்துள்ளது.

## ➢ காவலர் பதக்கத்தின் எண்ணிக்கை அதிகரிப்பு:

- ஆண்டுதோறும் வழங்கப்படும் 'காவலர் பதக்க'த்தின் எண்ணிக்கையை ஆயிரத்து ஐந்நூறிலிருந்து மூவாயிரமாக உயர்த்தி தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

## ➢ விருதுகளைப் பெறுவோர்களின் பட்டியல்:

| விருது | பெறுவோர் |
|---|---|
| சங்கீத கலாநிதி | S. சௌம்யா |
| சங்கீத கலா ஆச்சார்யா | MS. ஷீலா, சீதா நாராயணன் |
| டி.டி.கே விருது | கோதாண்ட ராமன் மற்றும் ராஜ்குமார் பாரதி (பாரதியாரின் கொள்ளுப் பேரன்) |
| இசைக் கலைஞர் விருது | ஆர்த்தி N ராவ் |
| நிருத்ய கலாநிதி | கலைமாமணி விருது பெற்ற பிரியதர்ஷினி கோவிந்த் |

## ➢ தமிழ்நாடு அரசின் புதிய விருதுகள் - உருவாக்கம்:

- சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு **'அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் விருது'** அளிக்கப்படும்.
- தமிழ் வேர்ச்சொல் ஆய்வு, அகராதி உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு ஆய்வுப் பணிகளில் ஈடுபடும் தமிழறிஞர் ஒருவருக்கு **'தேவநேயப் பாவாணர் விருது'** அளிக்கப்படும்.
- காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த்தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு **'காரைக்கால் அம்மையார் விருது'** அளிக்கப்படும்.

- வீரமாமுனிவர் நெறியில் அவரது படைப்பு நடையில் காவியங்கள், சிற்றிலக்கியங்கள் என்ற வகைகளில் தமிழ்த்தொண்டாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு **'வீரமாமுனிவர் விருது'** அளிக்கப்படும்.
- அயல்மொழியினருக்கு எளிதாகவும், விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் வாராணசி ஹிந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- தமிழ் ஆட்சிமொழிச் சட்டமானது கடந்த 1956ஆம் ஆண்டு டிச.27இல் இயற்றப்பட்டது. இதனை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிச.21 - 27 வரை **'ஆட்சிமொழிச் சட்ட வாரம்'** அனைத்து மாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

➢ **சங்கப்புலவர்களுக்கு நினைவுத்தூண்கள்: தமிழ்நாடு அரசின் தமிழ்த்துறை அறிவிப்பு:**

- சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனாருக்கும், விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரில் **கபிலருக்கு ஒரு தூணும்,** தூத்துக்குடி மாவட்டம் **கொற்கையில் மாறோக்கத்துநம்பலத்தானார், மாறோக்கத்து நப்பசலையார்,** மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகன் புல்லங்காடனார், வெறிபாடிய காமக்கண்ணியார், முன்றுறையரையனார் ஆகிய 6 புலவர்களுக்கும் சேர்த்து **ஒரு நினைவுத்தூண்** என மொத்தம் 3 நினைவுத்தூண்கள் அமைக்கப்படும்.
- சி.பா. ஆதித்தனார் பெயரில் 'சிற்றிதழ் பரிசு' என்ற புதிய விருது ஆண்டுதோறும் அளிக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசின் தமிழ்த்துறை அறிவித்துள்ளது.
- சொல்லாய்வுகள், ஆய்வுக்கட்டுரைகள், அகராதியியல் சார்ந்த கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் தொடர்பான செய்திகளை ஆவணப்படுத்தி செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்குநரை இதழாசிரியராகக்கொண்டு 'சொல்வயல்' என்ற பெயரில் மாத இதழ் வண்ணப்படங்களுடன் எழுதுபொருள் அச்சுத்துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளது.
- பேரவை விதி 110இன்கீழ், ஆண்டுதோறும் நவம்பர்.1 அன்று தமிழ்நாடு நாளாக கொண்டாடப்படும் எனவும்,ரூ.50 லட்சம் செலவில் திருச்சியில் தியாகராஜ பாகவதருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் எனவும், திருக்குறள் ஹீப்ரு மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்படும் எனவும், நீர்வளத்தை மேம்படுத்த 'நடந்தாய் வாழி காவிரி திட்டம்' செயல்படுத்தப்படும் எனவும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

### ➢ இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பு (ICA – Indian Cricketers Association):

- பிசிசிஐ ஆனது இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ICA ஆனது சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் கூட்டமைப்பு மன்றத்துடன் இணைக்கப்படவில்லை. இது முன்னாள் ஆண்கள் மற்றும் மகளிர் கிரிக்கெட் வீரர்களை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கும்.
- இந்தியாவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான கபில் தேவ், அஜித் அகர்கர் மற்றும் சாந்தா ரங்கசாமி ஆகியோர் ICAன் இயக்குநர்கள் ஆவர்.

### ➢ 2019-ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட்:

- இறுதிப் போட்டி மற்றும் சிறப்புத் பந்து வீச்சு (Super Over)ஆகியவற்றில் ஆட்டம் சமநிலை அடைந்ததற்குப் பிறகு எல்லைத் தாண்டிய ஓட்டங்களின் (Boundaries)மொத்த எண்ணிக்கையில் நியூசிலாந்தை வீழ்த்தி 2019 ஆம் ஆண்டிற்கான ஐசிசி உலகக் கோப்பையை இங்கிலாந்து வென்றது.
- நியூசிலாந்து அடித்திருந்த எல்லைத் தாண்டிய ஓட்டங்களை (17) விட அதிகமாக இங்கிலாந்து அணி அதிகமாக (26) அடித்திருந்ததால் அந்த அணி வெற்றி பெற்றது.
- தொடரின் நாயகனாக கேன் வில்லியம்சன் (நியூசிலாந்து) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
  - இவர் ஒரு உலகக் கோப்பைத் தொடரில் அதிக ரன்களை (578) எடுத்த அணித் தலைவரானார்.

### ➢ பிற தகவல்கள்:

- இது உலகக் கோப்பையின் 12வது பதிப்பாகும்.
- இது மே 30 முதல் ஜூலை 14 வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றால் நடத்தப்பட்டது.
- இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டிருக்கும் ஐந்தாவது உலகக் கோப்பைப் போட்டி இதுவாகும்.
- ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் முடிவை சிறப்புப் பந்துவீச்சு (சூப்பர் ஓவர்) மூலம் தீர்மானிப்பது இதுவே முதன்முறையாகும்.
- இங்கிலாந்து அணியானது 2010 உலக டி20 ஐசிசி சாம்பியன்ஷிப்பைத் தொடர்ந்து 2வது ஐசிசி சாம்பியன்ஷிப்பையும் தனது முதலாவது உலகக் கோப்பையையும் வென்றுள்ளது.
- உள்நாட்டில் நடைபெற்ற போட்டியில் உலகக் கோப்பையை வென்ற 3-வது அணியாக இங்கிலாந்து ஆகியுள்ளது (போட்டியை நடத்திய நாடே போட்டியை வென்ற நாடு என்ற வகையில்)
- மற்ற நாடுகள் - 2011 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் 2015 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா.

### ➢ 2023 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி:

- 2023 ஆம் ஆண்டின் ஐசிசி உலகப் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரானது பிப்ரவரி 09 முதல் மார்ச் 26 வரை இந்தியாவில் நடைபெற உள்ளது.
- இது ஆண்கள் உலகப் கோப்பை கிரிக்கெட்டின் 13-வது பதிப்பாகும். மேலும் இந்தப் போட்டியை இந்தியா தனியாக நடத்துவது இதுவே முதன்முறையாகும்.
- இந்தியா ஏற்கனவே மூன்று முறை (1987, 1996, 2011) போட்டிகளை நடத்தியிருந்தாலும் ஒவ்வொரு முறையும் அதன் அண்டை – ஆசிய நாடுகளுடன் இணைந்தே நடத்தியது.
- ஒட்டு மொத்தமாக 5 முறை (1975, 1979, 1983, 1999 மற்றும் 2019) என அதிக முறை இங்கிலாந்து இப்போட்டியை நடத்தியுள்ளது.

- 1987 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டி மட்டுமே இங்கிலாந்திற்குப் பிறகு விலகி இந்தியா மற்றும் பாகிஸ்தானில் நடத்தப்பட்ட முதல் பதிப்பாக உள்ளது.

| Years | Winners | Runners – sup | Host Nation |
|---|---|---|---|
| 1975 | West Indies | Australia | England |
| 1979 | West Indies | Australia | England |
| 1983 | India | West Indies | England |
| 1987 | Australia | England | India & Pakistan |
| 1992 | Pakistan | England | Australia & New Zealand |
| 1996 | Sri Lanka | Australia | Pakistan & India |
| 1999 | Australia | Pakistan | England |
| 2003 | Australia | India | South Africa |
| 2007 | Australia | Sri Lanka | West Indies |
| 2011 | India | Sri Lanka | India & Bangladesh |
| 2015 | Australia | New Zealand | Australia & New Zealand |
| 2019 | England | New Zealand | England |
| 2023 | - | | India |

## ➢ உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப்:

- சர்வதேச கிரிக்கெட் ஆணையமானது (ICC- International Cricket Council) உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் தொடரைப் போன்று உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பைத் தொடங்க முடிவு செய்துள்ளது.
- இந்த சாம்பியன்ஷிப்பின் முதல் போட்டியானது இங்கிலாந்தில் உள்ள எட்க்பாஸ்டன் கிரிக்கெட் மைதானத்தில் ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் 05 ஆம் தேதி வரை இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவிற்கு இடையே விளையாடப் படவிருக்கின்றது.
- அனைத்து அணிகளுக்கும் 2 ஆண்டு காலத்தில், அந்த அணிகளின் செயல்பாட்டைப் பொறுத்துப் புள்ளிகள் வழங்கப்படவிருக்கின்றன.
- முதல் 2 அணிகள் 2021 ஆம் ஆண்டில் நடைபெறும் உலகக் கோப்பை டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியை எதிர்கொள்ளவிருக்கின்றன.
- இத்தொடரில் ஆப்கானிஸ்தான், அயர்லாந்து மற்றும் ஜிம்பாவே ஆகிய நாடுகள் கலந்து கொள்ளவில்லை.

| Matches in series | Points for a win | Points for a tie | Points for a draw |
|---|---|---|---|
| 2 | 60 | 30 | 20 |
| 3 | 40 | 20 | 13.3 |
| 4 | 30 | 15 | 10 |
| 5 | 24 | 12 | 8 |

## ➢ PT உஷாவிற்கு "முதுபெரும் பட்டம்":

- புகழ்பெற்ற தடகள வீராங்கனையான PTஉஷா சர்வதேசத் தளகள கூட்டமைப்பு மன்றத்தின் (International Association of Athletics Federation's – IAAF)முதுபெரும் பட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- தளகள போட்டிகளுக்கு இவருடைய நீண்ட கால மற்றும் திறன்மிக்க சேவைளை அங்கீகரிக்கும் விதமாக இந்தக் கௌரவிப்பு நிகழ்ந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கத்தாரில் நடைபெறவிருக்கும் 52-வது IAAFகூட்டத்தில் இவருக்கு அவ்விருது வழங்கப்படவிருக்கின்றது.
- இவர் பெரும்பாலும் "இந்தியத் தடகளத்தின் அரசி" என்று போற்றப்படுகின்றார்.

- 1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் உஷாவின் திறமைமிக்க செயல்பாடு வெளிப்பட்டது.
- 400 மீட்டர் தடை ஓட்டத்தில் இறுதி ஆட்டம் வரை சென்ற முதல் இந்திய வீராங்கனை இவராவார். ஆனால் இவர் வெண்கலப் பதக்கத்தை இழந்தார்.

### ➢ ஹீமா தாஸ் 5-வது தங்கம்:

- செக் குடியரசில் நடைபெற்ற நோவே மெஸ்டோ நேட் மெட்டுஜி கிராண்ட் பிரிக்ஸில் இந்தியாவைச் சேர்ந்த ஹீமா தாஸ் மகளிருக்கான 400 மீட்டர் தொலைவை 52.09 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இது ஹீமா தாஸின் முதலாவது 400 மீட்டர் தங்கப் பதக்கமாகும்.
- 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இவர் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- இதற்கு முன்பு இவர் ஜுலை மாதத்தில் மட்டும் 200 மீட்டர் போட்டியில் 4 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- இவர் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய அதிவிரைவு தடகள வீராங்கனை ஆவார்.
- போகேஸ்வர் பருக்கிற்குப் பிறகு சர்வதேச விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற அசாமைச் சேர்ந்த 2-வது தடகள வீராங்கனை ஹீமா தாஸ் ஆவார்.

### ➢ கால்பந்து வீரர் சுனில் சேத்ரி:

- இந்தியக் கால்பந்து அணியின் தலைவரான சுனில் சேத்ரி ஆறாவது முறையாக(All India Football Federation – AIFF)ஆண்களுக்கான ஆண்டின் கால்பந்து வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் தற்பொழுது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களிடையே சர்வதேச அளவில் அதிக கோல்களை அடித்து இரண்டாவது வீரராக விளங்குகின்றார். கிறிஸ்டியானோ ரொனால்டோ 149 கோல்களையும் லியோனல் மெஸ்ஸி 68 கோல்களையும் அடித்துள்ளனர்.
- ஏஸ் இந்திய சர்வதேச வீராங்கனையான ஆஷாலதா தேவி என்பவர் AIFFமகளிருக்கான 2015-19ஆம் ஆண்டு கால்பந்து வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### ➢ AIFF:

- அனைத்து இந்தியக் கால்பந்துக் கூட்டமைப்பு என்பது இந்தியாவில் கால்பந்து மன்றத்தினை நிர்வகிக்கும் அமைப்பாகும்.
- இது 1937 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் தில்லியில் அமைந்துள்ளது.

### ➢ காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் 2019:

- காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் தொடரானது ஓசானியாவில் உள்ள சாமோவா நாட்டின் அபியாவில் நடைபெற்றது.
- 22 தங்கப் பதக்கங்கள்,10 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 3 வெண்கலப் பதக்கங்கள் என அனைத்துப் பிரிவுகளிலும் சேர்த்து 35 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இநதியா முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த P. அனுராதா என்பவர் 221 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

### ➢ விம்பிள்டன் சாம்பியன்ஷிப் -ஆண்கள் ஒற்றையர்:

- 2019 விம்பிள்டன் சாம்பியன்ஷிப் கிராண்ட் ஸ்லாம் டென்னீஸ் போட்டியானது லண்டனில் நடைபெற்றது.
- ஜென்டில்மேன் ஒற்றையர் சாம்பியன் பட்டம் நோவோக் ஜோகோவிக்கால் வெல்லப்பட்டது.

- நடப்பு சாம்பியனாக இருந்த ஜோகோவிக் இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரரை தோற்கடித்துத் தனது பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.
- விம்பிள்டன் போட்டி வரலாற்றிலேயே மிக நீண்ட நேரமாக 4 மணி நேரம் 57 நிமிடங்கள் நடைபெற்ற ஒற்றையர் இறுதிப்போட்டி இதுவேயாகும்.
- ஒரு போட்டித் தொடரின் கடைசிச் சுற்றில் 12 புள்ளிகள் என்ற ஒரு நிலையான சமநிலையைக் கொண்ட ஒரு சிறப்பம்சம் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு சுற்றுப் பயணத்தின் முதல் பதிப்பு இதுவேயாகும்.

| ALL-TIME LIST OF MAJOR WINNERS | | | | | |
|---|---|---|---|---|---|
| | Total | Aus open | French open | Wimb by | US open |
| Federer | 20 | 6 | 1 | 8 | 5 |
| Nadal | 18 | 1 | 12 | 2 | 3 |
| Djokovic | 16 | 7 | 1 | 5 | 3 |
| Sampras | 14 | 2 | 0 | 7 | 5 |
| Emerson | 12 | 2 | 0 | 7 | 5 |

## G.கோசனோவ் நினைவு சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்:

- G.கோசனோவ் நினைவு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளானது கஜஸ்தானின் அலலமாட்டியில் நடைபெற்றது.
- **பதக்கப் பட்டியல்**

| தங்கப் பதக்கம் | |
|---|---|
| 800 மீட்டர் - ஆடவர் | முகமது அப்சல் |
| வட்டு எறிதல் - ஆடவர் | கங்கதீப் சிங் |
| வட்டு எறிதல் - மகளிர் | நவ்ஜித் கவுர் |
| மும்முறை தாண்டுதல் | முகமது சலாலுதின் |
| நீளம் தாண்டுதல் | M.ஸ்ரீசங்கர் |
| ஈட்டி எறிதல் | சஹில் சில்வால் |
| **வெள்ளிப் பதக்கம்** | |
| வட்டு எறிதல் - ஆடவர் | S. மித்ரா வருண் |
| வட்டு எறிதல் - மகளிர் | ஜியோதி |
| மும்முறை தாண்டுதல் | முகமது ஜீபர் |
| ஈட்டி எறிதல் | ரோஹித் யாதவ் |
| **வெண்கலப் பதக்கம்** | |
| சம்மட்டி எறிதல் | ஆனிதா |

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் சதுரங்கக் கூட்டமைப்பு பட்டம்:

- சர்வதேச மாற்றுத் திறனாளிகள் சதுரங்கக் கூட்டமைப்பின் பெண்களுக்கான தனி நபர் சதுரங்க சாம்பியன்ஷிப் பட்டத்தை K.ஜெனிதா ஆன்டோ வென்றுள்ளார்.
- இவர் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்தவராவார்.
- இந்த 19வது பதிப்புப் போட்டியானது ஸ்லோவோக்கியாவில் நடத்தப்பட்டது.
- கிராண்ட் மாஸ்டர் பட்டம் வெல்வகை நோக்கமாகக் கொண்ட இவர் தற்போதைய பெண்கள் பதிப்பில் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்றவராவார்.

## FIFAமகளிர் உலகக் கோப்பை:

- பிரான்சின் லியோனில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் FIFA மகளிர் உலகக் கோப்பையை அமெரிக்கா வென்றுள்ளது.
- அமெரிக்கா 2 கோல்கள் அடித்து நெதர்லாந்தை வீழ்த்தியுள்ளது.
- 1930 ஆம் ஆண்டில் இத்தாலியின் விட்டோரியோ போசைவையடுத்து ஆண்கள் மற்றும் மகளிர் உலகக் கோப்பைகளில் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வரும் முதலாவது பயிற்சியாளர் ஜில் எலிஸ் ஆவார்.
- அமெரிக்க மகளிர் அணி இக்கோப்பையை 1991, 1999 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வென்றுள்ளது.

## கான் காக.்.ப் தங்கக் கோப்பை:

- மெக்ஸிகோவின் ஆடவர் கால்பந்து அணியானது இறுதிப் போட்டியில் 1 - 0 என்ற கணக்கில் அமெரிக்க அணியை வீழ்த்தி கான் காக.்.ப் தங்கக் கோப்பையை வென்றது.
- இது மெக்ஸிக்கோவின் 8-வது தங்கக் கோப்பைப் பட்டமாகும்.

## கான் காக.்.ப் கோப்பை:

- இது வடக்கு, மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்தியத்தின் சர்வதேச ஆடவர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஆகும்.
- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டியானது 1963 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## 2019 ஆம் ஆண்டின் இந்திய விளையாட்டுப் பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு விருதுகள்:

- 2019 ஆம் ஆண்டின் இந்திய விளையாட்டுப் பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பின் (Sports Journalists Federation of India - SJFI)வருடாந்திரப் பொதுச் சந்திப்பு குஜராத்தின் அகமதாபாத்தில் நடத்தப்பட்டது.
- இது தேசிய மற்றும் சர்வதேச அளவில் சாதனைகளைப் படைத்ததற்காகவும் விளையாட்டிற்குத் தங்களதுப் பங்களிப்பினை அளித்ததற்காகவும் விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கின்றது.
- விருதுகள் மற்றும் வெற்றியாளர்களின் பட்டியல்

| Awards | Winners |
|---|---|
| SJFI Medal (SJFI's Highest Honour) | Prakash Padukone (Badminton) |
| Sportsperson of the Year 2019 | Pankaj Advani (Billiards and Snooker) and Bajrang Punia (Wrestling) |
| Emerging Talent of the Year 2019 | Saurabh Choudhary (shooting) |
| Team of the Year 2019 | Vidarbha cricket team |

## 21-வது காமன்வெல்த் டேபில் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2019:

- ஒடிசா மாநில டேபிள் டென்னிஸ் மன்றமானது (Odisha State Table Tennis Association - OSTTA)2019 ஆம் ஆண்டிற்கான 21-வது சாம்பின்ஷிப்பை நடத்தவிருக்கின்றது.
- இது ஒடிசாவின் கட்டாக்கில் உள்ள ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் 2019ஆம் ஆண்டு ஜுலை 17 முதல் 22 வரை நடைபெறவிருக்கின்றது.
- ஏற்கனவே 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள் இந்தியாவில் நடத்தப்பட்டன.

## ஆசிய இளையோர் ஸ்குவாஷ்:

- 19 வயதுக்குட்பட்ட ஸ்குவாஷ் இறுதிப் போட்டியில் வீர் ஜோத்ராண என்பவர் யாஷ் பாடேட் என்பவரை வீழ்த்தி ஆசிய இளையோர் தனிநபர் ஸ்குவாஷ் சாமிபயன்ஷிப்பை வென்றுள்ளார்.

- ரவி தீக்சித் மற்றும் வேலா செந்தில் குமார் ஆகியோருக்குப் பின்பு இப்பட்டத்தை வென்ற மூன்றாவது வீரர் ஜோத்ராணி ஆவார்.
- 2014 ஆம் ஆண்டில் ஈரானில் நடைபெற்ற 13 வயதுக்குட்பட்ட ஆசிய ஜுனியர் சாம்பியன்ஷிப்பை வென்ற முதலாவது இந்தியரும் இவராவார்.

➤ **கிரண் ரிஜ்ஜு குழு:**

- 2020 மற்றும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கான தயார் நிலையை ஒருங்கிணைத்து மற்றும் உத்திகளை வகுத்துச் செயல்படுத்துவதற்காக 10 உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- இது விளையாட்டுத் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜுவின் தலைமையில் செயல்படும்.
- ஒலிம்பிக் வீரர்களான லியாண்டர் பயஸ் மற்றும் துப்பாக்கி சுடுதல் வீரரான கஹன் நரங் ஆகியோரும் இக்குழுவில் உள்ளனர்.
- இக்குழுவானது இந்தியத் தடகள வீரர்களின் செயல்திறன் ஒலிம்பிக் போட்டி மற்றும் பிற பன்முக விளையாட்டுகளில் மிகச சிறப்பாக அமைவதை உறுதிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

| நாள் | கொண்டாடப்படும் முக்கிய தினம் | கருப்பொருள் / செயல்பாடுகள் |
|---|---|---|
| 1 | சரக்கு மற்றும் சேவைகள் வரி தினம் | இவ்வருடமானது வரிச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதலின் 3வது ஆண்டைக் குறிக்கின்றது. |
| 1-7 ஜுலை (முதல் வாரம்) | வன மகோத்சவ் வாரம் | இது அப்போதைய வேளாண் மற்றும் உணவுத் துறை அமைச்சரான K.M.முன்சிபால் 1950 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. |
| 2 | உலக விளையாட்டுப் பத்திரிக்கையாளர்கள் தினம் | இது சர்வதேச விளையாட்டுகள் மற்றும் பத்திரிக்கை மன்றத்தினால் 1994-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இது இந்நிறுவனம் தொடங்கப்பட்டதன் 70-வது ஆண்டைக் குறிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. |
| 2 | உலகில் அடையாளம் கணப்படாத பறக்கும் பொருட்கள் தினம் | இதற்கு முன்பு இத்தினம் ஜுன் 24 அன்று அனுசரிக்கப்பட்டது. ஆனால் இத்தினத்தை மிகப்பெரிய அளவில் அனுசரிப்பதற்காக ஜுலை 2 ஆம் தேதியை உலக UFO தினமாக உலக UFO தின அமைப்பு அறிவித்துள்ளது. |
| 4 | அமெரிக்கச் சுதந்திர தினம் | இது 1776-ஆம் ஆண்டில் பிரிட்டனிடமிருந்து அமெரிக்கா சுதந்திரம் அடைந்ததற்கானப் பிரகடனத்தை வெளியிட்டதன் நினைவாகும். |
| 6 | சர்வதேசக் கூட்டுறவு தினம் | "நாகரீகமான வேலைக்கான கூட்டுறவு" |
| 6 | உலக விலங்குவழி நோய்கள் தினம் | இத்தினம் விலங்கு வழி நோயின் அபாயம் குறித்து விழிப்பணர்வை ஏற்படுத்துகின்றது. |
| 11 | உலக மக்கள் தொகை தினம் | 1994 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் மேம்பாடு மீதான சர்வதேச மாநாட்டின் குறிக்கோள்களில் எட்டப்படாத தீர்மானங்களின் மீது உலகளாவிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற அழைப்பை விடுத்துள்ளது. |
| 12 | சர்வதேச மலாலா தினம் | பெண் கல்விக்காகப் பணியாற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த புகழ்பெற்ற ஆர்வலரான மலாலா யூசப்சாய் என்பவரை கௌரவிப்பதற்காக ஜுலை 12 ஆம் தேதியை சர்வதேச மலாலா தினமாக ஐக்கிய நாடுகள் அறிவித்துள்ளது. |
| 14 | சுறாக்கள் குறித்த விழிப்புணர்வுக்கான தினம் | "நெருக்கடியில் இருக்கும் சுறாக்கள் - மத்திய தரைக் கடலுக்கான நடவடிக்கைக்கான அழைப்பு" |
| 15 | உலக இளைஞர் திறன் தினம் | "வாழ்க்கை மற்றும் பணிக்காக கற்றுக் கொள்ள பயிற்சி கொள்" |
| 17 | காமராஜரின் 117வது பிறந்த தினம் | 2006 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கலைஞர் காமராஜரின் பிறந்த தினமாக ஜுலை 15 ஆம் தேதியை "கல்வி வளர்ச்சி தினமாக" அறிவித்தார். |
| 17 | சர்வதேச நீதி தினம் | இத்தினம் சர்வதேசக் குற்றவியல் நீதியை ஊக்குவிப்பதையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC-International Criminal Court)பணியை ஆதரிப்பதையும் நோக்கமாகக் |

| | | |
|---|---|---|
| | | கொண்டுள்ளது. |
| 18 | நெல்சன் மண்டேலா தினம் | இந்தத் தினம் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளினால் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது. முதலாவது ஐக்கிய நாடுகள் மண்டேலா தினம் 2010 ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று அனுசரிக்கப்பட்டது. |
| 20 | நிலவில் கால் பதித்ததின் 50வது ஆண்டு | இது நாள் வரை, நிலவில் மனிதர்களை வெற்றிகரமாக தரையிறக்கும் திட்டத்தை மேற்கொண்ட ஒரே நாடு அமெரிக்கா ஆகும். |
| 20 | சர்வதேச செஸ் (சதுரங்க) தினம் | FIDE தொடங்கப்பட்டதைக் கௌரவிப்பதற்காக 1966 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதி முதல் சர்வதேச செஸ் தினம் அனுசரிக்கப்படுகின்றது. |
| 23 | தேசிய ஒளிபரப்பு தினம் | "பகுஜன் ஹிட்டாயா பகுஜன் சுக்காயா" |
| 24 | வருமான வரி தினம் | 1860 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதி சர் ஜேம்ஸ் வில்சனால் இந்தியாவில் முதன்முறையாக வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 26 | சர்வதேச சதுப்பு நிலக் காடுகள் பாதுகாப்பு தினம் | "ஒரு தனித்துவ, சிறப்பு மிக்க மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழலமைப்பாக" இருப்பதின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது. |
| 27 | மத்திய ஆயுதக் காவல் படை தினம் | இது 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதி CRPFசட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்பு தற்பொழுதைய பெயரான CRPFஎன்று அதற்கு பெயர் மாற்றப்பட்டது. |
| 28 | உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் | "கல்லீரல் அழற்சி நோயை ஒழிப்பதில் முதலீடு செய்" |
| 28 | உலக இயற்கை பாதுகாப்புத் தினம் | இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இயற்கையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்த மக்களுக்குப் புரிதலை ஏற்படுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| 30 | ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம் | "ஆள் கடத்தல்: உன்னுடைய அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்க குரல் கொடு" |
| 31 | உலக வனச் சரகர் தினம் | வனச் சரகர்களின் துணிச்சலுக்கும் தைரியத்திற்கும் நன்றி தெரிவிப்பதற்காகவும் வனச் சேவையின் போது இறந்த வனச் சரகர்களின் தியாகத்தை நினைவில் கொள்வதற்காகவும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது. |